பொழிவு - 19
குவிப்பு - 07
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
யூலை - 2016
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 167 / News / 2016"

## மடு அன்னையின் பூர்வீக வதிவிடமாகிய மாந்தை மாதா ஆலயத்தைப் பாதுகாப்பது எமது கடமை

### மாந்தை மாதா ஆலயம் தொடர்பான இன்றைய நிலையை விளக்கி மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியம் அறிக்கை



இந்து சமயம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதனை யாரும் மறுக்கவில்லை, மறுக்கவும் முடியாது. இந்து மக்களின் பாவனைக்காக பல நூறு ஏக்கர் காணிகள் உள்ளன. பல்வேறு மடங்களும் இந்து மக்கள் குடியிருப்புக்களும் பல்வேறு தொழில்களும் உள்ளன. இவற்றை நாங்கள் யாரும் எதிர்க்கவோ மறுக்கவோ இல்லை. ஆனால் ஒப்பீட்டளவில் ஒரு சிறு துண்டுக் காணியில் எமது ஆலயம், அதுவும் 500 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பதை இவர்கள் ஏன் எதிர்க்க வேண்டும்? எமது திருவிழா மட்டும், வாராந்த சில மணிநேர சமய நிகழ்வுகள் மாத்திரம் இவ்வாலயத்திற்கான காணித்துண்டில் அமைதியாகவே நடைபெறுகின்றன.

எனவே மடு அன்னையின் பூர்வீக வதிவிடமாகிய மாந்தை மாதா ஆலயத்தைக் காத்துப் பராமரித்துவருவது எமது கடமை என்பதை வற்புறுத்திக்கூறுகின்றோம். அடுத்தவர்களின் உரிமையை அபகரிக்க நாம் முயலவில்லை. எமது உரிமைகளை பாதுகாக்க மட்டுமே நாம் செயற்படுகின்றோம் என்பதை சம்மந்தப்பட்ட சகோதரர்களுக்கு அன்புடனும் அமைதியுடனும் தெரிவிக்கின்றோம். (இந்த அறிக்கையின் முழு வடிவத்தை 4ஆம் பக்கம் பார்க்கவும்)


## சிறப்பாக இடம்பெற்ற மடு ஆடித் திருவிழா



மடுத்திருத்தலத்தின் ஆடிமாதத் திருவிழாத் திருப்பலி கடந்த ஆடி மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை, யாழ் மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்றாடி ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். (தொடர்ச்சி 7ஆம் பக்கம்

## அந்தோனியார்புரத்தில் புதிய பங்குமனை, ஆலய முகப்பு திறந்துவைக்கப்பட்டது





அந்தோனியார்புரம் பங்கின் புதிய பங்குமனை மற்றும் புதிய ஆலய முகப்பு ஆகியவை கடந்த யூன் மாதம் 13ஆம் திகதி புனித அந்தோனியார் திருவிழா அன்று திறந்துவைக்கப்பட்டது.

அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு இடம்பெற்ற புனித அந்தோனியார் திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுக்க வருகை தந்த மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் முதலில் வரவேற்று அழைத்துவரப்பட்டார். தொடர்ந்து திருவிழாத் திருப்பலி இடம்பெற்றது. திருப்பலியைத் தொடர்ந்து காலை 9.00 மணியளவில் புதிய பங்குப் பணிமனையை ஆயர் அவர்கள் திறந்துவைத்தார். தொடர்ந்து புதிய ஆலயத்தின் முகப்பில் புனித அந்தோனியார் திருச்சுருபமும் ஆயர் அவர்களினால் ஸ்தாபகம் செய்யப்பட்டது.

கடந்த வருடம் செப்ரம்பர் மாதம் புதிதாக உருவாக்கப்பட்ட இப்பங்கின் முதல் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்ட அருட்பணியாளர் ஏ. றஜனிகாந்த் அடிகளார் பங்குப்பணிமனை மற்றும் ஆலயக் கட்டுமானப் பணிகளைத் துரிதமாக முன்னெடுத்து வந்துள்ளார். இன்னும் இப்புதிய பங்கை அவர் வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்கின்றமை குறிப்பிடத்துக்கது.

## அருட்தந்தை இக்னேசியஸ் அடிகளாரின் குணமளிக்கும் நற்செய்திப் பெருவிழாக்கள்




தமிழ் நாட்டில் இருந்து வருகைதந்திருந்த இயேசுசபைக் குருவான அருட்தந்தை வி. இக்னேசியஸ் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களில் குணமளிக்கும் நற்செய்தி வழிபாடுகளை முன்னெடுத்தார். கடந்த யூன் மாதம் 24ஆம் திகதி தொடக்கம் யூலை மாதம் 3ஆம் திகதி வரை இந்த வழிபாடுகள் இடம்பெற்றன.

கற்கடந்த குளம் பங்குத்தந்தை அருட்திரு. எஸ். மாக்கஸ் அடிகளார் இந்த வழிபாடுகளுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். இந்த நற்செய்திப் பெருவிழாக்கள் பற்றிய முழு விபரத்தை 3ஆம் பக்கத்தில் காணலாம்.

## சுதேச குருக்கள் துறவியர் தினம்

**Indigenous Clergy / Religious Sunday**

**யூலை 31**




**மையப்பொருள் :**

"கடவுளுடைய இரக்கத்தின் மேய்ப்பர்களாக இருக்க நீங்கள் தயாரா?"

**"Are you ready to be the compassionate Shepherds of the Lord?"**

நமக்குப் பணிபுரியும் சுதேச (சொந்த நாட்டை, பிரதேசத்தைச் சேர்ந்த) குருக்கள் துறவியரின் இறை அழைத்தலுக்காகச் செபிக்கவும், இவர்களின் உருவாக்கத்திற்காக தாராள நன்கொடைகளை வழங்கவும் இறைமக்களாகிய நாம் முன்வருவோமாக!

## திருச்சபையில் பெண் தியாக்கோன்கள் குறித்து திருத்தந்தை நீண்ட கலந்துரையாடல் விரைவில் குழு அமைக்கப்படும்

கத்தோலிக்கத் திருச்சபையில் பெண் தியாக்கோன்களை மீண்டும் நியமிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைப்பதற்குத் தான் விரும்புவதாக, திருஅவையில் பெண்களின் பங்கு குறித்த ஒரு நீண்ட கலந்துரையாடலில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

ஏறத்தாழ தொள்ளாயிரம் பெண் துறவுசபைத் தலைவர்களைச் சந்தித்து, துறவு வாழ்வில் பெண்களின் மறைப்பணியும், திருப்பணியும் பற்றி அத்தலைவர்களுடன் ஒன்றரை மணி நேரம் நடத்திய நீண்ட கலந்துரையாடலின்போது திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

பெண் தியாக்கோன்களின் வரலாறு உட்பட பல்வேறு சிக்கலான கேள்விகளுக்குப் பதிலளித்த திருத்தந்தை, தொடக்ககாலத் திருஅவையில் பெண்களின் பங்கு குறித்த புரிதல் தெளிவில்லாமல் இருக்கின்றது என்றும், இந்த விவகாரம் குறித்து ஆராய்வதற்கு ஒரு குழு அமைப்பது பயனுள்ளதாக அமையும் என்றும் கூறினார்.

திருஅவையின் தீர்மானம் எடுக்கும் நிலைகளில் பெண்களின் பங்கு அதிகரிப்பதைத் தான் பார்க்க விரும்புவதாகவும், தீர்மானங்கள் எடுக்கவும் அவற்றைச் செயல்படுத்தவும் பெண்களின் பங்கு மிகவும் முக்கியம் எனவும் திருத்தந்தை கூறினார்.

திருப்பலியில் பெண்கள் மறையுரையாற்றுவது குறித்த வாய்ப்புகள்பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த திருத்தந்தை, அர்ப்பண வாழ்வு வாழ்வோரோ அல்லது பொதுநிலைப் பெண்களோ மறையுரையாற்றக்கூடிய பிற திருவழிபாடுகளைப் பிரித்துப் பார்ப்பது முக்கியம். ஆனால் திருப்பலியில் ஆற்றப்படும் மறையுரை, அருள்பணியாளரின் பங்கோடு தொடர்புடையது எனவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## குரு என்பவர் யார்?

யூலை மாதம் 31ஆம் திகதி சுதேச குருக்கள், துறவியர் தினம் கொண்டாடப்படுகின்றது. சுதேச குருக்கள், துறவியர் என்றால் நமது நாட்டில் இருந்து, நமது மண்ணில் இருந்து உருவாகிய குருக்கள் துறவியரைக் குறிக்கும். எனவே இச்சந்தர்ப்பத்தில் குருத்துவம் தொடர்பான சில விவிலிய. இறையியல் சிந்தனைகளை முன்வைப்பது பொருத்தமாகும்.

குருக்கள் துறவியருடைய அடையாளம் என்ன? குருக்கள் துறவியருடைய முகவரி என்ன? அவர்களுடைய தனித்தன்மை என்ன? போன்ற கேள்விகள் இன்று பலராலும் முன்வைக்கப்படுகின்றன. கத்தோலிக்க வட்டத்திற்குள் இருந்து மட்டுமல்ல, கிறிஸ்தவ சூழலில் - ஏன் பல்சமயச் சூழலிலும்கூட இந்தக் கேள்விகள் இன்று முனைப்புப்பெற்று நிற்கின்றன.

### இயேசுவைக் குறித்த விமர்சனங்கள்

இயேசு யார் என்பதைக் குறித்து இரண்டு வகையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஒன்று ஊனக் கண்ணால் பார்க்கப்பட்ட விமர்சனம், இரண்டு விசுவாசக் கண்ணால் பார்க்கப்பட்ட விமர்சனம். "இவர் தச்சனுடைய மகன் அல்லவா?" என்பது ஊனக் கண்ணால் பார்க்கப்பட்ட விமர்சனம். "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்பது விசுவாசக் கண்ணால் பார்க்கப்பட்ட விமர்சனம். எப்படியாக இயேசுவைக் குறித்து முரண்பட்ட பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டனவோ அதேபோன்று குருக்கள், துறவியரைக் குறித்தும் அன்று தொடக்கம் இன்றுவரை பல கருத்துக்கள், விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

### ஒரு குரு என்பவர் யார்?

குருத்துவ துறவற அழைப்பு, வாழ்வு, பணி இவற்றைக் குறித்து பல தெளிவின்மை உள்ளன. குருத்துவ, துறவற அழைத்தலை, வாழ்வை, பணியை புரிந்துகொள்வதில் பல சிக்கல்கள் இன்று உள்ளன. ஒரு குரு என்பவர் யார்? என்ற கேள்வி நம் அனைவருடைய அக்கறைக்கும் கரிசனைக்கும் உரிய முக்கிய கேள்வியாக மேலெழுந்து நிற்கின்றது.

ஒருவரை நாம் இரண்டு வகையாக நோக்க முடியும். ஒன்று அவருடைய **இயல்பு** (Being). மற்றது அவருடைய **செயல்** (Doing). இந்த இரண்டிலும் ஒருவருடைய இயல்பு (Being) - அவருடைய செயலைவிட (Doing) முக்கியமானது. ஏனென்றால் ஒருவருடைய இயல்பு எத்தகையதோ அத்தகைய இயல்பிலிருந்துதான் ஒருவருடைய செயல்களும் பிறக்கின்றன. அதாவது இயல்பிலிருந்து செயல் பிறக்கின்றதேயன்றி, செயலில் இருந்து இயல்பு பிறப்பதில்லை. குருத்துவம் பற்றிய இறையியலைப் புரிந்துகொள்வதற்கு இந்த அடிப்படையான மெய்யறிவு அவசியமானதாக இருக்கின்றது. **எனவே ஒரு குரு என்ன செய்கின்றார்? என்ன பணி செய்கின்றார்? என்பதைவிட ஒரு குரு யாராக இருக்கின்றார்? என்ற கேள்வி முக்கியமானது.**

### தன்னைப்பற்றிய இயேசுவின் கருத்துக்கணிப்பு

தன்னைப்பற்றிய ஒரு கருத்துக் கணிப்பை, சுய ஆய்வை மேற்கொண்ட இயேசு, "நான் என்ன செய்கின்றேன் என்று மக்கள் சொல்கின்றார்கள்?" என்று கேட்கவில்லை. மாறாக, "நான் யார் என்று மக்கள் சொல்கின்றார்கள்" என்றுதான் கேட்டார். நான் என்ன செய்கின்றேன் என்பதைவிட நான் யாராக இருக்கின்றேன் என்பது முக்கியமானது.

குருத்துவம் பற்றிய இறையியலை (Theology of Priesthood) புரிந்துகொள்வதற்கு முன்னர், கிறிஸ்துவை – கிறிஸ்து இயலை (Christology) நாம் புரிந்துகொள்ள வேண்டும். யோவான் நற்செய்தியில் இயேசு தனது இயல்பை அதாவது தான் யார் என்பதைத்தான் அதிகம் வலியுறுத்துகின்றார். "நான் வாழ்வுதரும் தண்ணீராய் இருக்கிறேன்", "நான் உயிர்தரும் உணவாய் இருக்கிறேன்", "நான் உலகின் ஒளியாய் இருக்கிறேன்", "நான் நல்ல ஆயனாய் இருக்கிறேன்", "நான் வழியும் உண்மையும் உயிருமாய் இருக்கிறேன்" என்றுதான் இயேசு சொன்னார். "நான் என்ன செய்கின்றேன்" என்று சொல்லவில்லை. "நான் யார்" என்றுதான் சொன்னார்.

'இருக்கிறேன்' என்ற சொல் இறைத்தன்மையைச் சுட்டும் சொல். "இருக்கின்றவராக இருக்கின்றவர் நாமே" (I am who I am) என்று இறைவன் தன்னை பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியதை நாம் அறிவோம்.

### குருக்கள் மட்டில் இறைமக்களின் பொறுப்பு

இறைமக்கள் தமது குருக்களின் தனித்தன்மையை விளங்கிக்கொள்வது முக்கியமானது. ஒரு குரு தனக்குரிய குருத்துவ இயல்பை வாழவும், தனக்குரிய பணிகளைச் செய்யவும் இறைமக்கள் பக்கபலமாக, துணையாக இருக்க வேண்டும். கேள்விகளும், விமர்சனங்களும் மலிந்துள்ள இன்றைய சூழ்நிலையில் மக்களிடமிருந்து மக்களுக்காக வந்த குருக்களை இறைமக்கள் அன்புசெய்ய வேண்டும், தாங்கிக்கொள்ள வேண்டும், அவர்களுக்காகச் செபிக்க வேண்டும்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
அருட்பணியாளர் தமிழ் நேசன்,
பதிப்பாசிரியர், மன்னா

# அவிதப்பர் அடிகளாரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்
## ஆலயப் போட்டிக்கோவுக்கு அடிக்கல் நாட்டலும் நினைவுத் திருப்பலியும்







மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர் அருட்திரு. விக்ரன் அவிதப்பர் அடிகளாருடைய ஒரு வருட நினைவு இரங்கல் திருப்பலி கடந்த யூன் மாதம் 22ஆம் திகதி மாலை 6.00 மணியளவில் பிச்சைகுளம் தூய செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அருட்பணி. ஏ. இராயப்பு தலைமையில் இடம்பெற்ற இத்திருப்பலியில் ஏராளமான அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், இறைமக்கள் பங்கேற்றனர். திருப்பலியின்போது அருட்பணி. றெஜினோல்ட் மறையுரையாற்றினார். திருப்பலியின் நிறைவில் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன. அருட்பணி. எஸ். வசந்தகுமார், அருட்பணி. ஏ. இராயப்பு மற்றும் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோர் உரையாற்றினர்.

திருப்பலிக்கு முன்னதாக அருட்தந்தையின் நினைவாக ஆலயப் போட்டிக்கோவுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. ஆயர் அவர்களும் அவிதப்பர் அடிகளாருடைய தாயாரும் அடிக்கல்லை நாட்டினர். திருப்பலி முடிவில் அருட்தந்தை அவிதப்பரின் இல்லத்தில் இராவுணவு வழங்கப்பட்டது.

# நோபேட் அடிகளாரின் 7ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அமரர் அருட்பணியாளர் சீமான்பிள்ளை நோபேட் அடிகளாரின் 7ஆம் ஆண்டு நிறைவு நினைவுத் திருப்பலி கடந்த யூன் மாதம் 20ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு சூரியகட்டைக்காடு புனித செபஸ்தியார் ஆலயத்தில் இடம்பெற்றது.

அருட்பணி. ஏ. ஞானப்பிரகாரசம் தலைமையில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. எஸ். மாக்கஸ் அழகான மறையுரை ஆற்றினார். முப்பதிற்கும் அதிகமான குருக்கள் இதில் கலந்துகொண்டனர். கட்டைக்காட்டுப் பங்குத்தந்தை அருட்பணி. டெஸ்மன்ட் குலாஸ் இந்நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்.



# மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2016
### ஆடி

2. மடுமாதா திருவிழா
3. இயேசுவின் திரு இருதயப் பெருவிழா - சிதம்பரபுரம்
6. தூய செபமாலை அன்னை திருவிழா - பாலையடிப்புதுக்குளம் மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை மன்னார் ஆயராக நியமனம் பெற்ற தினம் (1992)
10. தூய ஆரோக்கிய அன்னை திருவிழா - நானாட்டான் பங்குத் திருவிழா. புனித தோமையார் திருவிழா - முருங்கன் கன்னாட்டி
13. புனித செபஸ்தியார் திருவிழா - பீடியாபாம்
15. புனித மரியகொறற்றி திருவிழா - பெரிய பண்டிவிரிச்சான்
16. தூய கார்மேல் அன்னை திருவிழா - ஆவணம், அளவக்கை, இளமருதங்குளம், பொற்கேணி, நாகர் இலுப்பக்குளம். தூய கப்பலேந்தி மாதா திருவிழா - பெரிய நொச்சிகுளம். குழந்தை இயேசு திருவிழா குழந்தையேசுபுரம் (மன்னார்)
17. தூய கார்மேல் அன்னை திருவிழா - பறப்பாங்கண்டல்.
24. தூய புதுமை மாதா - குகன்நகர்
25. புனித யாகப்பர் திருவிழா - பறப்பாங்கண்டல், விடத்தல்தீவு, கொக்குப்படையான், கட்டுக்காரன் குடியிருப்பு, முருங்கன் கமம், நறுவிலிக்குளம், சிறுநீலாசனை, சிவபுரம்
26. புனித அன்னம்மாள் திருவிழா வங்காலை, பூவரசன்குளம்
31. சுதேச குருக்கள் துறவியர் தினம்

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்


அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்தைத் துண்டாடும் முயற்சிக்கு
# திருத்தந்தை பிரான்சிஸ் கடும் எச்சரிக்கை

பொது வாக்கெடுப்பு மூலம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தைத் துண்டாடுவதற்கு எதிராகத் திருத்தந்தை பிரான்சிஸ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கடந்த யூன் 24ஆம் திகதி பிரிட்டன் வெளியேறியது. இதனால் ஐரோப்பியப் பிராந்தியத்தில் நிச்சயமற்ற தன்மை நிலவிவருகிறது.

பொது வாக்கெடுப்பு மூலம் பிரிட்டன் வெளியேறியுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தைத் துண்டாடுவதற்கு எதிராக திருத்தந்தை பிரான்சிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் திருத்தந்தை கூறியதாவது: புதுவகையான யூனியனை நாம் அமைக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பெரிய அமைப்பில், அதிகப்படியான நாடுகளைக் கொண்ட யூனியன் இயங்குவதற்கு, ஏதோ ஒரு சிக்கல் நிலவிவருகிறது.

இந்தப் பொது வாக்கெடுப்பை தொடர்ந்து ஸ்கொட்லாந்து, ஸ்பெயினின் கடலோனியா உள்ளிட்டவை பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தும் அபாயம் உள்ளது. மேலும் ஐரோப்பிய நாடுகளின் துண்டாடலுக்கும் இது வழிவகுக்கும்.

புதுமையான படைப்பாற்றல் மற்றும் யூனியனில் உள்ள



நாடுகளுக்கு அதிக சுதந்திரம் வழங்குவதன் மூலம் நிலையற்ற தன்மையை மீட்டெடுக்க வேண்டுமெனவும் அவர் கூறினார்.

## உயர் கல்வியை மேற்கொள்ள
## அருட்பணி. நெவின்ஸ் பீரிஸ் உரோம் பயணம்



மன்னார் மறைமாவட்டத்தின் இளைஞர் மற்றும் திருவிவிலிய ஆணைக்குழுவின் இயக்குனராகப் பணியாற்றிய அருட்பணியாளர் நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் அவர்கள் தனது உயர் கல்வியை மேற்கொள்வதற்காக கடந்த யூன் மாதம் 27ஆம் திகதி உரோம் பயணமானார். இவருக்கு மன்னாவின் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

## ஒரு மாதக் கருத்தமர்வில் பங்கெடுக்க
## அருட்பணி. ஞானப்பிரகாசம் உரோம் பயணம்



மன்னார் மறை மாவட்டத்தின் சிறிய குருமட அதிபர் அருட்பணியாளர் ஏ. ஞானப்பிரகாசம் அவர்கள் குருமட அதிபர்களுக்கான ஒரு மாத கருத்தமர்வில் பங்கெடுப்பதற்காக கடந்த யூன் மாதம் 27ஆம் திகதி உரோம் பயணமானார். இவருக்கு மன்னாவின் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

## அருட்பணியாளர்கள் ஆரோக்கியம், லக்கோன்ஸ்
## இந்தியா பயணம்





மன்னார் மறைமாவட்டத்தின் அன்பிய மற்றும் திருவிழாபாட்டு இயக்குனர் அருட்பணி. ஆரோக்கியம் மற்றும் ஓமந்தைப் பங்குத்தந்தை அருட்பணி. லக்கோன்ஸ் பிகிறாடோ ஆகியோர் திருவழிபாடு தொடர்பான மூன்று மாதக் கற்கைநெறியில் பங்கெடுப்பதற்காக அண்மையில் இந்தியாவுக்குச் சென்றுள்ளர்.

இவர்களுக்கு மன்னாவின் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

## பங்குச் செய்திகளை அனுப்பிவையுங்கள்!

உங்கள் பங்கில் நடைபெறும் முக்கிய செய்திகளை எழுதி பங்குத்தந்தையின் அனுமதியுடன், புகைப்படங்களுடன் மின்னஞ்சல் ஊடாக மன்னாவுக்கு அனுப்பிவையுங்கள். எமது மின்னஞ்சல் முகவரி: nesanmnr@gmail.com - மன்னா நிர்வாகம்

## ஆயர் அபிசேக தின வாழ்த்துக்கள்



மன்னார் மறைமாவட்டத்தின் இழைப்பாறிய ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட (1992) 24வது ஆண்டு நிறைவை யூலை மாதம் 6ஆம் திகதி நினைவுகூர்கின்றார். ஆயர் அவர்களுக்கு மன்னாவின் நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்குத் தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். - மன்னா நிர்வாகம்.

## துயர் பகிர்கின்றோம்!

அண்மையில் இறையடி சேர்ந்த எமது அன்புக்குரிய குருக்களின் அருமையான உறவுகளை நினைவுகூர்கின்றோம். இவர்களின் பிரிவால் துயருறும் குடும்பங்களுக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் இறந்த இவர்களின் ஆன்மாக்கள் இறைவனின் நித்திய அமைதியில் மகிழ்ந்திருக்கச் செபிக்கின்றோம்.

**திருமதி பாக்கியவதி பாக்கியநாதர் - மன்னார்**

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை பாக்கியநாதர் அலோசியஸ் அவர்களின் அன்புத் தாயார் திருமதி பாக்கியவதி பாக்கியநாதர் அவர்கள் கடந்த மே மாதம் 25ஆம் திகதி அன்று புத்தளத்தில் இறையடி சேர்ந்தார். அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கடந்த மே மாதம் 28ஆம் திகதி இடம்பெற்றது. அமெரிக்காவில் பணிபுரியும் அருட்தந்தை அலோசியஸ் அடிகளார் தனது தாயாரின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டார்.

**திரு. பாவிலு ஆசீர்வாதம் - மன்னார்**

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை நேசன் அடிகளாரின் அன்புச் சகோதரர் திரு. பாவிலு ஆசீர்வாதம் அவர்கள் கடந்த யூன் மாதம் 18ஆம் திகதி இறையடி சேர்ந்தார். அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி 19ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்றது.

## அருட்தந்தை வி. இக்னேசியஸ் அடிகளாரின்
## நற்செய்திப் பெருவிழாக்கள்

அருட்தந்தை வி. இக்னேசியஸ் (சே.ச.) (தமிழ்நாடு - இந்தியா) அவர்களினால் மன்னார் மறைமாவட்டத்தில் பல பங்குகளில் குணமளிக்கும் நற்செய்தி வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு :

24.06.2016 வெள்ளி மாலை 5.30 மணி :
புனித செங்கோல் மாதா ஆலயம் - அரிப்பு

25.06.2016 சனி காலை 9.00 மணி : புனித சவேரியார் பெண்கள் கல்லூரி - மன்னார் (மன்னார் மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கு)

25.06.2016 சனி மாலை 5.30 மணி :
புனித ஆனாள் ஆலயம் - வங்காலை

26.06.2016 ஞாயிறு மாலை 5.30 மணி :
புனித வெற்றிநாயகி ஆலயம் - பேசாலை

27.06.2016 திங்கள் மாலை 5.30 மணி :
புனித இராயப்பர் ஆலயம் - உயிலங்குளம்

28.06.2016 செவ்வாய் மாலை 5.30 மணி :
புனித அந்தோனியார் ஆலயம் - வவுனியா

29.06.2016 புதன் மாலை 5.30 மணி :
புனித சவேரியார் ஆலயம் - சிலாவத்துறை

30.06.2016 வியாழன் மாலை 5.30 மணி :
மருதமடு திருத்தலம் - மடு

01.07.2016 வெள்ளி மாலை 5.30 மணி :
புனித சூசையப்பர் ஆலயம் - கற்கிடந்தகுளம்

02.07.2016 சனி மாலை 5.30 மணி :
புனித செபஸ்தியார் பேராலயம் - மன்னார்

03.07.2016 ஞாயிறு மாலை 5.30 மணி :
புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் - நானாட்டான்

## முதியோர் சங்கங்கள் சமாசத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு





மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவானது கடந்த யூன் மாதம் 15ஆம் திகதி மன்னார் குடும்ப உளவளத்துணை நிலையத்தின் கேட்போர் கூடத்தில் சமாசத்தின் நடப்பு நிர்வாகத்தின் தலைவர் திரு. எஸ். எஸ். லெம்பேட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்புப் பொதுக்கூட்டத்தின்போது இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை, மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்கள் சமாசத்தின் இயக்குனர் அருட்பணி. அல்பன் இராஜசிங்கம் (அமதி), தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி. தி. நவரட்ணம் ஆகியோரும் சமூகமளித்திருந்த இச்சிறப்புக் கூட்டத்திற்கு மறைமாவட்டத்தின் சுமார் 26 பங்குகளில் இயங்கிவரும் முதியோர் சங்கங்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர். அத்துடன் அருட்பணியாளர்கள் நவரட்ணம் (தலைமன்னார்), பெனோ அலெக்ஸ்சாண்டர் சில்வா (பேசாலை), அருள்ராஜ் குரூஸ் (நானாட்டான்), லக்சன் சில்வா (வேப்பங்குளம்), சுகுணராஜ் குரூஸ் (தாழ்வுபாடு) ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. அருட்பணி. நவரட்ணம் அடிகளார் இந்நிர்வாகிகள் தெரிவுக்குத் தலைமைதாங்கி யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு, சனநாயக அடிப்படையில் தெரிவுகளை நடாத்தி முடித்தார். மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் தெரிவுகளையும் உறுப்பினர்கள் ஏகமனதாய் ஏற்றுக்கொண்டனர்.

**புதிதாகத் தெரிவானோர் பற்றிய விபரம்:**

தலைவர்: திரு. ச. அந்தோனி மிராண்டா. செயலர்: திரு. ஆனந்தம் றோச். பொருளர்: திரு. அ. வெ. ரெஜினோல்ட் பீரிஸ். உப தலைவர்கள்: திரு. அந்தோனிமுத்து, திரு. போஜியா குலாஸ். உபசெயலர்: திரு. காணிக்கைநாதன் குரூஸ். உள்ளக கணக்காய்வாளர்கள்: (1): திரு. லூயிஸ் ரொசாறியோ குரூஸ். (2) திரு. பர்ணபாஸ் எமில் குலாஸ்.

தமது பணிகளைச் செவ்வனே ஆற்றியமைக்காகப் பதவிவிலகிச் செல்லும் நிர்வாகிகளுக்கு குருமுதல்வரும், இயக்குனரும், புதிதாய் தலைமைப்பதவியை ஏற்றுக்கொண்டவரும் மற்றும் ஏனையோரும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டனர். இறுதியில், குருமுதல்வரின் ஆசீர்வழங்கலுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

**தகவல்: திரு. ஜே. ஜே. எட்வேட்,**
**மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை மாதா ஆலயம் தொடர்பாக

## மன்னார் மறைமாவட்ட கத்தேலிக்க ஒன்றியத்தின் அறிக்கை

மாந்தை மாதா ஆலயம் தொடர்பாக கத்தோலிக்க மக்களின் இன்றைய நிலைப்பாட்டை விளக்கி மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியம் கடந்த யூன் மாதம் 25ஆம் திகதி ஊடக அறிக்கையொன்றை விடுத்திருந்தது. இதை ஞாயிறு திருப்பலியில் வாசிக்குமாறும் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை பங்குத்தந்தையர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். அந்த அறிக்கையின் முழு விபரத்தையும் கீழே காணலாம்.

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் சார்பில் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க மறை விசுவாசிகளுக்கு இறையாசி கூறி இவ்வமைப்பின் செயலாளர் விடுக்கும் அறிக்கை:

எமது கத்தோலிக்க திருமறையானது கி.பி. 1500 அளவில் எமது கீழைப் பிரதேச நாடுகளில் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்ற ஆரம்பித்தது. எமது மன்னார் மறைமாவட்டத்தில் மிகுந்த உத்வேகத்துடன் மக்கள் மத்தியில் கத்தோலிக்க மறை ஆரம்பகாலம் முதலே விசுவாச வித்து ஊன்றப்பட்டதால் எம் மக்களே இப்பிரதேசத்தின் ஆதிக்கிறீஸ்தவர்களாகியதுடன் கத்தோலிக்கர்களின் முன்னோடிகளாகவும் விளங்கினர். இதன் காரணமாக கத்தோலிக்கத் திருச்சபையால் மன்னார் தீவிலும் தீவை அண்டிய பெருநிலப்பரப்பிலும் 500 ஆண்டுகளுக்குமுன் கத்தோலிக்க தேவாலயங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் மிகப்பழமை வாய்ந்த திருத்தலங்களில் ஒன்றாக மாந்தை மாதா கோவில் தோன்றியது. இங்கு 1590ல் தேவதாயாரின் திருச்சொரூபம் ஸ்தாபிக்கப்பட்டு கத்தோலிக்கர்களின் வணக்க ஸ்தலமாக பிரபல்யம் அடைந்தது. ஆயினும் பின்னர் இப்பிரதேசத்தை கைப்பற்றிய ஒல்லாந்தர் கத்தோலிக்க தேவாலயங்களை சேதமாக்கி கத்தோலிக்கர்களையும் துன்புறுத்தினர். இந்நடவடிக்கையால் மக்கள் ஒன்றுசேர்ந்து மாந்தையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேவதாயின் திருச்சொரூபத்தை எடுத்துச்சென்று பாதுகாப்பாக மடுத்தலத்தில் ஸ்தாபித்தனர். இதன் பின்னர் மீண்டும் அதே இடத்தில் 1949ல் சிறிய ஆலயம் கட்டியெழுப்பப்பட்டது.

இந்நிலையில் இவ்விடத்தில் ஆலயம் எழுப்பப்பட்டதை பொறுக்கமுடியாத இந்து சம்மேளனம் தமது உயர்மட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி எமது புனித மறையை அழித்துவிட முயல்கிறார்கள். இதன் ஒரு பகுதியாக 500 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுச் சிறப்புப்பெற்ற மாந்தை மாதா ஆலயத்திற்கு சுமார் 3 ஏக்கர் அளவிலான ஒரு சிறு காணித்துண்டை அண்மையில் மன்னார் ஆயருக்கு வழங்க காணி ஆணையாளர் உத்தரவு இட்டார். உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டு அரச வர்த்தமானியில் பிரசுரித்தபின் பிறப்பிக்கப்பட்ட இவ்வுத்தரவை எதிர்த்து துரதிஸ்ரவசமாக இந்து சம்மேளனம் என்னும் அமைப்பினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். குறிப்பாக "மன்னார் ஆயரையும் கூட்டமைப்பு கிறிஸ்தவ எம்பிக்களையும் கண்டிக்கின்றோம்", "திருக்கேதீஸ்வர ஆலயத்தில் அத்துமீறி வைத்துள்ள மாதா சிலையை அகற்றுங்கள்", "சிவ பூமி மன்னாரை மறைபூமி ஆக்காதே" போன்ற சுவர் ஒட்டிகளை கொழும்பு, கண்டி, வவுனியா மற்றும் பிரதான பகுதிகளில் ஒட்டிவருகின்றார்கள். இது அப்பட்டமான பொய் என்பதுடன் அப்பாவி இந்துமக்கள் மத்தியில் மதத் துவேசத்தைத் தூண்டும் முயற்சியாகக் காணப்படுவதால் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாம் எந்தவிதத்திலும் இவர்களுக்கு எதிராகவோ இந்துமதச் செயற்பாடுகளுக்கு எதிராகவோ நடந்துகொள்ளவில்லை. எமது மதச்சடங்கு நிகழ்வுகள் யாவும் சிறிய வரையறுக்கப்பட்ட மாந்தைச்சந்திக் காணியில் மட்டுமே நடைபெறுகின்றன.

இந்து சமயம் மிகவும் தொன்மைவாய்ந்தது என்பதனை யாரும் மறுக்கவில்லை, மறுக்கவும் முடியாது. அவர்கள் பாவனைக்காக பல நூறு ஏக்கர் காணிகள் உள்ளன. பல்வேறு மடங்களும், இந்து மக்கள் குடியிருப்புக்களும், பல்வேறு தொழில்களும் உள்ளன. இவற்றை நாங்கள் யாரும் எதிர்க்கவோ மறுக்கவோ இல்லை. ஆனால் ஒப்பீட்டளவில் இச்சிறுதுண்டுக்காணியில் எமது ஆலயம், அதுவும் 500 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பதை இவர்கள் ஏன் எதிர்க்க வேண்டும்? எமது திருவிழா மட்டும் வாராந்த சில மணிநேர சமய நிகழ்வுகள் மாத்திரம் இவ்வாலயத்திற்கான காணித்துண்டில் அமைதியாகவே நடைபெறுகின்றன.

எனவே மடு அன்னையின் பூர்வீக வதிவிடமாகிய மாந்தை மாதா ஆலயத்தைக் காத்துப் பராமரித்து வருவது எமது கடமை என்பதை வற்புறுத்திக் கூறுகின்றோம். அடுத்தவர்களின் உரிமையை அபகரிக்க நாம் முயலவில்லை. எமது உரிமைகளைப் பாதுகாக்க மட்டுமே நாம் செயற்படுகின்றோம் என்பதை சம்மந்தப்பட்ட சகோதரர்களுக்கு அன்புடனும் அமைதியுடனும் தெரிவிக்கின்றோம்.

**- தே. பி. சிந்தாத்துரை, செயலாளர்**
**மன்னார் மாவட்ட கத்தேலிக்க ஒன்றியம்.**

## தென்னிலங்கை மீனவர்களின் வருகையால் மன்னார் மாவட்ட மீனவர்களுக்குப் பாதிப்பு

தென்னிலங்கை மீனவர்களின் வருகை மன்னார் மாவட்டத்தில் பெரிய ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. அவர்களின் மிதமிஞ்சிய வருகையின் காரணமாக எமது கடல் வளம் முற்றாக அழிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என். எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது, வடமாகாண மீனவர்கள் முகம்கொடுக்கின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடியுள்ளோம். கூட்டத்தில் தென் பகுதி மீனவர்களின் வருகையும், அதேபோன்று தென்னிந்திய மீனவர்களின் வருகையும், இதனால் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

பிரச்சினைகளை எதிர்காலத்தில் எவ்வாறு தீர்த்துக்கொள்வது? கடற்றொழிலை எவ்வாறு மேம்படுத்துவது? என்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடினோம். தொடர்ச்சியாக நாங்கள் பேசிவரும் தென்னிந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து குறைந்த அளவில் பேசிக்கொண்டாலும், தென்னிலங்கை மீனவர்களின் வருகை இன்று மன்னார் மாவட்டத்தில் ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. தென்னிலங்கை மீனவர்களின் மிதமிஞ்சிய வருகையின் காரணமாக எமது கடல் வளம் முற்றாக அழிக்கப்படுகின்றது. அவர்களால் மேற்கொள்ளப்படும் தொழில் முறைகளின் மூலம் எனது மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். கடந்த காலங்களில் அவர்களால் மன்னார் கடற்கரைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கொட்டு வாடிகளை அகற்றிச்சென்றுள்ளனர். ஆனால் தற்போதைய காலத்தில் அவர்களால் அமைக்கப்படுகின்ற கொட்டு வாடிகள் அகற்றிச் செல்லப்படுவதில்லை. இதனால் கரைவலைத் தொழிலில் ஈடுபடும் எமது மீனவர்களுக்கு பெரிய இடையூறாகக் குறித்த கொட்டு வாடிகள் காணப்படுகின்றன. இவற்றை அகற்றுவது எவ்வாறு? எதிர்காலத்தில் மீனவர்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுப்பது எவ்வாறு? என பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ். மிராண்டா, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹர்மன் குமார, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அன்டனி ஜேசுதாஸ், மன்னார் மாவட்ட கிராமிய மீனவ சம்மேளனத்தின் தலைவர் ஜெஸ்டின் சொய்சா மற்றும் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வஞ்சியன்குளம் பங்கு ஆலயப் பராமரிப்பாளரின் 25 வருட யூபிலி விழா




வஞ்சியன்குளம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் "அப்பப்பா" எனப் பங்கு மக்களால் அன்பாக அழைக்கப்படுபவருமாகிய திரு. பிலிப்பு எலியாஸ் அவர்கள் 1991ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையும் வஞ்சியன்குளம் பங்கின் ஆலயப் பராமரிப்பாளராக அயராது பணிபுரிந்து வருகின்றார். ஆலயப் பராமரிப்புப் பணியில் 25 வருடங்களை நினைவுகூரும் இவரது சேவையைப் பாராட்டி வஞ்சியன்குளம், மாதிரிக்கிராமம், நறுவிலிக்கும், புதுக்கமம் ஆகிய ஆலயங்களை உள்ளடக்கியதான அனைத்து மக்களும் ஒன்றிணைந்து வஞ்சியன்குளப் பங்கில் கடந்த 26.06.2016 அன்று யூபிலி விழாவை முன்னெடுத்தனர். பங்குத்தந்தை லோ. ஞானதிக்கம் அடிகளார் இவ்விழாவுக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியிருந்தார்.

இவ்விழாவினைச் சிறப்பிக்கும்முகமாக மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், வஞ்சியன்குளம் முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி எ. டெனி கலிஸ்ரஸ் அடிகளாரும், நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. எஸ். பரமதாஸ் அவர்களும், கிராம அலுவலர் திரு. ஜே. எம். பீரிஸ் ஆகியோரும் இந்நிகழ்விற்கு வருகை தந்திருந்தனர்.

முதலில் விழா நாயகனும் விருந்தினர்களும் வஞ்சியன்குளம் கிராம நுழைவாயிலில் இருந்து மாலை அணிவிக்கப்பட்டு அழைத்துவரப்பட்னர். காலை 7.30 மணிக்கு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் தலைமையில் நன்றிப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அன்றைய விழா நாயகன் ஆலயப் பராமரிப்பாளர் திரு. பிலிப்பு எலியாஸ் அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வஞ்சியன்குளம் பங்குத்தந்தையின் தலைமை உரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரால் யூபிலி நாயகன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அதன் பின்னர் ஆலய நிர்வாகத்தினரால் வாழ்த்துமடல்கள் வாசித்து வழங்கப்பட்டு விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. பின்னர் யூபிலி நாயகனின் நன்றியுரை இடம்பெற்றது. ஆலயப் பராமரிப்பாளரின் சேவையை நன்றியோடு நினைந்து அவரை கௌரவிக்கும் முகமாக பங்குமக்களின் பங்களிப்பினால் மின்வசதியில்லாமல் காணப்பட்ட அவரது இல்லத்திற்கான மின்னிணைப்பு வேலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு மின்னிணைப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக அனைவரும் அவரது இல்லத்திற்குச் சென்றனர். அப்போஸ்தலிக்க பரிபாலகர் வீட்டு மின்சாரப் பாவனையை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து யூபிலி விழா நிறைவுற்றது.

இவர் இப்பங்கிற்கு இறைவன் அழித்த பெரும் சொத்து. அயராது ஆலயப் பணிபுரியும் இவர் கடமையில் கண்ணியமானவர்.

**- பங்குத்தந்தை, பங்குமக்கள், ஆலய மேய்ப்புப்பணி சபை, புனித இராயப்பர் ஆலயம், வஞ்சியன்குளம்.**

## இளம் கண்டுபிடிப்பாளர் அமைப்பு மன்னாரில் அங்குரார்ப்பணம்

மன்னார் மாவட்ட இளம் கண்டுபிடிப்பாளர் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு மன்னார் உப்புக்குளத்திலுள்ள அலுவலகத்தில் கடந்த மே மாதம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சட்டத்தரணி எஸ். வினோதன், முசலி சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரி ஜெயகாந்தன், ஆசிரியை திருமதி. என். கணேசலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நிர்வாகக் குழு, பொதுக்குழு, நெறிப்படுத்தல் குழு என மூன்று குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன. நிர்வாகக் குழுவின் தலைவராக என். கவிவர்மன், செயலாளராக இந்துமதி, பொருளாளராக மிதுசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நெறிப்படுத்தல் குழுவிற்கு வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ. குணசீலன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம், சட்டத்தரணி எஸ். வினோதன், ஊடகவியலாளர் எஸ். ஆர். லெம்பேட், சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரி ஜெயகாந்தன், ஆசிரியை திருமதி என். கணேசலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*

# எழுத்தூர் பங்கில் திவ்விய நற்கருணை விழா

## முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையும் கலந்துகொண்டார்

மன்னார் எழுத்தூர் பங்கில் நடைபெற்ற திவ்விய நற்கருணை விழாப் பவனி வழிபாட்டு நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஓய்வுபெற்ற ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையும் கலந்துகொண்டு மக்களுடன் சேர்ந்து செபித்தார்.

கத்தோலிக்க திருச்சபையானது யூன் மாதத்தில் கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தம் திருவிழாவைக் கொண்டாடி வருவதை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்திலும் இவ்விழா பல பங்குகளில் இம்முறை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மன்னார் ஆயர் இல்லம் அமைந்திருக்கும் எழுத்தூர் பங்கிலும் கடந்த யூன் மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை திவ்விய நற்கருணை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எழுத்தூர் பங்குத்தந்தை அருட்பணி பி. யேசுராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நற்கருணைப் பவனியானது மன்னார் ஜீவபுரத்திலிருந்து அருட்பணி நேரு அடிகளாரின் வழிபாட்டுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து எழுத்தூர் வீதியில் அமைக்கப்பட்ட தரிப்பிடத்தில் அருட்பணி எஸ். நெவின்ஸ் பீரிஸ் அடிகளாரினால் நடத்தப்பட்ட வழிபாட்டுடன் பின் பட்டித்தோட்டம், கீரி ஆகிய பகுதிகளுக்கு இத்திவ்விய நற்கருணைப் பவனி சென்று, இறுதியில் கீரி நற்கருணை ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டுடன் நிறைவுபெற்றது.

இவ்வழிபாட்டு நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஓய்வுபெற்ற ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையுடன் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அ. விக்ரர் சோசை அடிகளார், ஆயரின் செயலாளர் அருட்பணி. முரளி அடிகளார் மற்றும் அருட்பணியாளர்களான இராஜநாயகம், சுகுணராஜா, ஜெராட் (அ.ம.தி) உட்பட அருட்சகோதரிகள், இறைமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனை பொது அமர்வும் புதிய நிர்வாகத் தெரிவும்



மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனையாளரின் "வேதசாட்சிகளின் இராக்கினி" கொமிசியப் பொதுக்கூட்டம் கடந்த யூன் மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை, மரியாயின் மாசற்ற இருதயத்தின் திருவிழா அன்று காலை 9.00 மணிக்கு குடும்பநலப் பணியகத்தில் மரியாயின் சேனை ஆன்ம இயக்குனர் அருட்பணி. எஸ்.கே.தேவராஜா அடிகளாரினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

அகில இலங்கை மரியாயின் சேனை செனாத்துஸ் தலைவர் திரு. பஸ்ரியாம்பிள்ளையும், பொருளாளர் திரு. இந்திரன் தேவசகாயமும் பங்குபற்றிய இந்தப் பொதுக்கூட்டத்தில், புதிய செனாத்துஸ் தலைவருக்கான வரவேற்பும் நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

ஆரம்ப செபமும், செபமாலையும் சொல்லப்பட்டு கூட்டம் ஆரம்பமானது. ஆன்ம இயக்குனர் தந்தை அவர்கள், புதிய நிர்வாகத் தெரிவைப்பற்றி கைப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளவற்றை விளக்கி திருவுரையாற்றினார். பின்பு ஆன்ம இயக்குனர் தந்தையின் வேண்டுகோளுக்கு இணங்க செனாத்துஸ் தலைவர் அவர்கள், நிர்வாக அலுவலர்களின் கடமைகள், பொறுப்புக்கள் பற்றியும், அவர்களைத் தெரிவுசெய்வதில் பின்பற்றப்படவேண்டிய ஒழுங்குமுறைகள் பற்றியும் எடுத்துக்கூறி நிர்வாகத்தெரிவை முன்னின்று நடத்தினார்.

புதிய நிர்வாகத் தெரிவின்போது, இரகசிய வாக்கெடுப்பிற்கான எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டிருந்தபோதிலும் தெரிவுகள் யாவும் எவ்வித போட்டியுமின்றி ஏகமனதான ஆதரவுடன் இடம்பெற்றன. அதன்படி, புதிய நிர்வாக சபையின் தலைவராக மன்னார் கியூறியாவைச் சேர்ந்த திரு. லோறன்ஸ் குருஸ் அவர்களும், உபதலைவராக முருங்கன் கியூறியாவைச் சேர்ந்த திரு. சிங்கராயர் அவர்களும், செயலாளராக தாழ்வுபாடு கியூறியாவை சேர்ந்த திரு. சூசையப்பு டலிமா அவர்களும், உபசெயலாளராக வேப்பங்குளம் கியூறியாவை சேர்ந்த திருமதி. சிவசோதி அவர்களும், பொருளாளராக மன்னார் வங்காலை கியூறியாவைச் சேர்ந்த திருமதி. லெயோதினி குலாஸ் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இதன்பின்பு, ஆன்ம இயக்குனர் தந்தை அவர்கள் மாற்றலாகிச் செல்லும் நிர்வாகத்திற்கு அவர்களுடைய சேவைகளைப் பாராட்டி நன்றி கூறியதோடு புதிய நிர்வாக உறுப்பினர்களையும் வாழ்த்தி தனது ஆசிகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மறைமாவட்டத்தில் உள்ள 7 கியூறியா உத்தியோகத்தர்களும், மன்னார் மேல் கியூறியாவின்கீழ் இயங்கும் 21 பிரசீடியங்களின் உத்தியோகத்தர்களும், முருங்கன் கியூறியாவின் மேற்பார்வையாளர் அருட்சகோதரி றோசலின் உட்பட 125 சகோதர சகோதரிகள் பங்குகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் மாபெரும் இரத்ததான நிகழ்வு





மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின்கீழ் இயங்கிவரும் "உதவிக்கரம்" (Centre For Disabled) நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வருடாந்த இரத்ததான நிகழ்வு கடந்த யூன் 16ஆம் திகதி CFD நிலையத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. காலை 9.00 மணிக்கு கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. ம. ஜெயபாலன் அடிகளாரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் மன்னார் மாவட்டம் மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களிலிருந்தும் பின்வரும் அமைப்புக்களிலிருந்து மொத்தமாக 57 நன்கொடையாளர்கள் இரத்ததானம் செய்ய முன்வந்திருந்தனர்.

01. கறிற்றாஸ் வாழ்வுதயம்
02. உதவிக்கரம் (Centre For Disabled)
03. அருள்ராஜ் அடிகளார் (பங்குத்தந்தை நானாட்டான்)
04. அருட்சகோதரிகள் S.J.L. Convent நொச்சிக்குளம்.
05. கிறின் பீல்ட் விளையாட்டுக்கழகம்
06. Janasakthi Insurance
07. AIA Insurance - Vavuniya
08. Cooperative Insurance
09. பிரதேச செயலகம் - மன்னார்
10. PLC – Mannar
11. RDA – Mannar
12. Hero Honda Company - Mannar
13. Water Supply – Mannar
14. Department of Fisheries – Mannar
15. புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, மன்னார்
16. ஏனைய பொதுநலன் விரும்பிகள்.

இந்நிகழ்வானது Lions Club of Kandana – Jaela மற்றும் வவுனியா AIA Insurance ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெற்றது. இந்த இரத்ததான நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. ம. ஜெயபாலன் அடிகளாரின் சார்பிலும் வாழ்வுதய நிர்வாக அலுவலர் திரு. அ. ம. அல்மேடா அவர்களின் சார்பிலும் "உதவிக்கரம்" (Centre For Disabled) நிலையத்தின் திட்ட முகாமையாளர் திரு. எமில்ராஜா அவர்கள் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றார்.

# இம்செசோ நிறுவனத்தின் கலைவிழா நிகழ்வு





இம்செசோ (IMSESO) நிறுவனத்தின் 2016ம் ஆண்டிற்கான மாபெரும் கலைவிழா நிகழ்வானது கடந்த யூன் மாதம் 17ஆம் திகதி முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய முன்றலில் இந்நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமான திரு. ச. கொண்சன்ரைன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் மேதகு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ த. குருகுலராஜா அவர்களும், வடமாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் கௌரவ ப. டெனிஸ்வரன் அவர்களும், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் மற்றும் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், முருங்கன் மெதடிஸ்த திருச்சபையின் தலைமைப் போதகர், முருங்கன் பௌத்த விகாரையின் விகாராதிபதி மற்றும் அரச உயர் அதிகரிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களினதும் கலைஞர்களினதும் கண்கவர் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# மன்னார் வைத்தியசாலையின் குறைபாடுகளை களையும் அமர்வு

மன்னார் பொது வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் நோக்குடனும், பொது மக்களுக்கும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் இடையே நிலவிவரும் தவறான கருத்துக்களைக் களையும் நோக்குடனும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் வைத்தியசாலையில் உயர்மட்டக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் பொது வைத்தியசாலை கேட்போர்கூட மண்டபத்தில் வடமாகாண சுகாதார அமைச்சர் பி. சத்தியலிங்கம் தலைமையில் இக்கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

இதில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ஏ. விக்ரர் சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட ஆயரின் செயலாளர் அருட்பணி முரளிதரன் அடிகளார், மௌவி எஸ்.ஏ.அசீம், மெதடிஸ்தசபை ஆலய அருட்பணியாளர் க. ஜெகதாஸ் அடிகளார், பொது அமைப்பின் இணையத் தலைவர் வி. எஸ். சிவகரன் உட்பட மன்னார் சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி, திருமதி அன்ரன் சிசில், மன்னார் பொது வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி ஈற்றன் பீரிஸ், முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம், மன்னார் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி, மன்னாரில் கடமைபுரியும் வைத்தியர்கள், தாதிமார்களின் பிரதிநிதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

மன்னார் பொது வைத்தியசாலை தொடர்பில் பல முறைப்பாடுகள் நாளாந்தம் மக்கள் மத்தியில் எழுந்து வருவதாகவும், இதனால் நோயாளிகள் வெளிமாவட்டங்களை நோக்கிச் செல்லும் நிலை ஏற்பட்டு வருவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வைத்தியசாலையின் ஊழியர் ஒருவரின் மரணத்தால் பொது மக்களுக்கும் வைத்தியசாலை நிர்வாகத்துக்குமிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. இவைகளைச் சுமூகமாக தீர்த்துவைப்பதற்கும் வைத்தியசாலையை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல வைத்தியசாலை அபிவிருத்திக்குழு அவசியம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# சிறுக்கண்டல் பங்கு - களிமோட்டை அன்னை வேளாங்கண்ணி ஆலய திருவிழா

சிறுக்கண்டல் பங்குக்குட்பட்ட களிமோட்டை புனித அன்னை வேளாங்கண்ணி ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த மே மாதம் 11ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15ஆம் திகதி அன்று ஞாயிறு காலை 7.30 மணிக்கு இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சுருப ஆசிரும் இடம்பெற்றது. அவருடன் இணைந்து பொன்தீவுகண்டல் பங்குத்தந்தை அருட்பணி. லோறன்ஸ் லியோன் அடிகளார் மற்றும் சிறுக்கண்டல் பங்குத்தந்தை அருட்பணி. எமில் எழில்றாஜ் அடிகளாரும் திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

எமக்கு நல் ஆலோசனைகளைக்கூறி எம்மை வழிநடத்திவரும் எமது பங்குத்தந்தை அருட்பணி. எமில் எழில்றாஜ் அடிகளாருக்கும், எமது அருட்சகோதரி றோசலின் அவர்களுக்கும் எமது ஆலய மக்கள் சார்பாக வாழ்த்துக்களையும் செபங்களையும் கூறிநிற்கின்றோம்.

திருவிழா அன்று காலை மழைச் சூழல் காரணமாக இயற்கை பாதகமாக இருந்தபோதிலும் மக்கள் பக்தியோடும் ஆர்வத்தோடும் திருவிழாத்திருப்பலியில் கலந்துகொண்டதை பார்க்கமுடிந்தது.

**தகவல் : நே. அனஸ்ரின் டயஸ், ஆலய சபை செயலாளர், களிமோட்டை, முருங்கன்.**

# வவுனியா சமளன்குளம் குழந்தை இயேசு ஆலயத் திருவிழா

வவுனியாப் பங்கில் அமைந்துள்ள சமளன் குளம் கிராமப்பகுதியில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள குழந்தை இயேசு திருத்தலத் திருவிழா கடந்த மே மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் திரிதின ஆயத்த வழிபாடுகள் நடைபெற்றது. திருவிழா அன்று வவுனியாப் பங்குத்தந்தை அருட்பணி. சத்தியராஜ் அடிகளாரின் தலைமையில் அருட்தந்தையர்கள் ஜே. பி. தேவராஜா அடிகளார், எம். ஏ. ஜெயசீலன் அடிகளார், உதவிப்பங்குத்தந்தை ஜோண் ஸ்ரெனின் சோசை அடிகளார் ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

இக்கிராமம் மிகக்குறைந்த அளவு கத்தோலிக்க குடும்பங்களைக் கொண்டிருந்தபோதும் மிகவும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் இத்திருவிழாவை பங்குத்தந்தையின் வழிகாட்டலுடன் ஒழுங்குசெய்திருந்தனர். திருவிழாத் திருப்பலியின்போது மறையுரை ஆற்றிய அருட்பணி. ஜெயசீலன் அடிகளார் குழந்தை இயேசுவின் பக்தி ஆரம்பித்த வரலாற்றையும், அவரது ஆசி மொழியாகிய "நீ என்னை மாட்சிப்படுத்தப்படுத்த என் ஆசீர்வாதங்கள் உன்மேல் நிறைவாய் பொழியப்படும்" என்ற இயேசுவின் வார்த்தையையும் எடுத்து விளக்கினார். தனது மறையுரைக் கருத்துக்கள் மூலம் இயேசுவின் பக்தியை மக்களின் உள்ளங்களில் மென்மேலும் ஒளிரச்செய்தார்.

பல்வேறு இடங்களில் இருந்து வந்த பக்தர்களின் அதிகரித்த எண்ணிக்கையும், இக்கிராம மக்களின் குழு ஒருமைப்பாடும், இவ்விழாவைச் சிறப்பித்ததுடன் திருப்பலியின் முடிவில் திருச்சுருப பவனியும், குழந்தை இயேசுவின் ஆசீரும் பங்குத்தந்தையால் வழங்கப்பட்டது. ***தகவல் : கலிஸ்ரா***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்புரவு அருட்சாதனமும் அதன் பலன்களும்

- திருமதி லோஜி, அன்பியப் பணியாளர் மன்னார் -

## முன்னுரை

இரக்கத்தின் யூபிலி ஆண்டிலே கடவுளின் இரக்கத்தைப் பெற ஒப்புரவு அருட்சாதனம் சிறந்த வழியாக அமைகின்றது. அன்று இஸ்ரயேல் மக்கள் மோசேயால் வழிநடத்தப்பட்டுச் சென்றபொழுது பாவத்துக்கு அடிமையாகி, கடவுளைவிட்டு சென்றவேளை கடவுள் பல்வேறு அற்புதங்களைச் செய்து அவர்களை மனம்மாற்றினார்.

இன்றைய சமூக வாழ்விலே நாமும் கடவுளைவிட்டு நுகர்வுக் கலாச்சாரத்துக்கு அடிமையாகி, உலகமே தெய்வம் என்று ஓடிக்கொண்டிருக்கின்றோம். இதனால் பல்வேறுபட்ட நோய்கள், துன்பம், இயற்கையின் சீற்றம், அதிக வரட்சி போன்ற உபாதைகளினால் பரிதவிக்கும் எமக்கு கடவுளின் இரக்கத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற இந்த ஒப்புரவு அருட்சாதனம் அருட்கருவியாக இருக்கின்றது. எனவே ஒப்புரவின் மகிமையை உணர்ந்து அதன் வழியாக கடவுளின் பிள்ளைகளாவோம்.

## ஒப்புரவின் அற்புதங்கள்

இறைவன் மனிதருக்கு வழங்கும் மிகப்பெரும் கொடையாகவும், திருச்சபையின் தனிப்பெரும் சொத்தாகவும் இருப்பது ஒப்புரவு அருட்சாதனம். இதனை மக்களுக்கு வழங்குவதை கத்தோலிக்க திருச்சபை தனது கடமையாகக் கொண்டுள்ளது. இதன் அவசியத்தையும் செயல்பாட்டையும் இந்த அருட்சாதனம் விளைவிக்கும் நற்பயன்களையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மனத்துயர் அடைந்து நீ மன்றாடும்போது உன் பாவங்களை இயேசு மன்னிக்கிறார். யாருக்கு விரோதமாகப் பாவம் செய்தோம் என்று எண்ணி, உள்ளம் வருந்தி மன்றாடும்போது உன் மன்றாட்டுக் கேட்கப்பட்டு, உன் பாவங்களை இறைவன் மன்னிக்கிறார்.

"கடவுளே, உம்மை நோக்கி என் முகத்தைத் திருப்பி, வெட்கி நாணுகின்றேன். ஏனெனில் எங்கள் பாவங்கள் எங்கள் தலைக்குமேல் பெருகிவிட்டன. எங்கள் குற்றங்கள் விண்ணைத் தொட்டுவிட்டன" (எஸ்ரா 9:5,6).

"இஸ்ராயேல் மக்களாகிய நாங்கள் உமக்கு எதிராகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகின்றோம். அடியேனுடைய மன்றாட்டைக் கேட்பதற்கு உம் செவிகள் திறந்திருப்பதாக, உம் கண்கள் விழித்திருப்பதாக". "நானும் என் தந்தை வீட்டாரும் பாவம் செய்தோம்" (நெகே 1:6).

"உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும் உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன. உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளன" (எசாயா: 59:2).

"பாவம் செய்துவருகிறவர் அலகையைச் சார்ந்தவர்: ஏனெனில் தொடக்கத்திலிருந்தே அலகை பாவம்செய்து வருகிறது" (1யோ. 3:8).


ஒவ்வொரு நாளும் காலை விடியல் தொடங்கி இரவு நித்திரைக்குப் போகுமட்டும் என்னுடைய எண்ணங்கள், பேச்சுக்கள், பார்வை, நடத்தை, செயல்பாடுகள் எல்லாம் எப்படியாக இருக்கின்றது என்பதை ஆழ்ந்து யோசித்து பாவ வழிகளைவிட்டு இறைவனுக்கு உகந்த பரிசுத்த வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

வானகத் தந்தை இரக்கமுள்ளவர் (லூ. 6.36) என இயேசு கூறுகிறார். "எத்தனை முறைதான் மன்னிப்பது? ஏழு முறையா?" எனப் பேதுரு கேட்டபோது இயேசு, "ஏழு எழுபது முறை" என பதில் கூறியதிலிருந்து இறைவன் எத்தனை முறை மன்னிப்புக் கேட்டாலும் மன்னிப்பார் என்பது தெளிவாகிறது. இறைவனின் இரக்கத்திலிருந்து வெளிப்படும் மன்னிப்பை எளிதாகப் பெற்று எல்லா வகையான தீமைகள், பாதிப்புகள், சாபங்கள், கட்டுக்கள், நோய்கள், பேயின் செயல்கள் போன்றவற்றிலிருந்து விடுதலைபெற முடியும். இறைவன் தனது அதிகாரபூர்வமான மன்னிப்பை திருச்சபையாகிய தனது புனித அமைப்புக்கு வழங்கினார். சீடர்களுக்கு இந்த அதிகாரத்தை "மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" (மத். 16-19) என்று பேதுருவுக்கு கூறியதன் மூலம் கொடுத்தார்.

இறைவன் திருச்சபைக்குக் கொடுத்த நிரந்தரமான கொடைதான் ஒப்பரவு அருட்சாதனம். ஒப்புரவு அருட்சாதனம் இயேசுவின் விலைமதிக்க முடியாத இரக்கத்தின் முழுப்பலனையும் மனிதருக்கு வழங்கும் ஓர் அருட்கருவி. ஒப்புரவு அருட்சாதனம் ஓர் இறை நிகழ்வு. இங்கே பாவ மன்னிப்பு ஆசிவழங்கும் குரு எப்படிப்பட்டவர் என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனெனில் பாவமன்னிப்பு குருவின் புனிதத்தைப் பொறுத்து வழங்கப்படுவதில்லை. அங்கே இறைவன்தான் மன்னிப்பு வழங்குகிறார். இறைவனின் செயல்பாடுகள்தான் பேய், பாவம், மனித உடல் நோய்கள் அனைத்திலிருந்தும் முழுமையான விடுதலையை மன்னிப்பு ஆசீர் வழியாகக் கொடுக்கிறது எனத் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

இயேசு முடக்குவாதமுற்றவரின் பாவங்களை மன்னித்தார் (மாற்.5:5). பாவங்கள் மன்னிக்கப்பட்டதன் பலனாக அவரது முடக்குவாத நோயும் நீங்குகிறது. பாவமன்னிப்பின் பலன்கள் பல என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. ஒப்புரவு அருட்சாதனத்தில் வழங்கப்படும் மன்னிப்பில் இறைவல்லமை வெளிப்படுவதால் அந்த ஆசீரைப் பணிவுடனும் விசுவாசத்துடனும் பெறும்போது நாம் விரும்பும் விடுதலையை இறைவன் நமக்கு நிச்சயம் வழங்குகிறார். இறைவனின் மன்னிப்பை இறைமக்கள் அடிக்கடி பெறுவதால் இறையுறவில் வளரமுடியும். இறைவனோடு நல்லுறவில் இருப்பவர்கள்தான் அதிகப் பலன்தரும் வாழ்வு வாழமுடியும்.

**திருச்சபை வழியாக இறைவன் வழங்கியுள்ள இரக்கத்தின் சிகரமான ஒப்புரவு அருட்சாதனத்தின் பலன்களைக் காண்போம்.**



"கடவுளுக்கு ஏற்றபலி நொருங்கிய நெஞ்சமே. கடவுளே நொருங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை. (தி.பா. 51-17). "அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார். உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்" (திபா. 103-3). இறைவனின் இந்த வாக்குறுதிகள் ஒப்புரவு அருட்சாதனத்தில் செயலாக்கம் பெறுகின்றன.

மருத்துவத்துறையே இதை தெளிவுபடுத்துகிறது. உடல் நோய்களுக்கு ஓரளவு காரணம் எமது மனநிலை, கலக்கங்கள், குற்ற உணர்வுகள்தான். உடல் ஆரோக்கியத்திற்கு உணவும், மருந்துகளும் இருப்பதுபோல, மனதிற்கும் ஆன்மாவிற்கும் உணவும், மருந்தும் திருப்பலியும், இறை வார்த்தையும், பாவசங்கீர்த்தனமும்தான். எனவே உடல், உள சுகம்பெற பாவங்களை ஏற்றுக்கொண்டு ஒப்புரவு பெறுவோம்.

"ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கை செய்துகொள்ளுங்கள்". தம் குற்றப் பழிகளை மூடிமறைப்பவரின் வாழ்க்கை வளம் பெறாது. அவற்றை ஒப்புக்கொண்டு விட்டுவிடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவார்" (நீதிமொழிகள் 28:13). "மேலும் அவர் மகனாகிய இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்தும்" (1யோ.1:7). "மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும்" (லூக்.15:7) என்று நம் ஆண்டவர் இயேசு கூறியுள்ளார்.

ஆண்டவர் தம் பணியை தொடங்கும்போது "மனம் திரும்புங்கள்" என்று அழைத்தார் (மத். 4:17, மாற்: 1-5). மனம் திரும்பாதவர்களைப் பார்த்து ஆண்டவர் கடுமையான குரலில் கூறுகிறார். "மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள்" (லூக். 13-5). "குற்றம் செய்பவர்களாக வாழ்ந்ததால் நீங்கள் இறந்தவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ. 2-13).

பரந்தமையில் ஈடுபடுவோர், ஒழுக்ககேடாய் நடப்போர், சிலை வழிபாடாகிய பேராசை கொண்டோர் போன்ற எவரும் கிறிஸ்துவுக்கும், கடவுளுக்கும் உரிய அரசில் உரிமைப்பேறு அடையார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்" (எபே. 5:5).

"பாவம் கடும் சிவப்பாயிருந்தாலும், அவை உறைந்த பனிபோல வெண்மையாகும்" (ஏசா. 1-18). "நம் பாவங்களை ஆண்டவர் நினைவிற் கொள்ளமாட்டார்" (ஏசா. 43-25). "இயேசு உலகிற்கு வந்தது பாவிகளை மீட்பதற்காக என்னும் கூற்று உண்மையானது. ஏற்றுக்கொள்ளத்தக்கது" (தீமொ. 1-15).

பாவமன்னிப்பைத் தந்த இயேசு இந்த அதிகாரத்தை தம் சீடர்களிடம் தந்து, "எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா என்றார்" (யோ. 20-22).

திருச்சபை இன்றும் அருட்தந்தையர்கள் மூலம் பாவப்பரிகார வழிபாடுகளை நடத்துகிறது. அதனால் பாவங்களை அருட்தந்தைமுன் சொல்லி பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும்.

வருடத்திற்கு ஒரு முறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும் எனத் திருச்சபை கூறுகிறது. மிகக் கடுமையான பாவங்கள் என்றால் உடன் பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான் திவ்விய நற்கருணை பெறவேண்டும். "எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்திலிருந்து பருகினால், அவர் ஆண்டவருடைய உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார்" (1கொரி. 11-27-30). அதனால் பாவத்தினால் மனது கலக்கமடையும்போது பாவசங்கீர்த்தனம் செய்வது மிகச் சிறந்தது.

## பாவசங்கீர்த்தனம் செய்யத் தேவையான முறைகள்:

- கடந்தமுறை செய்த பாவசங்கீர்த்தனத்தை நினைத்து அதற்குப்பின் செய்த பாவங்களை மனதில்கொண்டு ஆன்மசோதனை செய்ய வேண்டும்.
- கடவுளோடும், சகோதர சகோதரிகளோடும், தன்னோடும் செய்த துரோகங்களைப்பற்றி மனஸ்தாபத்தோடு - எல்லாத் தவறுகளையும் நினைக்க வேண்டும்.
- இனிமேல் பாவம் செய்ய மாட்டேன் என்று தீர்மானம் எடுத்து, பாவங்களை உதறித்தள்ளத் தீர்மானம் எடுக்கவேண்டும்.
- நமது கடமைகளில் தவறி இருந்தால் அதுபற்றி நினைக்க வேண்டும்.
- பாவத்தின் எண்ணிக்கையையும், நிலைகளையும், சந்தர்ப்பங்களையும் அருட்தந்தையிடம் அறிக்கைசெய்து பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும்.
- பரிகாரங்களைக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டும், காலம் தாழ்த்தக்கூடாது.

## ஆன்ம சோதனை

- செபத்தோடு படித்து ஆன்ம சோதனை செய்ய வேண்டும்.
- கடைசியாகப் பாவமன்னிப்பு செய்து எவ்வளவு காலம்? தகுதியற்ற நிலையில் திவ்விய நற்கருணை பெற்றிருக்கிறேனா?
- கடைசிப் பாவமன்னிப்பில் சொல்லாமல் மறைத்துவைத்த பாவங்கள்? தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்ற பாவங்கள் என்னிடம் உண்டா?
- பத்துக் கட்டளைகள், திருச்சபையின் ஐந்து கற்பனைகள் போன்றவற்றை எவ்வாறு மீறினேன் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
- சாவான பாவங்கள், தற்பெருமை, சீற்றம், காமவெறி, பேராசை, பெருந்தீனி விரும்பல், பொறாமை, சோம்பல் ஆகிய பாவங்களைச் செய்த சந்தர்ப்பங்கள்?
- ஏதாவது தவறான பழக்கவழக்கத்திற்கு தொடர்ந்து அடிமைப்பட்டிருக்கிறேனா?
- பரிசுத்த ஆவியானவர்க்கு எதிராகப் பாவம் செய்துள்ளேனா?
- பரலோகம் கிடைக்காது என்கிற எண்ணம்.
- மரண நேரத்தில்கூட பாவத்தைப்பற்றி மனஸ்தாபப்படாதது.

பாவசங்கீர்த்தனம் என்பது இயேசுவின் பாஸ்கா இரகசியத்தில் பாங்குபெறுவதாகும். பாவத்தில் இருந்து நல்ல மனிதனாக உயிர்த்தெழ நல்ல பாவசங்கீர்த்தனம் உதவிசெய்கிறது. கிறிஸ்துவை அணிந்துகொள்ளும்போது உண்மையான மகிழ்ச்சி, அமைதி, சமாதானத்தை அனுபவிக்க கடவுள் ஆசீர்வதிப்பார்.

## ஒப்புரவு அருட்சாதனம்

- இது பேயின் செயல்கள், திட்டங்கள் அதனால் விளைந்த பாதிப்புகள், கட்டுகள் அனைத்திலிருந்தும் மனிதரை விடுவிக்கிறது.
- இறைவனின் ஆசீரைப்பெற இயலாத நிலையிலுள்ள மனிதர்கள் பலவித சாபங்களுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தாலும் இவ்வருட்சாதனம் சாபங்கள் அனைத்திலிருந்தும் விடுவிக்கின்றது.
- பலவிதமான பலவீனங்களாலும், பாவத்தன்மையின் கட்டாயத்தினாலும் மனிதர் செய்யும் பாவங்கள் அனைத்தையும் எந்த நிபந்தனையும் இன்றி இவ்வருட்சாதனம் மன்னிக்கிறது.
- பாவங்களை மன்னிப்பதோடு அதற்குரிய பரிகாரமும் இவ்வருட்சாதனத்தின் வழியாக வழங்கப்படுகிறது.
- மீண்டும் பாவங்கள் செய்யாமல் இருப்பதற்குரிய சிறப்பு வரம் இவ்வருட்சாதனத்தில் கிடைக்கிறது.
- இவ்வுலகில் முழுமையான, நிட்சயமான விடுதலையை மனிதருக்கு வழங்கக்கூடியது இந்த ஒப்புரவு அருட்சாதனம் மட்டுமே.

"என்னை நோக்கி உங்கள் கைகளை நீங்கள் உயர்த்தும்போது பாரா முகத்தினராய் நான் இருப்பேன். நீங்கள் தொடர்ந்து மன்றாடினாலும் நான் செவிகொடுப்பதில்லை. உங்களைக் கழுவி தூய்மைப்படுத்துங்கள்" (எசாயா. 1-15,16).

"நீ மனம் மாறத்தவறினால் நான் உன்னிடம் வந்து உனது விளக்குத்தண்டை அது இருக்கும் இடத்திலிருந்து அகற்றிவிடுவேன். கேட்கச் செவி உடையோர் திருச்சபைகளுக்கு தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும்" (திருவெளிப்பாடு. 2-5,6).

## ஒப்புரவின் நற்பலன்கள்

1. தீய பழக்கத்திலிருந்து விடுதலை தரும்.
2. மனநோயிலிருந்து விடுதலைபெற வழிவகுக்கும்.
3. பாவத்திலிருந்தும், பாவப்பழக்கத்திலிருந்தும் விடுதலை தரும்.
4. உடல் நோயிலிருந்தும் விடுதலைபெற வழிவகுக்கும்.
5. கணவர், மனைவியிடையேயுள்ள மணமுறிவு மற்றும் முரண்பாட்டிலிருந்தும் விடுதலை தரும்.
6. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே உள்ள உறவுப்பிரச்சினையிலிருந்து விடுதலை தரும்.
7. கிறிஸ்தவ கிராமங்களில் உள்ள பிளவுகள், நீண்டநாள் பிரச்சினையிலிருந்து விடுதலை தரும்.
8. தனிநபரோ, குடும்பமோ கிறிஸ்தவ சமூகமோ ஒரு நல்ல திட்டத்தைத் துவங்குவதற்குமுன் இந்த அருட்சாதனத்தைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் பலன் வியப்புக்குரியதாயிருக்கும்.
9. புனிதத்தில் வளர்க்கும்
10. தீய ஆவியின் அனைத்துத் திட்டங்களையும் முறியடிக்கும்.
11. பேயின் பிடியிலிருந்து விடுதலை பெறலாம்.
12. பில்லி சூனியம், மாந்திரீகத் தாக்கங்களில் இருந்து விடுவிக்கும்.
13. நீண்ட நாள் வியாதி, துன்பங்களிலிருந்து விடுவிக்கும்.
14. சாபங்களிலிருந்து விடுதலை தரும்.

(குறிப்பிட்ட ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒப்புரவு அருட்சாதனம் எப்படித் தீர்வு தரும்? அதை எப்படிப் பெறுவது? என்பவை தொடர்பான விளக்கங்களை அடுத்த மாதக் கட்டுரையில் காண்போம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமலமரித்தியாகிகளின் சி.பி. ஆர். பணியகத்தின் செயற்பாடுகள்

அமலமரித்தியாகிகளின் கண்காணிப்பின்கீழ் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் (CPR) கடந்த 12 வருடங்களாக யாழ் மாவட்டத்திலும், 6 வருடங்களாக மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் சமாதானக் கல்விச் செயற்பாடுகளை பாடசாலை மற்றும் கிராம மட்டங்களில் மேற்கொண்டு வருகின்றது.

சிறுவர்களிடத்தில் சிறந்த தலைமைத்துவத்தினையும், ஒற்றுமையினையும், சகோதரத்துவத்தினையும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கினையையும் வளர்க்கும் நோக்கில் சிறுவர் சமாதானக்கல்வி நிகழ்வானது பாடசாலைகளிலும், கிராம மட்டங்களிலும் நடாத்தப்பட்டு வருகிறது. அதாவது நற்பழக்கவழக்கங்களையுடைய சிறார்களை உருவாக்குவதன் மூலம் சிறுவர்களுக்கிடையில் நட்புறவை வளர்த்து, முரண்பாடுகள் அற்ற ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதல் ஆகிய நோக்கத்திற்காக சமாதானக்கல்வி நிகழ்வானது நடாத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தின் பத்து பாடசாலைகளைத் தெரிவுசெய்து எமது செயற்பாடுகளை ஆற்றி வருகின்றோம். அப்பாடசாலைகளாவன:

| | |
|---|---|
| 01. இலுப்பக்கடவை | 06. அடம்பன் |
| 02. தேவன்பிட்டி | 07. ஆண்டான்குளம் |
| 03. வெள்ளான்குளம் | 08. கருங்கண்டல் |
| 04. பாப்பாமோட்டை | 09. பறப்பான்கண்டல் |
| 05. மினுக்கன் | 10. திருக்கேதீஸ்வரம் |

மேலும் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேசமானது போருக்கு முன்னரும், பின்னரும் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. இங்கு பெருமளவான பெண்கள் கணவனை இழந்து விதவைகளாக்கப்பட்டுள்ளதுடன், பெருமளவான சிறார்கள் பெற்றோரை இழந்து அநாதைகளாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். இதன் கராணமாக எமது செயற்பாடுகளை இவ்வாண்டில் கடந்த மூன்று மாதகாலமாக மாந்தை மேற்குப் பிரதேசத்தில் மேற்கொண்டு வருகின்றோம். அங்கு பாதிக்கப்பட்ட பெண்களையும், இளைஞர் யுவதிகளையும் மனதளவிலும், பொருளாதார ரீதியாகவும் வலுப்படுத்துவதற்கான செயற்திட்டம் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் அமைந்துள்ள காத்தான் குளம், சொர்ணபுரி, விடத்தல்தீவு, தேவன்பிட்டி போன்ற கிராமங்கள் எமது பணியகத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தை எடுத்து நோக்கின் வவுனியா வடக்கு பிரதேசங்களான 01. கனகராயன்குளம், 02. பாலமோட்டை (ஓமந்தை), 03. நெடுங்கேணி, 04. மதியாமடு ஆகிய கிராமங்கள் எமது பணியகத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 01. மதியாமடு - விவேகானந்தா, 02. கொக்கில் குஞ்சிக்குளம், 03. பாலமோட்டை, 04. நொச்சிமோட்டை, 05. ஓமந்தை - மத்திய மகா வித்தியாலயம் 06. கனகராயன்குளம் - மகாவித்தியாலயம் 07. நைனாமடு - மகாவித்தியாலயம் 08. வெள்ளாங்குளம் - வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளைத் தெரிவுசெய்து எமது செயற்பாடுகளை ஆற்றி வருகின்றோம்.

எமது நிறுவனத்தின் தலைமை அலுவலகமானது யாழ்ப்பாணத்தில் கைதடி எனும் இடத்திலும், கிளை அலுவலகமாக வவுனியாவில் புளியங்குளம் வீதி, நெடுங்கேணி எனும் இடத்திலும், மன்னாரில் ஞானோதயம் தாழ்வுபாடு வீதி, கீரி எனும் முகவரியிலும் இயங்கிவருகின்றது.

## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். - மன்னா நிர்வாகம்.

## பண்டிவிரிச்சான் பங்கில் புனித மரியகொறற்றி சுரூபம் ஸ்தாபகம்





பண்டிவிரிச்சான் பங்கின் தாய் ஆலயமான பெரிய பண்டிவிரிச்சான் புனித மரியகொறற்றி ஆலயத்தில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பீடத்தில் புனித மரியகொறற்றியின் திருச்சுரூபம் கடந்த யூன் மாதம் 5ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணியாளர் சவுஸ்நாதன் அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு திருச்சுரூபத்தையும் ஸ்தாபித்து வைத்தார்.

# புனித இயூஜின் டி மெசெனட்

## 155 வது விண்ணக பிறப்பு (21.05.1861 - 2016)

**ஆக்கம்: அருட்பணி. பி. ஜேக்கப் யோகராஜா அ.ம.தி.**



01.08.1782 அன்று புறொவான்சின் தலைநகர் ஏக்ஸ் (Aix-en-Provence) என்னும் சிற்றூரில் சார்ள்ஸ் அன்டோய்ன் டி மெசனட்டுக்கும், மேரி றோஸ் ஜோ ஆன்னிஸ் அவர்கட்கும் பிறந்தவர்தான் சார்ள்ஸ் ஜோசப் இயூஜின் டி மெசெனட்.

79 வருடங்கள் இம்மண்ணில் ஓர் அரச பிரபுவாக, இளம் கோமகனாக, மாணவனாக, சேவையில் ஆழ்ந்த குருவாக, குருமுதல்வராக, ஆயராக, நிறுவுனராக பல கதாபாத்திரங்களை வகித்தவர். இவர் தம் இயல்பான குணத்தோடு திருச்சபையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உரிமைக்கும் குரல் கொடுத்தார். 21.05.1861 அன்று இவ்வுலகைவிட்டுப் பிரிந்தும், இன்று பிரிந்த அல்லது குழம்பிய குடும்பத்தின் பாதுகாவலராக, ஓர் தூயவராக நம் இதயம் கவர்ந்தவராகத் திகழ்கின்றார். இத்தகைய சிறப்புக்கள் வாய்க்கப்பெற்ற தூய சார்ள்ஸ் ஜோசப் இயூஜின் டி மெசெனட் அடிகளாரது விண்ணக வாழ்வின் 155 வருட நிறைவைத்தான் நாம் இன்றும் நினைவுகூருகின்றோம்.

திருச்சபையின் வளர்ச்சியில் பலவிதமான வரலாற்றுக் கதைகளை நாம் கேள்விப்பட்டதுண்டு, அதிலும் ஒருசில தூயவர்களின் முன்மாதிரிகையான வாழ்க்கை திருச்சபையின் உன்னதத்தை மேலும் ஒருபடி உயர்த்தி வலுச்சேர்த்துவிடுவதாக அமைந்துவிடும். திருச்சபையின் புனிதர் பட்டியலில் இடம்பிடித்துள்ள தூய இயூஜின் டி மெசெனட்டின் முன்மாதிரிகையான வாழ்க்கை எவ்வாறு அமைந்தது? எவ்வாறு அது திருச்சபைக்கு வலுச்சேர்த்தது? இவ்வரலாற்று நாயகனின் புரட்சிகரமான வாழ்க்கை எப்படிப்பட்டது? என்பவற்றுக்கான ஒரு சிறு தேடல்தான் இவ்வாக்கத்தின் உருவாக்கம்.

### அமலமரித் தியாகிகள் துறவறசபை நிறுவுனர்

இவர்தான் உலகமெங்கும் பணியாற்றும் அமலமரித்தியாகிகளின் இதயத்துடிப்பு! திருச்சபையின் வரலாற்றில் கடந்த 200 ஆண்டுகளாக (1816-2016) நற்செய்திப் பணியாற்றும் அமலமரித் தியாகிகள் உலகின் 5 கண்டங்களில் சீனா உட்பட 71 நாடுகளில் இன, மத, மொழி, நிற வேறுபாடுகளைத் தாண்டி தம் அளப்பரிய சேவையினால் பல்வேறு முகங்களையுடைய ஏழைகளை இனங்கண்டு தமது தியாக வாழ்வினால் சாதனை படைத்துள்ளனர்.

குருசுச்சுவாமி என அன்றும், அமலமரித்தியாகிகள் (அ.ம.தி) என இன்றும் அன்பாக அழைக்கப்படும் இத்துறவற சபையினர் இலங்கைத் திருச்சபையில் கடந்த 168 ஆண்டுகளாக மேய்ப்புப்பணி - கல்விப்பணி - சமூகப்பணி - மனித நேயப்பணி எனப் பன்முகப்பட்ட பணிகளை ஆற்றிய பெருமையோடு தலைநிமிர்ந்து நிற்கின்றனர்.

### "ஏழைகளுக்கு நற்செய்தி நவில"

சிறுவயதில் அவர் அனுபவித்த துன்ப வடுக்கள், அகதி வாழ்க்கை அவரை இயேசுவின் சிலுவையின் கண்ணோட்டத்தில் சிந்திக்கத் தூண்டியது. அக்காலத்தில் மக்களின் துன்பநிலை கண்டு அவர்களுக்கு வாழ்வுகொடுக்க இயேசுவின் நற்செய்தியின் ஒளியில் மக்களை ஒன்றினைக்கப் புறப்பட்டார். கடவுளுடைய மகிமைக்காகவும், திருச்சபையின் நன்மைக்காகவும், ஏழை மக்களின் நல்வாழ்வுக்காகவும் தன்னை அர்ப்பணித்த தூய இயூஜின் டி மெசெனட் தன்னுடன் பயணிக்கக்கூடிய சில அருட்பணியாளர்களையும் இணைத்து அமலமரித் தியாகிகள் சபையை நிறுவினார். "ஏழைகளுக்கு நற்செய்தி நவில" என்னும் விருதுவாக்குடன் மறைபரப்புப்பணியை மகா ஞானொடுக்க மறையுரை மூலம் போதிப்பதையே தலையாய பணியாகக் கொண்டு பண்முகப்படுத்தப்பட்ட பணிகளைச் சமய சமூக வரம்புகளைக் கடந்து மனிதம் என்ற பரந்த பாதையில் பணியாற்ற தானும் அழைக்கப்பட்ட குருக்களையும் பயிற்றுவித்தார்.

இறைவன் அழைப்பில் அவர் கொண்ட ஆழமான நம்பிக்கையாலும், மரியன்னை மட்டில் அவருக்கிருந்த பற்றுதலாலும் அமலமரித்தியாகிகள் சபை திருச்சபையால் இனங்காணப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மிகவும் குறைந்த உறுப்பினர்களைக்கொண்டு தங்கள் பணியை ஆரம்பிக்கத் தொடங்கினாலும் உலகனைத்திற்கும் இயேசுவின் நற்செய்தியை எடுத்துச்செல்ல வேண்டும் என்பதே இவரது விருதுவாக்கு. இறைவனின் நற்செய்தி உலகமெங்கும் பரப்பப்படவேண்டும் என்ற இவரது கனவு ஈழமண்ணிலும் காலடிபதித்தது. ஆசியாவில் தம் பணியை ஆரம்பிக்கும் முதல் நாடாக இலங்கை காலித்துறை முகத்தில் 1847ல் கால்பதித்து யாழ் நோக்கி பயணித்தார்கள் அமலமரித்தியாகிகள். இவர்களைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பல நூற்றுக்கணக்கில் மறைபரப்புத் தாகத்தோடு ஈழ மண்ணை நோக்கி அமதிகள் வருகைதந்தனர். தேவை எங்கோ சேவை அங்கே என்ற நோக்குடன் மறைபரப்புப் பணியாளர்களாகக் கடல் கடந்த பயணம் மேற்கொண்ட இந்த வெள்ளைக்கார சுவாமிமார் தம் தாய் தந்தை, உற்றார் உறவினர், சுற்றம் சூழல், சொந்த வீடு, தாய்நாடு என அனைத்தையும் துறந்து முன்பின் தெரியாத புதிய பணிக்களம் நோக்கி வந்தனர். புதிய மண், புதிய மக்கள், புதிய மொழி, புதிய கலாசாரம், புதிய காலநிலை, புதிய உணவு, புதிய வாழ்க்கைமுறை என அனைத்துமே புதிதாய் அமைந்தபோதும் அர்ப்பணிப்புமிக்க பணியை ஆற்றத்தொடங்கினர்.

வளங்களும் வசதிகளும் உள்ள பூமியில் இருந்து அடிப்படை வசதிகளே அற்ற பூமிக்கு வந்து அவர்கள் வாழ்ந்த தியாக வாழ்வும், கிறிஸ்தவத்திற்கு சான்றுபகரும் அர்ப்பண வாழ்வும் மெச்சத்தக்கவை. சிலுவை அணிந்த அமலமரித் தியாகிகளின் வாழ்வும் பணியும் இயக்கம்பெறுவதற்கு பின்புலமாகவும் அவர்களது இதயத்துடிப்பாகவும் விளங்கியவர் தூய இயூஜின் டி மெசெனட். அவர் எமது மண்ணையும் மக்களையும் மிகவும் அன்புசெய்த ஒரு புனிதராவார்.

இறுதியாக புனிதர் தம் வாழ்க்கையை எப்படி ஒரு சவாலாக வாழ்ந்து வெற்றிகண்டாரோ, அதேபோல் புத்துணர்வுடன் சேவைபுரியத் துணியும் ஒவ்வொருவரும் எம் வாழ்வை சவாலாக ஏற்று வெற்றிகாண்போமாக. அவர் தம் மாதிரிகையாலும் பரிந்துரையாலும் நம் வாழ்வை வளமாக்கிடவே இக்கட்டுரை நம்மை அழைக்கின்றது. வாழ்ந்து புனிதமாக்குவோம். "அடங்கிய ஆற்றலுடன் எரியும் திரிகள் எனக்கு வேண்டாம், என் சபைக்கும் வேண்டாம், நீங்கள் எரிய வேண்டும், கொழுந்துவிட்டெரிய வேண்டும், சூடுதர வேண்டும், ஒளி கொடுக்க வேண்டும், அல்லது வெளியே செல்ல வேண்டும்" - **தூய இயூஜின் டி மெசெனட்** -

## மூன்று செபமாலைக் கன்னியர்களின் நித்திய அர்ப்பணம்

தமது வாழ்வினை நற்கருணைநாதர்முன் உலகினர்க்காய் அர்ச்சனையாக்குகின்ற செபமாலைக் கன்னியர் தியானயோக சபையினைச் சேர்ந்த அருட்சகோதரிகளான மேரி நீலூயா, மேரி கன்சியா, மேரி றொபேட்சினி ஆகியோர் கடந்த மே மாதம் 18ஆம் திகதி அன்று அச்சுவேலியிலுள்ள செபமாலைக் கன்னியர் ஆச்சிரமத்தில் தமது நித்திய அர்ப்பணத்தை இறைவனுக்கு அளித்தனர். யாழ் ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் முற்பகல் 11.00 மணியளவில் நித்திய அர்ப்பண கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

## அருட்சகோதரி பெலிசியானா (தி.சி.) இறைபதம்

திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி பெலிசியானா அந்தோனிமுத்து அவர்கள் கடந்த மே மாதம் 27ஆம் திகதி இறைபதமடைந்தார். இளவாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட அருட்சகோதரி பெலிசியானாவின் பூதவுடல் கடற்கரை வீதியில் அமைந்துள்ள திருச்சிலுவைக் கன்னியர் மடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மே 28ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்ற திருப்பலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்சகோதரியின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக!

## அருட்சகோதரி மேரி பசில் (தி. கு.) இறைபதம்

யாழ். திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி பசில் மடுத்தீன் அவர்கள் கடந்த யூன் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார். சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரியின் பூதவுடல் 13ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்சகோதரியின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக!

### சிறப்பாக இடம்பெற்ற மடு ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கடந்த 23.06.2016 அன்று இடம்பெற்ற கொடியேற்றத்தைத் தொடர்ந்து ஆடி 1ஆம் திகதி வரை நாளாந்தம் காலை 6.00 மணிக்கு தமிழிலும், காலை 6.45 மணிக்கு சிங்கள மொழியிலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. மாலை 6.15 மணிக்கு செபமாலை மற்றும் நற்கருணை வழிபாடுகளும் இடம்பெற்றன. ஆடி 1ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு வேஸ்பர் ஆராதனை வழிபாடுகளுடன் நற்கருணைத் திருப்பவனியும் இடம்பெற்றது.

மடுத்திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவிற்கு சுமார் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருகைதந்திருந்தனர்.

மடுப்பரிபாலகர் அருட்திரு. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் விழா ஆயத்தங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிய வழி மறைக்கல்வி

## அன்பியங்களைப் பலப்படுத்துவதற்கான பயனுள்ள ஆலோசனைகள்

(சென்றமாதத் தொடர்ச்சி)

நவீன தொழில்நுட்ப யுக்திகளுடன் அன்பியம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். போதிய சுயசெயற்பாட்டிற்கான உரிமை தரப்பட வேண்டும். மூன்று தொடர்புமுறைகளை உருவாக்கும் மூன்று வழிமுறைகளை முன்வைக்கிறோம். அவைகள் இணையம், ஊடகம், நற்செய்தி பரப்புக்கான உருவாக்க மாதிரிகள். இவை ஒவ்வொன்றும் ஒருவரோடு ஒருவர் சார்ந்து இருத்தல் மற்றும் தொடர்புகொள்ளுதல் போன்றவற்றைக் கட்டியெழுப்ப குறிப்பிட்ட தொடர்புமுறை மற்றும் பகிர்தல் கருத்துக்களைத் தருபவையாக இருக்கின்றது.

### 01. இணையம் வழியாக அன்பியத்தை மேம்படுத்துதல்

நவீன தகவல்நுட்பம் தந்துள்ள இணையத்தின்மூலம் உலகம் முழுவதும் தொடர்புகொள்வதும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும் மிக எளிதாக ஆகியுள்ளது. இணையம், வலைத்தளம், இணையவழி கருத்துப் பகிர்வு, இணையவழிக் கல்வி போன்ற பல ஆக்கப்பூர்வ வழிகளும் இதில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த இணைய சாதனத்தைப் பயன்படுத்தி உலகத் திருச்சபையிலும், சமுதாயத்திலும் அன்பியத்தின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளலாம். இணையத்தில் அன்பியத்தைப்பற்றி தெரிந்துகொள்ள "Small Christian Communities அல்லது Basic Christian Communities" (மேற்கோள் குறியீட்டைப் பயன்படுத்த வேண்டும்) என்ற தலைப்பை Google வலைத்தளத்தில் தட்டச்சுசெய்து பல தகவல்களைப் பெறலாம். பல வலைத்தளங்களில் அன்பியத்தைப்பற்றிய தகவல்கள் இருக்கின்றன. இதைப்போன்ற வலைத்தளங்களைப் பயன்படுத்தி, புதிய அன்பியத் தொடர்புகளை வளர்த்துக்கொள்ளலாம்.

இதனால் அன்பியத்தில் பல வெற்றிக் கதைகளையும் இலக்கு நோக்குப் பயிற்சிகளையும் பெறலாம். மின்னஞ்சல்கள் மூலம் அன்பியங்களுடன் கலந்துரையாடி கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம். Yahoo, Hotmail போன்ற வலைத்தளங்கள் அன்பியங்களின் விசாலமான களமாகும். உரையாடல் பகுதி, செய்தி போன்ற பல வசதிகள் இருக்கின்றன. அன்பியப் பகிர்வுக்கான தனிப்பட்ட மற்றும் பொது தனிநபர் வலைத்தள வலைப்பகுதி (Blogs)களும் கிடைக்கின்றன. அன்பிய



வலைத்தளத்தில் தினசரி மற்றும் வாராந்தர வலைத்தளங்களாகவும் இதை பயன்படுத்திக்கொள்ளலாம். Google போன்ற இணையதளங்கள் அன்பிய வலைப் பகுதிகளையும், வலைத் தளங்களையும் தருகின்றன. Search Engines ஐப் பரிசோதித்துப் பார்ப்பதும், சமீபத்திய நிலவரத்திற்கு ஏற்ப சரிபார்த்துத் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதும் அன்பியத்தை இணையத்தின் வழியாக வளர்க்க சரியான முறையாகும். அதற்கான தருணமும் ஊடகமும் இப்போது நம் கைகளில்.....!

### 02. ஊடகமும் அன்பிய செயலூக்க வழிகாட்டுதலுக்கான கருவிகளும்

அன்பியம் பற்றிய படக்குறியீடுகள், வரைபடங்கள், வீடியோ படத்துணுக்குகள், அன்பியத்தின் குறிப்பிட்ட கருப்பொருள்களிலும் விஷயங்களைப்பற்றிய பல்ஊடக விளக்கங்கள், அன்பியத்தின் பல்வேறு தன்மைகளைப்பற்றிய நாட்டுப்புறப் பாடல்கள், விவிலியக் கதைகள் மற்றும் இயேசுவின் வாழ்வு பற்றிய வீதி நாடகங்கள், திரைப்படங்கள், விவிலியக் கண்காட்சி, செய்திப் பத்திரிகை, குறிப்பிட்ட விஷயங்கள்பற்றிய வத்திக்கான் வானொலிச் செய்திகள், குறிப்பிட்ட விஷயங்கள்பற்றி ஆய்ந்தறிய செய்தித்தாளின் செய்தித் துணுக்குகள், பொம்மலாட்டக் காட்சிகள், அலைபேசியில் குறுஞ்செய்திகள் போன்றவைகள் தொடர்புகொள்வதற்கான பிரபலமான செயல்வழிகள் ஆகும். இவைகள் அனைத்தும் அன்பியத்தை மேம்படுத்துவதற்கான ஊடகச் செயல் கருவிகளாகும்.

### 03. நற்செய்தி அறிவிப்பில் படைப்பாற்றல்/ புதிய உருவாக்கம்

சமூகம் மற்றும் செபக்கலாசாரத்திற்கும், இயேசுக்கிறிஸ்து விடுவிக்கும் விசுவாசத்திற்கும் மற்ற மதத்தினரை ஈர்க்கும் வகையில் நற்செய்தி அறிவிப்பில் புதிய உருவாக்க மாதிரிகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். புதிய வழிகளில் பல்வேறு மத நம்பிக்கையுள்ள சமூகத்தினரிடையேயும் வெவ்வேறு பணிபுரிவோரிடையேயும் குடும்பம் மற்றும் மாணவர்களிடையேயும் பரவுகின்ற வகையில் தொடர் உருவாக்கத்தின் புதிய படைப்புத் திறன்களின் தேவை ஏற்பட்டுள்ளது. பங்குத் தளங்களின்மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்ற சுற்றுலாக்கள், விடுமுறைக் கொண்டாட்டங்கள், விளம்பர யுக்திகள், கலாசார நிகழ்வுகள் போன்றவைகள் மூலம் இயேசுக்கிறிஸ்துவைச் சந்திக்க அழைப்பு விடுக்கலாம். பொதுநிலை உணர்வால் உந்தப்பட்டு தினசரி விசுவாச வாழ்வின் சாட்சியத்தில் பரந்த சமூகப் பணிக்கான களத்தை ஏற்படுத்த முடிவுசெய்ய வேண்டும்.

அச்சடித்த விவிலிய வசனங்கள், உவமைகள், புதுமைகள், இயேசுவின் வாழ்க்கைபற்றிய சுவரொட்டிகள், விளம்பரத் தட்டுகள், கையேடுகள், இயேசுவின் வாழ்க்கையை விளக்கும் தெரு நாடகம் போன்றவைகளைப் பயன்படுத்துவது பயனளிக்கும்.

கிறிஸ்தவரல்லாத அண்டை வீட்டாரோடு உறவாடுவது, அவர்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளில் பங்கேற்பது, பகிர்ந்துகொள்வது, அவர்களின் மத விழாக்களைச் சேர்ந்து கொண்டாடுவது போன்றவைகள் அன்பியத்தின் வளர்ச்சிக்கு அவசியமாகிறது. மேலும் விவிலியத் தியானங்கள், வகுப்புகள், வட்டார, பகுதி மக்களோடு சேர்ந்து புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படங்களைத் திரையிட்டுப் பார்ப்பது, மதநல்லிணக்கக் கருத்தரங்குகள், விவிலியத்தின் உவமைகள், புதுமைகள், முக்கிய படிப்பினைகள் போன்றவற்றை அச்சடித்து அந்தப் பிரதிகளை இலவசமாக விநியோகித்தல் போன்றவையும் முக்கியமானது.

மேலே குறிப்பிட்ட நவீன கருவிகளும், வழிகளும்பற்றித் தீவிரமாகச் சிந்தித்து பல்வேறு நிகழ்வுகளையும் நிகழ்ச்சிகளையும் செயற்படுத்த சரியான திட்டம் தீட்ட வேண்டும். அப்போதுதான் நாம் உருவாக்கும் செயற்திட்டம் சரியான விரும்பிய பலனைத் தரும்.

# 'அன்பின் மகிழ்ச்சி'

## திருத்தந்தையினுடைய சுற்றுமடலின் முக்கிய அம்சங்கள்

'ஆமோரிஸ் லெத்திசியா' (அன்பின் மகிழ்ச்சி) என்ற அப்போஸ்தலிக்க திருத்தூது மடலானது கடந்த 08.04.2016 அன்று வெளியிடப்பட்டது. 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற உலக ஆயர்கள் பேரவையின் இறுதி அறிக்கைத் தொகுப்பாக இந்த மடல் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. நடந்துமுடிந்த இரண்டு ஆயர் பேரவைக் கூட்டங்களிலும் மையக்கருத்தாக விவாதிக்கப்பட்டது. 'குடும்பம்' தான்.

இன்றைய உலகில் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள், அவைகளுக்கான தீர்வுகள் இவை யாவும் விவாதங்கள், பகிர்வுகள், ஆலோசனைகள், பரிந்துரைகள் வழியாக பகிர்ந்துகொள்ளப்பட்டன. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களது தலைமையில் நடைபெற்ற இக்கூட்டங்களில் கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள், குடும்பங்களிலிருந்து பிரதிநிதிகளாக சென்ற இறைமக்கள் யாவரும் கலந்துகொண்டனர்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இம்மன்றங்களின் கருத்துப் பகிர்வுகள் பல புதிய, வரவேற்கத்தக்க எண்ணங்களைத் தந்திருக்கின்றன. மன்றங்களில் விவாதித்தவைகள், பகிர்ந்துகொண்ட பரிந்துரைகள், பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இவை யாவும் தொகுத்து உள்ளடக்கப்பட்டிருப்பதுதான் 'ஆமோரிஸ் லெத்திசியா' என்ற இத்திருத்தூது அறிக்கை. குடும்ப வாழ்வை, அதன் மேன்மையை, அதன் புனிதத்தை பண்புகளை விவரிக்கின்றது இந்த அறிக்கை.

குடும்பங்கள் பற்றிய திருச்சபைப் போதனையானது கடினமாக இல்லாமல், மறைப்பணிக்கு ஏற்றாற்போல, மேய்ப்புப்பணிக்கு உகந்ததாக இருக்க வேண்டும். இறைமக்களின் குடும்ப வாழ்வைப் பாராட்டும் விதத்திலும், குடும்பங்கள் சிறப்புடன் வாழ்வதற்கு துணைபுரியும் விதத்திலும் திருச்சபை செயல்பட வேண்டும் என்றும் திருத்தந்தை வலியுறுத்துகின்றார். குடும்பங்களில் இருக்கும் இறைமக்களைத் தீர்ப்புக்குள்ளாக்கும் வார்த்தைகளால் கண்டிக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, குடும்பங்களைப் புரிந்துகொள்ளும் நிலைக்கு திருச்சபை வரவேண்டும் என்று திருத்தந்தை அழைப்பு விடுக்கிறார்.

**'அன்பின் மகிழ்ச்சி' என்ற திருத்தந்தையின் திருத்தூது மடல் கூறுகின்ற முக்கிய 10 விடயங்கள்:**

### 1. குடும்பங்கள், தனிநபர்கள்பற்றி திருச்சபை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்

வாழும் தளங்களில் மக்களைப்பற்றி திருச்சபை அறிந்து கொள்ளுதல் அவசியம். சிக்கல்கள் நிறைந்த குடும்ப சூழ்நிலைகளை உணராமல் தீர்ப்புக்களை அளிப்பதை தவிர்க்க வேண்டும். புரிதல், பரிவுகொள்ளுதல், உடன் இருத்தல் என்னும் பண்புகளை திருச்சபைப் பணியாளர்கள் கொண்டிருக்க வேண்டும். நற்செய்தியின்படி வாழ இறைமக்களைப் பணியாளர்கள் தூண்ட வேண்டும். இரக்கமற்ற, கண்மூடித்தனமான சட்டங்களை குடும்பங்கள்மீது திணிக்கக்கூடாது. திருச்சபை இரக்கத்துடனும், கனிவுடனும் நடந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் தனித்துவம் வாய்ந்தது என்பதை கண்டுணர்ந்து இரக்கத்துடன் செயல்பட வேண்டும்.

### 2. ஒழுக்கநெறியில் முடிவுகள் எடுக்கும்போது மனச்சான்று மிக முக்கியமானது

தனிநபர் சம்பந்தப்பட்ட மனச்சான்று முக்கியமானது என்பதை திருச்சபை உணரவேண்டும். வெறும் சட்டங்களைப் பின்பற்றாமல் இறைவன் மனச்சான்று வழியாக என்ன உணர்த்துகிறார் என்பதை அறிந்துவாழ மக்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அந்த மறைக்கல்வி அறிவு நல்ல மனச்சான்றுக்கு வழிஅமைக்கும் என்பதையும் திருத்தந்தை தெளிவுபடுத்துகிறார்.

### 3. விவாகரத்து செய்வோரையும், மறுமணம் புரிந்தோரையும் திருச்சபை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்

விவாகரத்து செய்த தம்பதிகள், மறுமணம் செய்துகொண்டோர், இவர்களைத் திருச்சபை புறம்பே தள்ளாமல், அவர்களை திருச்சபையின் அங்கத்தினர்களாக நடத்த வேண்டும். கண்டன வார்த்தைகளால் பேசுவதோ, தீர்ப்புகளை வழங்குவதோ நாம் செய்யக்கூடாது. தனிப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, இத்தகைய சகோதர சகோதரிகளை தன்மானத்துடனும், மதிப்புடனும் நடத்த வேண்டும். இவர்கள் திருச்சபையின் அங்கத்தினர்கள்.

### 4. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நல்ல கிறிஸ்தவ வாழ்வு வாழ உற்சாகப்படுத்த வேண்டும்

'அன்பின் மகிழ்ச்சி' என்ற இக்கையேடு இல்லற அன்பு, குடும்பம் - குழந்தைகள் என்பதைப் பற்றிய எண்ணங்களை அதிகமாக அளிக்கின்றது. மேலும் நமது திருத்தந்தையின் அறிவுரைகள், பரிந்துரைகளையும் இது கொண்டிருக்கின்றது. குடும்ப வாழ்வு நிறை – குறைகளை உள்ளடக்கியது. எனவே, இல்லறம் என்பது ஒரு பயணம், மேடு பள்ளங்களைக் கடந்து செல்லும் பயணம் என்கிறார் திருத்தந்தை. கடவுளின் அன்பிலிருந்து விலகி இருப்பவர் எவரும் இல்லை என்று கூறும் இவர், பெற்றோருக்கும், தாத்தா – பாட்டிகளுக்கும் மற்ற உறவுகளுக்கும் தேவையான அறிவுரைகளைத் தருகிறார்.

### 5. பாவத்தில் வாழ்கின்றார் என்று நாம் ஒருபோதும் பிறரைப்பற்றிச் சொல்லக்கூடாது.

உடைந்த குடும்பங்களில் வாழ்வோர், பிரிந்து வாழ்வோர் இவர்களைப்பற்றிக்கூறும்போது, இவர்கள் பாவத்தில் இருக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது.

பிறர் வாழ்வில் கல்லெறியும் மனப்பான்மை அறவே நீக்கப்பட வேண்டும். குடும்ப சிக்கல்களினால் தனித்து வாழ்வோரையும் கண்டனத்துக்கு உட்படுத்துவது முறையற்றது. இங்கே சட்டங்களைப் பயன்படுத்தித் தீர்ப்பு அளிக்கும் ஆணவப்போக்கு நீக்கப்பட வேண்டும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### 6. ஒருசில இடங்களில் செயல்படுத்தப்படும் வழிமுறைகளை எல்லா இடங்களுக்கும் பொருந்தவேண்டும் என நினைக்கக்கூடாது

கலாச்சாரம் நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது. சட்டங்கள், சம்பிரதாயங்கள், பண்பாடுகளும் வேறுபடுகின்றன. வழிமுறைகள் வேறு இடங்களில் பொருந்துவது இல்லை. குடும்ப வாழ்வில் எழுகின்ற எல்லாக் கேள்விகளுக்கும் பொதுவான பதில்களைத் தரக்கூடாது.

### 7. திருமணம்பற்றிய மரபுசார்ந்த போதனைகள் மாறவில்லை, ஆயினும் திருச்சபை இயல்பற்ற எதிர்பார்ப்புக்களைக் குடும்பங்கள்மீது திணிக்கக்கூடாது

திருமணம் என்பது ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படுத்தப்படும் உடன்படிக்கை. ஓரினச் சேர்க்கை திருமணமாகக் கருதப்படாது. இயற்கையான, ஆரோக்கியமான திருமண வாழ்வை திருச்சபை என்றும் ஆதரிக்கின்றது. பல நேரங்களில் குடும்பங்களின் சூழ்நிலைகளை திருச்சபைப் பணியாளர்கள் உணர்ந்துகொள்வதில்லை. தேவையற்ற நிபந்தனைகளைக் குடும்பங்கள்மீது சுமத்தலாகாது.

### 8. குழந்தைகளுக்கும் வாழ்க்கைக் கல்வியை கொடுக்க வேண்டும்

உடலை ஒரு பொருளாகக் கருதாமல் இறைவனின் கொடையாகக் கருதவேண்டும். பாலின முதிர்ச்சி, அதற்கான தெளிவு, இவற்றைக் குழந்தைகளுக்கு முறையாகக் கற்பிக்க வேண்டும்.

### 9. ஓரினச் சேர்க்கை இயல்புடையவர்களையும் மதிக்க வேண்டும்

ஓரினச் சேர்க்கை என்பது திருமண வாழ்வில் அனுமதிக்கப்படாது. எனினும் இத்தகைய ஈடுபாடு கொண்டவர்களை அவமதிக்கக்கூடாது. யாரையும் இழிவாக நடத்துவது, இழிவாகப் பேசுவது நீக்கப்பட வேண்டும். திருநங்கைகள் என்ற நிலையில் இருப்போரைக் கனிவுடன் அணுகி, அவர்கள் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றத் தேவையான ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

### 10. அனைவரையும் வரவேற்கும் திருச்சபை

திருச்சபை யாரையும் புறக்கணிக்கக்கூடாது என்று திருத்தந்தை வலியுறுத்துகிறார். திருச்சபைக்குள் அனைவரும் வரவேற்கப்படுகின்றனர். திருச்சபை என்பது திருப்பணியாளர்களின் சொத்து அல்ல, ஆணவத்திற்கும், அடக்குமுறைக்கும் இங்கே இடம் இல்லை. அனைவருக்குமான இல்லமாக திருச்சபை விளங்கவேண்டும். மேய்ப்புப்பணி நிறைந்த, இரக்கம் நிறைந்த திருச்சபையாக நாம் திகழவேண்டும். அன்பில் மகிழும் திருச்சபையாக குடும்பங்களும், நமது அன்பியங்களும், திருச்சபை பணித்தளங்களும் திகழவேண்டும். குடும்பம் திருச்சபையின் மிக முக்கியமான அங்கம். திருச்சபையோ குடும்பங்களின் குடும்பம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# பாவம் நம்மைக் கடவுளிடமிருந்து பிரித்தாலும் நாம் அநாதைகளாக விடப்படுவதில்லை


பாவம் நம்மைக் கடவுளிடமிருந்து பிரித்தாலும் நாம் அநாதைகளாக விடப்படுவதில்லை என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய ஆவியார் பெருவிழா ஞாயிறன்று, வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் நிறைவேற்றிய திருப்பலி மறையுரையில் கூறினார்.

நாம் கடவுளின் குழந்தைகளாக ஆக்கப்பட்டிருப்பது, நம் மரபணுவிலேயே (DNA) உள்ளது என்றுரைத்த திருத்தந்தை, இறைத்தந்தையால் நமக்கு வழங்கப்பட்ட தூய ஆவியார், நம்மை இறைத்தந்தையிடமே மீண்டும் இட்டுச்செல்கிறார் என்றும் கூறினார்.

நாம் நம் ஆண்டவரோடு ஒப்புரவாகி, அவரின் குழந்தைகளாகத் தொடர்ந்து வாழ இயலும். புனித பவுல் உரோமையருக்கு எழுதிய மடலிலிருந்து மேற்கோள்காட்டி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய ஆவியாரால் வழிநடத்தப்படும் எல்லாரும், இறைவனின் குழந்தைகள் என்றும், அச்சத்தில் வீழ்வதற்காக அடிமையின் ஆவியை நாம் பெறவில்லை, மாறாக, மகனுக்குரிய நிலைமையின் ஆவியைப் பெற்றுள்ளோம் என்றும் கூறினார்.

நம்மைச் சுற்றி மக்கள் வாழ்ந்தாலும், நம் மனதில் தனிமையை உணர்கிறோம். இந்தத் தனிமை, ஆன்மீக அறிவின்மை, நம்முடன் வாழ்வோரை உடன்பிறந்தோராக நோக்காமை உட்பட, அநாதைகளாக வாழ்கின்ற பல்வேறு அடையாளங்களை இன்று நாம் பார்க்கிறோம். இந்தத் தனிமை, வாழ்வின் பொருளையே கேள்வி கேட்கின்றது என்று கூறிய திருத்தந்தை, இந்தத் தனிமை, இறைவனிடமிருந்து பிரிந்து வாழ முயற்சிக்கும் அடையாளமாகவும் உள்ளது என்றார்.

திருத்தந்தை பிரான்சிஸ்



இயேசுவின் தாயாகிய மரியா, திரு அவையின் தாய், எல்லாக் கிறிஸ்தவர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குத் தேவைப்படும் தூய ஆவியாரை நமக்குப் பெற்றுத்தருவாராக என்றும் தன் மறையுரையில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

## சிறுவர், சிறுமியரே, இரக்கச் செயல்களை ஆற்றுங்கள்

இயேசுவின் முகத்தைப் பிறரில் ஏற்பதற்கு, உடலளவிலான இரக்கச்செயல்களை நடைமுறைப்படுத்துங்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பல்லாயிரக்கணக்கான வளர் இளம் பருவத்தினரிடம் கூறினார். கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி சனிக்கிழமை அன்று உரோம் ஒலிம்பிக் அரங்கத்தில் யூபிலி விழாவைச் சிறப்பித்த அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட வளர் இளம் பருவத்தினரிடம் காணொளிச் செய்தி வழியாகப் பேசிய திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

ஒவ்வொரு நாள் வாழ்விலும் ஆற்றப்படும் இரக்கச் செயல்கள், எளிய சாதாரண செய்கைகள் பல மனிதரில் ஏன் இளையோரில்கூட இயேசுவின் முகத்தைக் காணச்செய்கின்றன என்றுரைத்தார் திருத்தந்தை. உங்களைப் போன்ற இளையோர் பசியாலும் தாகத்தாலும் வாடுகின்றனர். புலம்பெயர்ந்தவர்களாக, நோயுற்றோராக நம் உதவியை, நம் நட்பைத் தேடுபவர்களாக இருக்கின்றனர் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

இரக்கம் மன்னிப்பின் தேவையை உணர்த்துகின்றது. மன்னிப்பது எளிதானதல்ல. சில நேரங்களில் குடும்பத்தில், பள்ளியில், பங்குத்தளத்தில், உடற்பயிற்சி மையத்தில், கேளிக்கை இடங்களில் யாராவது தவறு செய்யலாம் மற்றும் நாமும் புண்படுத்தப்படலாம், பிறர் மனத்தைப் புண்படச் செய்பவர்களில் நாமும் ஒருவராக இருக்கலாம் என்றும் திருத்தந்தை கூறினார்.

## காருண்யக் கொலைக்கு இந்திய ஆயர்கள் எதிர்ப்பு

இந்தியாவில் காருண்யக் (இரக்கக்) கொலையைச் சட்டமாக்குவதற்கு மத்திய அரசு முயற்சித்துவரும் வேளை, இது மனித வாழ்வின் மாண்புக்கு எதிரானது என்று சொல்லி, அதற்கு தங்களின் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் இந்திய ஆயர்கள்.

காருண்யக் கொலை குறித்த இந்தியக் கத்தோலிக்கரின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ள இந்திய ஆயர்கள் பேரவையின் நல்வாழ்வு ஆணையத்தின் செயலர் அருள்பணி. மத்தியு பரம்பில் (Mathew Perumpil) அவர்கள், அரசு காருண்யக் கொலையைச் சட்டமாக்கினால், மக்கள் மனம்போன போக்கில் செயல்படத் தொடங்குவார்கள் என்று எச்சரித்துள்ளார்.

காருண்யக் கொலையின் நோக்கம் எதுவாக இருப்பினும், இது அறநெறிப்படி ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது என்றும் அவர் தெரிவித்தார். இந்திய காரித்தாஸ் இயக்குனர் அருள்பணி. பிரடரிக் டி சொய்சா (Frederick D'Souza) அவர்களும், அரசு சட்டமாக்க முயற்சிக்கும் காருண்யக் கொலை (Passive euthanasia) தனது விருப்பத்தைத் தெரிவிக்க இயலாத நிலையிலுள்ள ஒரு மனிதரைக் கொல்வதற்குச் சமம் என்று கூறினார்.

"Passive euthanasia" என்பது, ஒரு நோயாளிக்கு மரணத்தை வருவிக்கும் நோக்கத்தில், அவருக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சையை நிறுத்திவிடுவதாகவும். எடுத்துக்காட்டாக, சிறுநீரகங்கள் செயல்படாமல் இருக்கும் ஒரு நோயாளிக்கு, அவர் உயிர் வாழ்வதற்கு உதவும் டயாலிசிஸ் சிகிச்சைக் கருவியை மருத்துவர்கள் திட்டமிட்டு அகற்றிவிடுவதாகும்.

## அன்பே கிறிஸ்தவரின் அடையாள அட்டை

### வளர் இளம் பருவத்தினரின் யூபிலி விழாவில் திருத்தந்தை



அன்பே கிறிஸ்தவரின் அடையாள அட்டை இதுவே கிறிஸ்தவர்களாக நம்மை அடையாளப்படுத்திக் காட்டும் தகுதியுடைய ஒரே ஆவணம். இந்த ஆவணம் காலாவதியாகிவிட்டாலும் தொடர்ந்து புதுப்பிக்கப்படாமல் இருந்தாலும் நம் போதகராகிய இயேசுவுக்குச் சான்றுபகர்வதை நாம் நிறுத்திவிடுவோம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கூறினார்.

இரக்கத்தின் யூபிலி ஆண்டில் தங்களின் யூபிலியைச் சிறப்பித்த, 13 வயதுக்கும் 16 வயதுக்கும் உட்பட்ட எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட வளர் இளம் பருவத்தினருக்கு வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் 24.04.2016 அன்று காலை 10.30 மணிக்கு நிறைவேற்றிய திருப்பலி மறையுரையில் திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாறு கூறினார்.

நீங்கள் இயேசுவின் அன்பை அனுபவிக்க விரும்புகின்றீர்களா? என்று வளர் இளம் பருவத்தினரைக் கேட்ட திருத்தந்தை, இயேசுவின் அன்பை அனுபவிக்க அவரின் திருச்சொற்களிலிருந்து கற்றுக்கொள்வோம். ஏனெனில் அவரின் திருச்சொற்கள் வாழ்வின் கல்விக்கூடம். அப்பள்ளியில் அன்புகூர கற்றுக்கொள்கிறோம் என்று கூறினார்.

அன்பு அழகானதாக இருந்தாலும் அது மகிழ்வின் பாதை என்றும், அது எளிதான பாதையாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், அதற்கு முயற்சி அவசியம் என்றும் திருத்தந்தை கூறினார். நாம் விரும்பும் பொருள்களைக் கொண்டிருப்பதிலிருந்தோ அல்லது நாம் விரும்புவதைச் செய்வதிலிருந்தோ சுதந்திரம் வருவதில்லை, ஆனால் உண்மையான சுதந்திரம் மற்றும் அன்பை இயேசுவில் அன்பில் மட்டுமே காணமுடியும் என்றும் திருத்தந்தை கூறினார்.

உங்களின் மகிழ்ச்சிக்கு விலை கிடையாது, இதை விலைக்கு வாங்கவும் முடியாது. உங்களின் கைபேசியில் தரவிறக்கம் செய்யக்கூடிய செயலி அல்ல அது. செயலியில் புதிதாகத் தரவிறக்கம் செய்யப்படுபவையும், அன்பில் சுதந்திரத்தையும் பெருமித உணர்வையும் கொடுக்காது என்றும் வளர் இளம் பருவத்தினரிடம் திருத்தந்தை கூறினார்.

அன்பு இலவசமாக வழங்கப்படும் கொடையாகும். அதற்குத் திறந்த இதயம் தேவை என்றும், இது வாழ்வு முழுவதும் செய்யப்பட வேண்டிய உன்னதப் பொறுப்பாகும் என்றும், பெரிய கனவுகளை எட்ட விரும்புவர்களுக்கு இது அன்றாடக் கடமையாகும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

நிறைய வளங்களைக் கொண்டிருந்தால்தான் வாழ்வு அழகானது என்று சொல்பவர்களையும் உண்மையான அரும்பொருள்களிலிருந்து உங்களைத் திசைதிருப்புவர்களையும் நம்பாதீர்கள். கிறிஸ்துவோடு நட்பாக இருப்பதால் ஒருபொழுதும் தனிமையை உணரமாட்டீர்கள்.

ஒவ்வொரு நாளும் முயற்சிசெய்து பயிற்சி எடுப்பதன் வழியாக உயர்ந்த இலக்குகளை எட்டும் விளையாட்டு வீரர்கள் போன்று ஒவ்வொரு நாளும் இரக்கத்தின் செயல்களை ஆர்வத்துடன் செய்து வாழ்வின் வீரர்களாகத் திகழுங்கள் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித எலிசபெத்

*அரசகுலக் குடும்பத் தலைவி*

*- (கி.பி. 1271 - 1336) -*



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இவர் ஸ்பெயின் நாட்டு மன்னன் 3-ஆம் பீற்றரின் மகள். ஸ்பெயின் மொழியில் எலிசபெத்தின் பெயர் இசபெல்லா. ஹங்கேரி நாட்டு அரசி புனித எலிசபெத்தின் பேத்தி. இவர் இளமை முதல் ஆழமான பக்தியிலும் தவமுயற்சிகளிலும் பழக்கப்பட்டிருந்தார். 12 வயதில் போர்த்துக்கல் மன்னன் டென்னிசுக்குத் திருமணமானவர். இவ்வரசன் தனது அரண்மனை வாழ்வில் கீழ்த்தரமாக வாழ்ந்ததால், இவனுக்குத் தவறாகப் பிறந்த ஒரு மகனும் இருந்தான்.

எலிசபெத் இத்தகைய சூழ்நிலையிலும் தம் ஆன்மீக வாழ்வில் மிகுந்த உறுதியும் ஆர்வமும் காட்டினார். அதிகாலையிலும், குறிப்பிட்ட வேளைகளிலும் குருக்கள் சொல்லும் (பிரிவியரி) கட்டளை செபத்தை இவரும் சொல்லத் தவறவில்லை. உண்ணா நோன்பையும் ஒறுத்தல் முயற்சிகளையும் பெருக்கிக்கொண்டே போனார். தம்முடைய கணவர் முன்கோபியாகவும் முரடராகவும் சிற்றின்பப் பிரியராகவும் நடந்துகொண்டாலும் தமது விசுவாசம் நிறைந்த செபத்தின் மூலம் தங்களின் 40 ஆண்டுத் திருமண வாழ்வில் இவர் வெற்றிகண்டார். கணவர் முற்றிலும் இறைவன் பக்கம் மனம்மாறிட வழிவகுத்தார்.

இதற்கு 12 ஆண்டுகளுக்குப்பின் மன்னர் இறந்தார். அதுமுதல் அருகிலிருந்த கிளாரம்மாள் துறவு மடம் சென்று அசிசியாரின் 3-ஆம் சபை உறுப்பினராக வாழ்ந்து வந்தார். ஏழைகளைப் பேணுவதில் மிகுந்த பணத்தையும் நேரத்தையும் செலவழித்தார். நோயுற்றவர்களுக்கும் ஒப்பற்ற பணியாற்றினார். இவரின் கணவர் இன்னும் முரடராக வாழ்ந்த நாட்களில், ஒருமுறை வயிற்றுப் பசியுடன் இருந்த நலிவுற்றோருக்கு அரண்மனையிலிருந்து கூடைநிறைய ரொட்டிகள் எடுத்துச் செல்கிறார். முரட்டுக் கணவர் "கூடையில் என்ன?" என்று வழிமறித்து, அந்தக் கூடையைத் திறந்து பார்த்தபோது, என்னே வியப்பு! ரொட்டிகள் காணப்படாமல் ரோஜா மலர்களாக நிறைந்திருந்தன.

அனைத்திற்கும் மேலாக, இவருக்கு 'அமைதி விரும்பி' என்றே முத்திரையிடப்பட்டிருக்கிறது. 5 முறை மிகக்கடுமையான சூழலில் அமைதியை நாட்டில் நிலைநாட்டினார். அமைதியை நிலைநாட்ட இறுதிமுறையாக எடுத்த நீண்ட அரிய பயணம் அவரது உயிரை வாங்கியது. கி.பி. 1323-ல் தம் மகன் அல்ஃபோன்சோ தன் தந்தையின் வைப்பாட்டியின் மகனுடன் போர் தொடுத்தபோது, எலிசபெத்தின் குறுக்கீட்டால் அமைதி ஏற்பட்டது. 13 ஆண்டுகளுக்குப் பின்னர், தாம் தங்கியிருந்த மடத்திலிருந்து வெளியேறி, ஸ்பெயினுக்குப் பயணமாகி அல்ஃபோன்சோவுக்கும் அவரின் மைத்துனர் காஸ்டில் நாட்டு மன்னருக்கும் இடையே அமைதியை நிலைநாட்டினார். தம் உடன்பிறந்தவரும் ஆரகோன் நாட்டு மன்னனுமான 2ஆம் ஜேம்சுக்கும் தம் இன்னொரு உறவினரும் காஸ்டில் மன்னனுமான 4ஆம் பெர்டினாண்டுக்கும் இடையிலும் அமைதியை உண்டுபண்ணினார்.

தம் கணவரை இறைவன் பக்கம் திருப்பியதும் இறைவனுடன் ஒப்புரவுசெய்து வைத்ததும் எலிசபெத்தின் மிகப்பெரிய சாதனை. கணவர் சாவுப்படுக்கையில் இருக்கும்போதுதான் அவரை மனந்திருப்பினார். கடைசிவரை கணவரை அருமை பெருமையாகக் கவனித்துக்கொண்டார்.

குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும், உயர் பதவியில் அரசியாக இருந்தாலும் புனிதராகலாம் என்பதற்கு இவர் சிறந்த சான்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 54

## போதைக்கு எதிரான போராட்டம் !

### *படைத்தவனைவிட பங்குத்தந்தைக்கே பயம்!*

மதுபானக் கடையில் நின்று இருவர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வழியே சென்ற பங்குத்தந்தை அவர்கள் இருவரும் குடிப்பதைப் பார்த்துவிடுகிறார். இதனை அவதானித்த அவ்விருவரில் ஒருவன், "டேய், நாம குடிக்கிறத பங்குப்பாதர் கண்டுட்டார்ரா!" என மிகுந்த பயத்துடனும் கவலையுடனும் சொல்ல மற்றயவன் சர்வசாதாரணமாக," அதுக்கே(ன்) பயப்பர்றா (பயப்படுகிறாய்)! நாம குடிக்கிறத கடவுளும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்!" என்கிறான். அதற்கு முன்னயவன், "கடவுள் பாக்கிறதப்பற்றி கவலையில்லடா! நாம குடிக்கிறத, கடவுள், நம்ம மனிசிமாரிட்ட போய்ச் சொல்லிக்கொண்டா இருக்கப்போறார்!" என மிகப் பரிதாபத்தோடு கூறினானாம்.

### *கண்ணை மூடுவதற்கான ஒத்திகை!*

"சாப்பிடும்போது தரையைப் பார்த்துச் சாப்பிடுகிறோம், பூமித் தாய்க்கு நன்றி சொல்ல. தண்ணீர் அருந்தும்போது வானத்தைப் பார்த்து அருந்துகிறோம், மேகத்திற்கு நன்றி சொல்ல. நீங்க சரக்கு அடிக்கும்போது கண்ணுரெண்டையும் இறுக்கி மூடிட்டுக் குடிக்கிறீங்க; ஏன்னா, சரக்கு சொல்லுது, 'என்னாலதான் நீங்க ரெண்டு கண்ணையும் ஒரேயடியா மூடப்போறீங்க' என யாரோ ஒருவர் முகநூலில் எழுதிய வாசகம் இது. மனதில் ஏதோ ஒருவகையில் இடம்பிடித்துவிட்டது.

### *கள்ளுத் தவறணை தந்த அனுபவம்!*

தென்னிலங்கை இருந்து வந்த அன்பர் ஒருவர் பனங்கள்ளுக் குடிக்க ஆசைப்பட்டார். பங்குனி மாத வெயில் அனலாய் வீசியது. அவ்வன்பருடைய சாட்டில் நானும் உடல் சூட்டினைத் தணித்துக் கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டு தவறணைக்கு அவ்வன்பரை அழைத்துக்கொண்டு சென்றேன். உடலைக் குளிர்மைப்படுத்த கள் நல்லது என்று பெரியவர்கள் சொன்னதைச் சிறுவயதில் கேட்டிருக்கிறேன்.

அதனால்தான், பொக்கிளிப்பான் போன்ற மிகுந்த வெப்பத்தினால் உண்டாகும் நோய்கள் வருகிறபோது கள்ளினைக் குடிக்கக் கொடுக்கிறார்கள். அதனை அளவோடு எடுக்கிறபோது மருந்தாக அது மாறுகிறது. ஆனால், இதனைச் சாதாரணமாக எடுப்பவர்கள் மருந்துபோலவா எடுக்கிறார்கள்? மாட்டுக்குத் தவிட்டையும் புண்ணாக்கையும் தண்ணீரோடு கலந்து வைத்தால் உறிஞ்சி இழுப்பது போலல்லவா வழித்துத் துடைத்துவிடுகிறார்கள்!

அன்றைய நாள் கள்ளுத் தவறணையில் கண்ட காட்சி பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது! அங்கு கூடிநின்ற சனக்கூட்டத்தைப் பார்த்தபோது பயந்தே போனேன். அச்சிறிய இடத்தில் அத்தனை பேர்! அவ்விடம் நிரம்பி வழிந்தது! மிக நெருக்கமான உறவுக்காரர்கள்கூட அவ்வளவு அன்னிய ஒன்னியமாகப் பழகமாட்டார்கள்! என்ன ஒற்றுமை! என்ன சகோதரத்துவம்! அப்போதுதான் முதல் சுற்று முடிந்திருந்ததால் அங்கு அவ்வளவு தோழமை உணர்வும், நட்பும், சகோதரத்துவமும் நிலவத் தொடங்கியிருந்தது என்பதை உணர்ந்துகொண்டேன். இப்பாசமும் நேசமும் எவ்வளவு நேரத்திற்கு நீடித்திருக்கும் என்பதை அங்கு தொடர்ந்து இருந்து பார்த்திருந்தால்தான் முழுமையாக அறிந்திருக்கலாம்! காரணம், இரண்டாம் சுற்று முடிந்ததும் அனேகமாக பேச்சுவார்த்தைகள் சூடுபிடிப்பதும், கைகலப்புக்கள் இடையிடையே நடந்தேறுவதும் அங்கு சாதாரணமானதே.

அங்கு நின்றவர்களில் எனக்குத் தெரிந்த ஒருவர் என்னைக் கண்டதும் நான் ஏதும் கதைக்காமலேயே தன் நண்பர்களிடம் என்னைப்பற்றி எனக்குக் கேட்கும்படியாகவே தன்னுடைய உரையாடலை ஆரம்பித்தார். "பாவம் பாதர்! இந்த வெயில் வெக்கையில, அவர்தான் என்ன செய்வார்! சூட்டைத் தணிக்க கள்ளு நல்லதுதானே! (என்னைப் பார்த்தபடி) நீங்க வாங்க பாதர். உங்களுக்கு விளங்குறது நம்ம மனிசி புள்ளைகளுக்கு விளங்குதில்லையே! உண்மையில, நீங்க குடுத்து வச்ச நீங்க! உங்களுக்குத்தான் அதுகளொண்டும் (மனைவி, பிள்ளைகளைக் குறிப்பிடுகின்றார்) இல்லையே! கரச்சல் இல்லாத ஆள்! இந்தா வாறீங்க போறீங்க! யாரு உங்களக் கேக்குறது..." எனத் தானே தொடங்கிய கதையைத் தானே நிறைவுசெய்தார்.

### *குடிப்பதற்கும் முன்னுதாரணம்!*

அமலமரித்தியாகியான அமரர் பாவிலுப்பிள்ளை சுவாமி புதுக்குடியிருப்பு பங்குத்தந்தையாராக 1970களில் இருந்தபோது மாத்தளனில் திருப்பலி நிறைவேற்றியபின் புதுக்குடியிருப்புக்கு துவிச்சக்கர வண்டியில் வருகின்ற வழக்கம் உடையவர். இவ்வூர் இரண்டிற்கும் இடையில் அமைக்கப்பட்டிருந்த கள்ளுத் தவறணையினால் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டன. கண்மண் தெரியாமல் குடிப்பது, பின் சண்டைபிடிப்பது, ஆளுக்கு ஆள் அடிபடுவது என கணிசமானவர்களுடைய வாழ்க்கை அந்நாட்களில் நகர்ந்தது. இதற்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் எனப் பாவிலுப்பிள்ளை சுவாமி நினைத்தார்,

ஒருநாள் ஞாயிற்றுக் கிழமை திருப்பலி முடிந்து பங்குமனைக்குத் திரும்பிவருகையில் தவறணைக்குச் சென்று பிளாவை எடுத்து தவறணைக்காரனிடம் நீட்டுகிறார். தவறணையில் நின்றுகொண்டிருந்த 'பெருங்குடி மக்கள்', "ஐயையோ! சுவாமி அல்லோ வந்திட்டார்!" என அல்லோல கல்லோலப்படுகிறார்கள். தவறணைக்காரன் வேர்த்து வியர்த்து விறுவிறுத்து நிற்கிறான். பாவிலுப்பிள்ளை சுவாமி, "ஊத்தடா இரண்டு போத்தல்!" என



அதட்ட, அவன் பிளாவினுள் கள்ளினை மளமளவென ஊற்ற, மடமடவென ஓரே இழுவையில் இழுத்துமுடித்துவிட்டு, "தவறணைக்கு வாறியா, கள்ளை வாங்கிறியா, குடிக்கிறியா, வீட்டுக்கு போறியா என்றில்லாமல் இங்க இருந்து கதவழியும், பேச்சும், சண்டையும், சச்சரவும்! இந்தா பார்! வந்தன், எடுத்தன், குடிச்சன், வீட்டுக்குப் போறன்! இப்பிடித்தான் இருக்கவேணும்! என்னப் பாத்துப் பழகு!" என்று பாடம் புகட்டிவிட்டு சென்றாராம் என அவரைப்பற்றி சொல்லப்படுகின்ற பல சுவாரசியமான சம்பவங்களுள் இதுவும் ஒன்றாகக் கூறப்படுகின்றது. அவர் 'கள்' குடிப்பதற்குக்கூட சில ஆரோக்கியமான அணுகுமுறைகளைச் சொல்லிக்கொடுக்கவேண்டி இருக்கிறது! மருந்தாக – நல்ல பானமாக பார்க்கப்பட வேண்டிய, பயன்படுத்தப்பட வேண்டிய கள்ளினை வெறுப்புக்குரிய ஒன்றாக இன்று நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

### *என்றுமில்லாத அடாவடித்தனங்கள்!*

கல்வியில், கலைகளில், பண்பாட்டில், வீரத்தில் தலைசிறந்து விளங்கிய தமிழர் தாயகத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில், இம்மண்ணின் வரலாற்றில் இதுவரை பதியப்படாத வாள் வெட்டுக்களும், போதைப்பொருள் பாவனைகளும், துஸ்பிரயோகங்களும் ஆயுதப் போர் நிறைவுக்குவந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையில் கோலோச்சி நிற்கின்றன. இவ்வகையான அழிவின் சக்திகள் இன அழிப்பின் வெவ்வேறான வடிவங்களோ என எண்ணத் தோன்றுகிறது. வாள்வெட்டுக்கும் அடாவடித்தனங்களுக்கும் துஸ்பிரயோகங்களுக்கும் ஏனைய சமூக விரோதச் செயல்களுக்கும் முக்கிய காரணமாக விளங்குவது போதைப்பொருட்களின் பாவனை என்பது சந்தேகத்திற்கு இடமின்றி பல தரப்பினர்களாலும் நிரூபிக்கப்படுகிறது.

### *போதை ஏற்படுத்தும் போர்க்களம்!*

குறிப்பாக இளையோர் - மாணவர்கள் இப்போதைப் பொருட்களின் பாவனைக்குப் படிப்படியாகத் தூண்டப்பெற்று பலர் ரவுடித்தனங்களில் ஈடுபடும் நிலை உருவாகியிருக்கிறது. இவ்வாறான ரவுடித்தனங்களிலும் வாள்வெட்டுக்களிலும் தெருச்சண்டைகளிலும் ஈடுபடும் மாணவர்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டி வரும் என்றும், உயர்கல்வி கற்க முடியாத நிலை உருவாகும் என்றும் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் இவ்வாண்டு சித்திரை மாதம் நடைபெற்ற ஒரு வழக்கு விசாரணையில் எச்சரித்துள்ளார். இவ்விடயத்தில் பெற்றோர் முதல் குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

மேலும், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் ரவுடித்தனங்கள், வாள்வெட்டுக்கள், அடாவடித்தனங்கள் போன்றவற்றை ஒடுக்குவதற்கு தேவையெனில் பொலிசார் அதிரடிப்படையினரின் உதவியுடன் உடன் நடவடிக்கையில் இறங்குமாறும் இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருமாறும் கட்டளை பிறப்பிக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் எனில்



தற்போதைய களநிலை மிகமிக மோசமானது – ஆபத்தானது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

எனவே, இப்பிரச்சினைகளுக்குக் காரணமாயிருக்கிற போதைப் பொருட்கள் மட்டில் அனைத்துத் தரப்பினரும் விழிப்பாய் இருப்பது மிகமிக - மிகமிக இன்றியமையாதது. போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்கு வழிவகைகள் மேற்கொண்டாலும் அவை இன்னும் முற்று முழுதாக கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படவில்லை என்பதுபோலத்தான் தோன்றுகிறது. போதைப்பொருட்களை ஆரம்ப நிலையில் பாவிப்பவர்களை இனம் காண்பது கடினம். குடும்ப அங்கத்தவர்களிடையேயும் விளிப்பாய் இருப்பது அவசியமாகிறது. குறிப்பாக பெற்றோர்கள் தம் இளம் பிள்ளைகள் மட்டில் இவ்விடயத்தில் கரிசனைகொள்வது காலத்தின் கட்டாயமாகிறது. ஆரம்பநிலையில் போதைப்பொருள் பாவனையாளர்களாக இருப்பவர்கள் அவற்றை விட்டுவிட தொடக்கத்திலேயே சிகிச்சைகள் அளிக்கப்படுவது அவசியமானது.

### *எம் பிரியத்திற்குரிய பெருங்குடி மக்கள் அறியவேண்டியது!*

செல்தி லங்கா நிறுவனத்தின் வேலைத்திட்டப் பணிப்பாளர் சாமிங்க ஜயசிங்க 2016 பங்குனித் திங்கள் 03ஆம் திகதி காலி மாவட்டத்தில் மதுவிலிருந்து விடுதலைபெறுவது தொடர்பிலான விழிப்புணர்வு ஊட்டும் வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், இலங்கையில் ஆண்களில் 40 சதவீதத்தினரும், பெண்களில் 02 சதவீதத்தினரும் மதுப்பாவனைக்கு உட்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். மேலும் நாட்டின் மருத்துவமனைகளின் கட்டில்களை மதுப் பாவனையாளர்களில் 20 சதவீதத்தினர் நிறைத்துள்ளனர் என்னும் அதிர்ச்சிதரும் தகவல் வெளியிட்டுள்ளார். அதாவது நாடளாவிய ரீதியில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் 20 சதவீதத்தினர் மதுப்பாவனையால் ஏற்படும் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதாகும். இப்புள்ளி விபரம் துல்லியமானது என்றால் இவ்விடயம்பற்றி யாரும் அசட்டையீனமாக இருந்துவிட முடியாது என்பது மட்டும் தெளிவாகிறது.

மேலும், இலங்கையில் 300 தொடக்கம் 350 குடும்பங்கள் வாழும் கிராமமொன்று ஆண்டொன்றுக்கு மதுவுக்கும் புகைத்தலுக்கும் என ஒன்றரைக்கோடி ரூபாவைச் செலவழிப்பதாக செல்தி லங்கா நிறுவனப் பணிப்பாளர் சட்டத்தரணி சத்திய நாணயக்கார மேற்சொன்ன நிகழ்வில் கலந்துகொண்டு கூறியிருக்கிறார். இந்நாட்டில் சுமார் 16,000 கிராமங்கள் உள்ளன. அதன் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு நாட்டின் வருமானம் எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்பதை நாமே கணக்கிட்டுக்கொள்ள முடியும். நாட்டின் மிகப்பெருந்தொகை வருமானம் சிறுநீராகக் கழிகிறது என்ற சுருக்கமாகச் சொல்லலாம்போலத் தோன்றுகிறது! அத்துடன் இதனால் நோயுறும் ஆயிரமாயிரம் நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வதால் இன்னும் பெரும் தொகைப்பணம் வீண்விரயம் செய்யப்படுகிறது.

காலியான சாராயப் போத்தல், 'இன்று உன்னால் நான் காலி! நாளை என்னால் நீ காலி' எனச் சொல்லும் உண்மையை எத்தனைபேர் உணர்ந்து கொள்கிறார்கள்? 'குடிச்சா அரசாங்கத்துக்கு வருமானம். போதையில வண்டியோட்டினா பொலிசுக்கு வருமானம். அடிபட்ட உங்களுக்கு அவமானம் மட்டுமே' என்ற ஒரு நபரின் அனுபவம் இன்னும் ஆழமான அர்த்தத்தினைக் கொடுக்கிறது.

### *சுவையில் ஒன்றையொன்று ஒத்ததே!*

அன்றைய நாள் 'ஆசிரியர் தினம்' என்பதால் மாணவர்கள் தம்முடைய ஆசிரியர்களுக்குப் பரிசுப்பொருட்களைக் கொண்டுவந்து கொடுத்தவண்ணமாக இருக்கின்றனர். சுரேஸ்சின் தந்தையார் அந்நகரில் மதுபானக்கடை ஒன்றை வைத்திருக்கிறார் என்பதை அவ்வாசிரியர் அறிந்திருந்தார். சுரேஸ் கொண்டுவந்த பரிசுப்பார்சலில் இருந்து ஏதோ ஒழுகிக்கொண்டிருப்பதை ஆசிரியர் அவதானிக்கிறார். அது ஒருவகை மதுபானமாகத்தான் இருக்கவேண்டும் என நினைத்துக்கொண்ட ஆசிரியர் அதனைத் தொட்டுச் சுவைத்துவிடவேண்டும் என்ற ஆசையில் தொட்டுச் சுவைபார்த்த பின், "சுரேஸ், பரிசாக பிறண்டி போத்தலா கொண்டு வந்திருக்கிறாய்?"என மிகவும் இரகசியமாகக் கேட்க அவன்," இல்லை சேர்!" என மறுத்துவிடுகிறான்.

சுரேஸ்சுக்கு அடுத்ததாக நின்ற மாணவன் நிரோஸ். அவனின் தந்தை மரக்கறிக்கடை வைத்திருந்ததை அறிந்திருந்த ஆசிரியர், "நிரோஸ் நீ மரக்கறி கொண்டுவந்திருக்கிறாய்! அப்படித்தானே?" என வினவ அவன், "ஆம் சேர்" என்கிறான். இவ்வாறு ஏனைய மாணவர்களின் பாச்சலில் உள்ளவற்றை துல்லியமாகக் கண்டுபிடித்த ஆசிரியர் சுரேஸ்சின் பார்சலே ஆதங்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. எப்படியாவது சுரேஸ்சின் பார்சலில் இருப்பதை அறிந்துவிடவேண்டும் எனத் துடித்த ஆசிரியர் சுரேஸ்சின் பார்சலில் இருந்து ஒழுகுவதை மீண்டும் தொட்டுச் சுவைத்துப் பார்த்தபின், "சுரேஸ், நீ கொண்டுவந்திருப்பது விஸ்கி!"என உறுதிபடக் கூறுகிறார். அதற்கும், "இல்லை" எனக் கூறிவிட்டுச் சென்றுவிடுகிறான் சுரேஸ். பின் மாணவர்கள் அனைவரும் சென்றபின் ஆசிரியர் ஆவலுடன் அவசர அவசரமாகப் பார்சலைத் திறந்து பார்த்தபோது 'பொமனேரியன்' நாய்க்குட்டி இருப்பதைக் காண்கிறார்.

### *நிறைவாக!*


விஸ்கியோ, பிரண்டியோ அல்லது இவற்றை ஒத்தவை எவையோ; அவை, சுவையில் ஏறக்குறைய மேற்சொன்ன சம்பவத்தில் வருகின்ற பொமனேறியனின் 'அதை' ஒத்தது என்பது போலத்தான் மேற்சொன்ன சம்பவத்தில் இருந்து தெரிகிறது. இதிலிருந்து கிடைக்கின்ற ஒரு முடிவு என்னவென்றால் இரண்டின் சுவைகளையும் அறிந்தவர்கள் குடியை விட்டுவிடுவார்கள் என்பதுதான்! ஆக, இப்போது செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்! மதுவகைச் சுவை மாத்திரம் தெரிந்தவர்கள் பொமனேரியனின் 'அதை' ஒருதடவை சுவைத்துப் பார்ப்பதன் வழியாக குடியை விட்டுவிடுவதற்கான வாய்ப்பை இவர்கள் உருவாக்கலாம்போல் தோன்றுகிறது! இவர்கள் ஒரு தடவையாவது முயற்சித்துப் பார்ப்பார்களா? (கருத்துக்களுக்கு: இமெயில் anpuomi1970@gmail.com அல்லது விலாசம்; 'அமதிக்கரங்கள்', மாங்குளம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

மன்னார் அமுதன்

# ஒற்றை யானை



தலை கிறுகிறுக்க அருகில் இருந்த பிளாஸ்டிக் கதிரையை பிடித்தாள். கதிரையில் ஒட்டியிருந்த செலோடேப்பில் ஈரக்கைபட்டு வழுக்கியது. கதிரை சாய்ந்துவிட நெற்றி போய் சுவரில் மோதிக்கொண்டது. வலித்த நெற்றியைத் தடவியபோது விரலில் இரத்தம் பிசுபிசுத்தது. சுவரோடு சாய்ந்துகொண்டாள். கால்கள் வலுவற்று தரையில் நிலைகொள்ள மறுத்தன. அப்படியே இருந்துவிட்டால் சுகமாயிருக்கும் போலிருந்தது. அது ரணமாகவிருந்தாலும் வேறு வழியில்லை..... சிறிது நேரம் அப்படியே இருந்துதான் ஆகவேண்டும். உதவிக்கு ஆளில்லாத வீட்டில் எவ்வளவு நேரம் அப்படியே இருந்திருப்பாள் எனத் தெரியாது. முழிப்பு வந்தபோது பசித்தது. எழுந்துகொள்ள முடியாதபடி கால்கள் வலித்தன. பிளாஸ்டிக் கதிரையை நம்ப முடியாது. ஊன்றி எழும்பும்போது திரும்பவும் வழுக்கிவிடும். மெள்ளத் தவண்டு சாய்மானக் கதிரைக்குக் கிட்டப்போனால் ஊன்றி எழும்பிவிடலாம். கோயிலுக்குப்போன மூத்தவள் வாறதுக்குள்ள எப்படியாவது எழும்பிரனும்.

முதுமைக்கென்றே இருக்கும் அழகில் ஒருமுறை முக்கியெடுக்கப்பட்ட தோற்றம் டெய்சியாச்சிக்கு. மலையிலிருந்து தலைவிரிகோலமாய் இறங்கும் ஆற்றின் வகிடினைப்போல சுருக்கங்கள் நிறைந்தது அவள் முகம். ஒடுங்கிய கண்களுக்குள் இன்னும் ஒளி இருந்தது. கண்களினடியில் பைவிழுந்துவிட்டது. செத்துவிட ஆசைப்படும் வயது. இரண்டு உலகப் போர்களையும் கண்டவள். அம்பத்தியாறாம் ஆண்டு மொழிப்பிரச்சினையில் புருசன் வேலையைத் தூக்கியெறிந்துவிட்டு வந்தபோது அய்ந்தாவது பிள்ளையாக அவரையும் ஏற்றுக்கொண்ட கருணை இன்னும் வடியாமல் இருந்தது. ஒவ்வொரு சனிக்கிழமையும் சுடுதண்ணீர் வைத்து முழுகிவிடுவாள். ஞாயிற்றுக்கிழமை ஏழுமணிப் பூசைக்கு அவள் போகும்போது அறுவதை நெருங்கும் ஆச்சிகளுக்கு அசிட் குடித்ததைப்போல வயிறு எரியும். சாகிற காலத்துல சென்ட் அடிச்சிட்டு திரியுறா பாரென துப்பிக்கொள்வார்கள்.

ஊன்றி எழும்பியபோது தலைசுற்றுவதைப் போலிருந்தது. கைத்தடியை எடுத்துக்கொண்டால் தேவலாம். கனடாவில் இருந்து வந்திருக்கும் மூத்தவள் வாங்கியனுப்பியது. கை பிடிக்கும் இடத்தில் ஒரு வாய் திறந்த யானை தும்பிக்கையை உயர்த்தி பிளிறிக்கொண்டிருந்தது. எண்பதாவது வயதுவரை கைத்தடியை பாவிக்கவில்லை.

ஆனால் வெளியில் எங்கும் போகும்போது தனது கையில் கொழுவிக்கொள்வாள். மகளை ஒத்த வயதுடையவர்கள் வரும்போது பெருமையாகக் காட்டுவாள். அவளுக்கு கைத்தடியை ஊன்றுவதும் கண்ணாடியைப் பாவிப்பதும் கௌரவக்குறைச்சல்தான். ஆனால் தனித்த இரவுகளில் கைத்தடியை அருகில் வைத்துக்கொள்வாள். அந்த யானை தன்னை தும்பிக்கையை உயர்த்தி ஆசிர்வதிப்பதைப்போல இருக்கும். சில இரவுகளிலும், நீண்ட பகலிலும் யானையின் பிழிறல்கள்கூட கேட்டதுண்டு. முன்வாசலில் இருந்து சாலையைப் பார்த்தபடி யானையின் தலையைத் தடவிக்கொண்டிருப்பதில் அவளுக்கு நிறைய விருப்பம். அது தனது கனடா பூட்டனின் முன்தலையத் தடவியதை ஞாபகப்படுத்தும்.

பாக்கு போட்டதைப்போல தொண்டை அடைத்துக்கொள்ள செருமிக்கொண்டாள். வழிந்த கண்ணீரைத் துடைக்கவில்லை. முகத்தைக் கழுவிக்கொண்டாள். இரத்தம் நின்றிருந்தது.

இரண்டு இடியப்பத்தைப் போட்டுக்கொண்டு குசினிக்குள் இருந்த கதிரையை இழுத்துப்போட்டு இருந்தாள். நேரத்தைக் கடத்துவதற்காக ஒவ்வொரு நாளும் சமைக்கிறாள். வர வர சாப்பாட்டில் நாட்டமில்லை. குசினிக்குள் வியர்த்து வடிந்தது. இரத்த அழுத்தம் கூடியிருக்கலாம். மனம் ஒரு இடத்தில் நின்றபாடில்லை. நடுசாலைக்குள் சென்றால் சுகப்படும் என அங்கு வந்து காற்றுப்படுமாறு அமர்ந்துகொண்டாள்.

கணவன் அரசாங்க வேலையிலிந்து விலகி அரசியலிற்குள் இறங்கியபோது குடும்பம் ஆட்டம் கண்டிருந்தது. நான்கு பிள்ளைகளையும் படிப்பிக்க அவள்தான் உடுப்புத் தைக்கத் தொடங்கினாள். இனப்பிரச்சினை தொடங்கிய காலத்தில் பெரியவன் இந்தியாவிற்கும், ஒருத்தி கனடாவிற்கும் புலம்பெயர்ந்துவிட மற்றைய இருவரும் நகரத்துக்குள் முடித்துக்கொண்டு போய்விட்டனர்.

பேரப்பிள்ளைகள் பிறந்தபோது கனடாவில் இருப்பவள் பிள்ளைகளை வளர்ப்பதற்காக கனடாவிற்குக் கூப்பிட்டாள். இரண்டு பிள்ளைகள் பிறந்தபோதும் இவள்தான் போயிருந்து பத்தியம் பார்த்தாள். பேரப்பிள்ளைகளோடு இருப்பது கணவனின் சாவிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வசதியாயிருந்தது. மகனின் பிள்ளைகள் பிறந்தபோது இந்தியாவிற்கும் சென்றாள். ஆனால் எங்கும் வசதிப்படவில்லை. கனடாவில் கறியைச் சூடாக்கி சாப்பிடவேண்டியிருந்தது. கிழமைக்கு ஒருக்கா சுடுதண்ணி போட்டு தலைமுழுகிறவக்கு அங்க கிழமைக்கு ஒருக்கா சமைச்சு ஒவ்வொரு நாளும் சூடாக்கி சாப்பிடறது அரியண்டம்தான். அதைச் சொல்லி "போகப்போறன் புள்ள டிக்கட் போடு" என்றபோது மகள் பேசினாள். அடுப்பணைக்க மறந்த ஒருநாளில் சட்டியும் எரிந்து குசினிக்குள் புகை மூண்டபோது மகள் சொன்னாள் "எங்களைக் கொண்டிராதனை... நீ அங்கயே போயிரு"

அம்மா நாட்டுக்கு வந்த கொஞ்சக் காலத்தில கனடாக்காரிக்கு மனசு கேக்கல... அம்மாவுக்கு ஏதாவது உபகாரம் செய்யணுமெண்டு நினைச்சு வருசா வருசம் ஏதாவது ஒரு பொருளை வாங்கிக் குடுங்கன்னு நாட்டுக்கு வர்ரவங்களிட்ட காசு குடுத்துவிடுவா... இப்ப வீடு நிறையச் சாமான்... ஒத்தயா டெய்சியாச்சி.

கனடாக்காரி நாட்டுக்கு வந்தா சகோதரங்களையும் கூப்பிடுறது வழமை..... இந்தியாவில் இருக்கும் தம்பிக்கு தானே டிக்கட் போடுவா..... இவ கொண்டுவாற சொக்லட்டுகள் டின்பால் குடிக்கிற மாதிரி இனிப்பும் கொஞ்சம் கசப்புமா இருக்கும். ... உடுப்பும் நல்ல வாசம்... எப்பவுமே வராத சின்னவனும், சவுந்தரியும்கூட வருவாங்க...

வீட்டுக்கு வந்த இளைய மகனும், மகளும் சாமான்களை கண்டு திகச்சு போயிட்டாங்க..... அம்மா செத்தா இதையெல்லாம் யாரு எடுக்கிறது..... இளையவனின் மனுசி கராராக சொல்லிவிட்டாள், சாமான் தராட்டி "மாமி செத்தா, எங்கட வீட்டுல வைக்க முடியாது".

மகளுக்கு அப்படி சொல்ல முடியல. "சீதனம் தந்த வகையில எனக்கு எல்லாமே கொறச்சல்தான்... அதனால மர அலுமாரி, ஆறு பிளாஸ்டிக் கதிரை, சாப்பாட்டு மேசை, சாய்மானக் கதிரை, தையல் மெசின், பிரசர் பொக்ஸ், கியாஸ் அடுப்பு, சிலிண்டர் எல்லாத்தையும் எனக்குத்தான் தரனும்.

வாய்த்தர்க்கம் கைக்கு எட்டமுன்ன கனடாக்காரிதான் சொன்னா, அம்மா சாகிறவரைக்கும் யாரும் ஒரு பொருளையும் எடுக்கக்கூடாது. அம்மா யாருக்குக் குடுக்கனும் எண்டு விரும்புறாவோ அவங்களுக்கு குடுக்கலாம்.

சாப்பிட்டுவிட்டு ஆச்சி அறைக்குள் சென்றவுடன் இளையதம்பி தொடங்கினான்..." அம்மாவுக்கு முன்னப்போல இல்லை... இப்ப எத்தன தரம் விழுந்துட்டா. போனமுறை டொக்டர்ட கொண்டுபோன நேரமே சொன்னவர் "தொடர்ந்து தையல் மெசின்லயே இருந்ததால காலில தேய்மானம் கூடவாம், நிக்க நடக்க கஷ்டமெண்டு. எங்கட நாட்டுல ஒருத்தர் உழைச்சு ஒருத்தர் வாழுறதே பெரும்பாடெண்டு உனக்கு நான் சொல்லியா தெரியனும்" என்றவாறே சாப்பாட்டுக் கோப்பைக்குள் கையைக் கழுவினான் பெரியவன்.

"இவ்வளவு காலமும் நீங்களா பாக்கிறிங்கள். உங்கட பிள்ளைகளையும் அம்மா வளத்துவிட்டவதானே..... உங்களுக்கும் கடமை இருக்கெண்டுறத யாரும் மறக்காதிங்க. விளங்கிச்சோ... நீங்க செய்யாட்டியும் மாசாமாசம் நான் காசு அனுப்புவன்"

"அம்மாவ வச்சிப்பாக்க எங்களுக்கு விருப்பம்தான் அக்கா. ஆனால் என்ற மனுசனை உனக்குத் தெரியும்தானே..... அவருக்கும், இவவுக்கும் ஒவ்வாமை கிடக்கு... ஆளில்லாத நேரத்துல அடிச்சு சாக்காட்டினா நாளைக்கு உனக்கென்ன பதில் சொல்றது....?"

"அம்மா இருக்கிற மாதிரியே இங்க இருக்கட்டும். இந்த பாங்க் கணக்க மட்டும் என்னோட பேருக்கு மாத்திட்டுப் போ... இல்லாட்டி எண்ட கணக்குக்கு காசைப் போடு. நாளைக்கு செத்தா கனடாவிலிருந்து வந்தா அடக்கம் செய்யப்போறா. கையில காசில்லாம இங்க ஒரு வேலையும் செய்யமுடியாது"

"சின்னவன்... பாங்க் கணக்கு அப்படியே இருக்கட்டும். அதுதான் அவக்கு சுகப்படும். உனக்குக் கொஞ்சம் காசு தந்திட்டுப் போறன்.... இடையில எதுவும் நடந்தாலும் கடனை வாங்கியாவது செஞ்சு போடு. நானும், பெரியவனும் நினைச்ச உடன வரமுடியாதெண்டு உனக்கு தெரியும்தானே. பிறகும் காசு அனுப்புவன்.....

"எல்லாரும் நிக்கிற நேரமே எதுவும் நடந்திட்டால் நல்லம்போலக் கிடக்கனை... காரியத்தை எல்லாரும் சேந்து செஞ்சமாதிரி போயிருமே..... இதேன் ஒராள ஒராள் பாத்துக்கொண்டு... கடைசி நேரத்துல முகம்பாக்க முடியாம நீயுமல்லா நொந்து சாகனும்..... அம்மாவுக்கும் அதொரு கொடுப்பினையா போயிரும்..."

பெரியதம்பி நித்திரைக்குப் போகமுதல் அக்காவிடம் கேட்டான், "அந்த டிஜிட்டல் பிரசர் பொக்சை மட்டும் நான் எடுத்துட்டுப் போகவா?"

ஆச்சிக்கு அன்றிறவு நித்திரையில்லை. கண்மூட முடியாமல் கண்ணீர் வழிந்துகொண்டேயிருந்தது. தன்னை யாரும் கூட்டிக்கொண்டு போவதாக சும்மாகூட ஒரு வார்த்தை சொல்லவேயில்லையே..... ஏன் பிள்ளை.... உங்களுக்கு அவ்வளவு பாரமாவா போயிட்டன்?" என தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். அருகிலிருந்த யானையைப் பார்த்தாள். அது ரௌத்ரமாக பிளிறிக்கொண்டிருந்தது.


நாலு மணிக்கே கனடாக்காரி எழும்பிட்டா..... அவவுக்கு நித்திரை போகலை..... வாசலைத்திறந்து படியில் இருந்தாள். நொஸ்டாலஜியாக இருந்தது. அப்பா மடிக்குள் வைத்துக்கொண்டு பல்லுத்தீட்டி விட்டதும், குளிப்பாட்டியதும் ஞாபகத்தில் வந்தது. அப்பா வேலைக்குப் போகாத காலத்துலகூட அம்மா அப்பாவை எதற்கும் கோவித்துக்கொண்டதில்லை. அம்மா நல்ல வடிவு... சாயலில் அம்மாவைப் போலிருப்பதில் பெருமைதான். எதுவும் வேணுமெண்டு அம்மா கேட்டதில்லை.

இளம்பனியும் குளிரும் மனதை இலேசாக்கியது... புழுதி மணம்... வீட்டைச் சுற்றி நிறையப் பூக்கள் பூத்துக்கிடந்தன. ஒரு பூவைக் கொண்டுவந்து அப்பாவின் படத்தின்முன் வைத்தாள். அப்பா சிரிப்பதுபோலிருந்தது. அப்பா உயிரோடு இருந்திருந்தால் அம்மாக்குத் தனிமை இருந்திருக்காது. எங்களை நினைச்சுத்தான் வேதனைப்பட்டிருப்பார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# சிறுவர் பொழிவு

## வர்ணம் தீட்டுவோம் வாங்க



## சிறுவர் பற்றிய சிந்தனைத்துளிகள்

கடவுள் தந்த கருணையாம்
களங்கமில்லாக் குழந்தைகள்
இறைவன் தந்த இரக்கமே
இனியநல் சிறுவர்கள்.

பெற்றோர் மட்டில்
பெரும்கடமை எமக்கே.
அன்புகாட்டி அரவணைப்பதே
அன்னை பிதா கடமையாகும்

நல்வாழ்வை வளம்படுத்தி
நற்பிள்ளைகளாக
வளர்ப்போம்.
இறைவார்த்தைகளை
நிறைவாகக்
கற்றுக்கொடுப்போம்
சிறுவர் மட்டில்
சீற்றமடையாது

ஆற்றலறிந்து அறிவுரை
சொல்வோம்
கல்விச் செல்வத்தைக்
கசடறக் கற்பிப்போம்

பண்பாட்டுச் செயல்களைப்
படித்துக் காட்டுவோம்
அன்பினால் அனைவரையும்
ஆட்கொண்டு வாழ்வோம்.

மகிழ்ச்சியாக வாழும்
மனங்களை மலரவைத்து
உத்தமராய் வாழ்ந்திட
உயர்வழி
தனைக்காட்டுவோம்.

*- திரேசா*
*ஞானப்பிரகாசம்*
*ஓய்வுபெற்ற ஆசிரியை*

# நல்ல முடிவு



**எபேசியர் 4: 31 – 32**

"ஒருவருக்கொருவர் நன்மை செய்து பரிவு காட்டுங்கள். கடவுள் கிறிஸ்து வழியாக உங்களை மன்னித்ததுபோல் நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்"

எனது நண்பர் ஒருவர் தான் தொலைக்காட்சியில் (TV) உதைபந்தாட்டப் போட்டி ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்த வேளையில் ஏற்பட்ட அனுபவத்தைக் கூறிக்கொண்டிருந்தார். தன்னுடைய பிரியமான உதைபந்தாட்டக்குழு தோல்வி அடைவதைப் பொறுக்கமுடியாமல், சீற்றங்கொண்டு அருகிலிருந்த தனது இளைய மகளினுடைய விளையாட்டுப் பொம்மையைத் தரையில் எறிந்து தூள் தூளாக்கினார். பிள்ளையின் மனமும் உடைந்து தூளாகியது.

உடனேயே அவர் தன் மகளைக் கட்டியணைத்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். பின்பு வேறொரு பொம்மையை அவளுக்குக் கொடுத்துத் தன்னை திருப்திப்படுத்திக்கொண்டார்.

நாலு வயதுச் சிறுமியை அவரின் கடும் சினம் எவ்வளவிற்கு அச்சுறுத்தியது என்பதை அவர் அறியவில்லை. அதேவேளை அந்தச்சிறுமியும் தனது மனத்துயரின் ஆழத்தைப் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் காலப்போக்கில் மன்னிக்கும் தன்மை ஏற்பட்டது.

பல வருடங்களிற்குப்பின் அவள் ஒரு பிள்ளைக்குத் தாயாகின்ற வேளை அவர் (எனது நண்பர்) அதைப்போன்றதொரு பொம்மையை அவளுக்கு அனுப்பிவைத்தார். அவள் அந்தப் பொம்மையின் புகைப்படத்தை முக நூலில் பதித்து பின்வரும் வசனங்களைப் பதித்திருந்தாள்.

"இந்தப் பரிசு எனது பிள்ளைப் பராயத்திற்குப் பின்னோக்கி எடுத்துச் செல்கின்றது. அப்போது அது சந்தோஷமான கதையாய் இருக்கவில்லை. ஆனால் இப்போ ஒரு மகிழ்வான முடிவு கிடைத்துள்ளது. மீட்பு மகிழ்ச்சியானது எனது அப்பாவிற்கு நன்றி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### முதியோர் அல்ல நாங்கள்

- ஆ. பொணிபாஸ் றோச், பள்ளிமுனை.

முதியோர் அல்ல நாங்கள் பட்டைதீட்டிய ரத்தினங்கள்
புதியதோர் உலகம் படைக்கும் புத்தி ஜீவிகள் நாம்
உதிக்கும் சூரியனின் நவசோதிக் கதிர்கள் நாம்
மதியுள்ள மக்களின் மங்காத விளக்குகள் நாம்

ஆறு பத்தை நிறைவுசெய்த அருமையான முத்துகள்
பேறுபெற்ற சமுதாயத்தின் அளப்பரிய சொத்துகள்
வீறு கொண்ட மக்களின் விளைநில முத்துகள்
மாறுபட்ட யுகத்திலே சிறகடிக்கும் சிட்டுகள்

காவோலையென்று தள்ளி நகைக்காதே
பாவோலை புனைந்தினிய பண் இசைத்திடுவோம்
சாவோலை வரும்வரைக்கும் சற்றும் சளைக்காமல்
குருத்தோலை தலைநிமிர வாழவழிகாட்டுவோம்

நல்வழி காட்டியே நாணயமாய் நடந்திடுவோம்
கல்மனம் கொண்டோரைக் கனிவுடனே வாழவைப்போம்
இல்வாழ்க்கை சிறந்திடவே இனியவழி காட்டிடுவோம்
பல்இன மக்களோடு பகைமறந்து வாழ்ந்திடுவோம்

பண்பான குடும்பமாய் பாசமுள்ள உறவுகளாய்
உண்மை வழிசென்று உத்தமராய் வாழ்ந்து காட்டி
மண்ணிலிருந்து மறையுரைவரை மகத்தான சேவை செய்து
விண்ணோர்கள் போற்றிடவே விளைநிலமாய் நீடுவாழ்வோம்

**(சர்வதேச முதியோர்தினப் போட்டியில் வடமாகாணத்தில் முதலாம் இடம்பெற்ற கவிதை)**



### முதியோரைப் பேணுவோம்

- ச. யேசுதாசன் (செல்வம் புலவர்) -
கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்

சங்கத் தமிழில் சொல் எடுத்து
சரமாய்க் கொஞ்சம் கவிதொடுத்து
அன்புக் கரங்களில் அதைக்கொடுத்து
அழகு தமிழில் பாடுகின்றேன்.

வானத்து நிலவாய் வாழ்ந்தவர்கள்
வாழ்க்கைக்குப் பெருமை சேர்த்தவர்கள்
ஞாலத்தில் சிறந்த நல்லவரை (அந்த)
முதியோரைப் பேணுதல் நம் கடமையன்றோ



சுமைகளைத் தாங்கும் விழுதவர்கள்
பெருந்துயரக் கடலையும் கடந்தவர்கள்
வாழையடி வாழையாக வாழ்ந்த இளம் (அந்த)
முதியோரைப் பேணுதல் நம் கடமையன்றோ

சிற்பியில் பிறந்த முத்தினைப்போல்
சேற்றினில் வளர்ந்த தாமரைபோல்
எத்தனை பெரியோர் மறைந்தனரே (அந்த)
முதியோரைப் பேணுதல் நம் கடமையன்றோ

சாலைஓர மரங்களைப்போல் பெரும்
சரித்திரம் படைத்தவர் முதியோர்கள்
காலத்தால் அழியாத ஓவியங்கள் (அந்த)
முதியோரை பேணுதல் நம் கடமையன்றோ

தந்தை செல்வா, காந்திகளும் எங்கள்
அன்னை திரேசா போன்றோரும்
மங்காப் புகழ் கொண்ட முதியோர்களே (அந்த)
முதியோரைப் பேணுதல் நம் கடமையன்றோ



உலகம் போற்றும் உத்தமர்கள்
உயர்ந்த எண்ணம் படைத்தவர்கள்
நாடு போற்ற வாழ்ந்தவர்கள் (அந்த)
முதியோரைப் பேணுதல் நம் கடமையன்றோ

அன்புத் தாத்தா பாட்டிகளை
அவர்வழிவந்த பெற்றோரையும்
என்றும் வாழ்வில் மறவாமல் (அந்த)
முதியோரைப் பேணுதல் நம் கடமையன்றோ

**(சர்வதேச முதியோர்தினப் போட்டியில் வடமாகாணத்தில் முதலாம் இடம்பெற்ற கவிதை)**

## கொஞ்சம் சிரிங்க

**கணவன் :** சீதனம் வாங்கிட்டு கல்யாணம் செய்தது என்னுடைய மனசை உறுத்திக்கிட்டே இருக்குது.
**மனைவி :** அதுக்காக இப்போ என்ன செய்கிறதாம்...?
**கணவன் :** சீதனம் வாங்காமல் இன்னொரு கல்யாணம் செய்துகிட்டு பிராயச்சித்தம் செய்யலாம் என்று இருக்கிறேன்.
**மனைவி :** கா...ர்ர்....ர்ர்ர்ர்....

........................

கணவனுக்கும் காதலனுக்கும் என்ன வித்தியாசம்? ஒரு பெண்ணின்மேல் பைத்தியமாக இருப்பவன் காதலன்..
(சொல்லுடா செல்லம்...)
அதே பெண்ணை பைத்தியமா பார்ப்பவன் கணவன்...
(ஏண்டி கத்துறாய்...)

........................

**மனைவி :** என்னங்க இன்றைக்கு நம்ம கல்யாண நாள்... கோழி உரிச்சு குழம்பு வைக்கட்டுமா?
**கணவன் :** நான் செஞ்ச தப்புக்கு ஏன் கோழிக்கு இந்தத் தண்டனை கொடுக்கிறாய்...?
**மனைவி :** .....

........................

டாக்டர்... ப்ளீஸ்.. எதுக்காக இப்படி கதறிக்.. கதறி... அழுவுறீங்க...? நான் இன்னிக்கு காலையில் ஆப்ரேசன் பண்ணுன பேசன்ட் செத்துட்டாரு......



**நேர்ஸ் :** யோவ் டுபுக்கு.... நீ காலையிலை பண்ணினது ஆப்ரேசன் இல்ல.. அது போஸ்ட்மாட்டம்..

........................

**பையன்:** அம்மா ஸ்கூலில் இன்னக்கி ஒரு நல்ல செய்தி, ஒரு கெட்ட செய்தி நடந்துச்சிம்மா.
**அம்மா:** நல்ல செய்திய மொதல்ல சொல்லு.
**பையன்:** ஸ்கூல் தீ பிடிச்சி எரிஞ்சி போச்சிம்மா
**அம்மா:** கெட்ட செய்தி?
**பையன்:** வாத்தியானுங்க எல்லாம் தப்பிச்சிடானுங்க....!

........................

**கணவன்:** எனக்கு பயங்கர ஞாபக மறதி என்று திட்டுவியே இன்றைக்கு எப்படி மறக்காம சாப்பாட்டு பெட்டியை அலுவலகத்திலிருந்து எடுத்துட்டு வந்தேன் பாரு.
**மனைவி:** மண்ணாங்கட்டி, இன்றைக்கு நீங்கதான் அலுவலகத்துக்கே போகலியே!
**கணவன்:** ?????

## மன்னா விளம்பரப் பலகை

இந்த உலகத்தில் ஒருவனைக் கெட்டவன் என்று சொல்ல ஒரு வார்த்தை போதும்,
ஆனால் நல்லவன் என்று சொல்ல சாட்சி தேவைப்படுகிறது.

பயணத்தை அனுபவிக்கவேண்டுமானால் சுமைகளைக் குறைய எடுத்துச் செல்லுங்கள்...!
வாழ்க்கையை அனுபவிக்கவேண்டுமானால் எதிர்பார்ப்புக்களைக் குறையுங்கள்.

..............................

**இது ஆண்களின் வாழ்க்கை விதி!**
5 வயசுல 'மதர்' சொல்லுறதை கேட்கணும், 25 வயசுல 'பிகர்' சொல்றதை கேட்கணும். 55 வயசுல 'சுகர்' சொல்லுறதை கேட்கணும். இதுதான் ஆண்களுக்கு வாழ்க்கையின் விதி.

ஒரு பெண் கலங்கிய கண்களுடன் பிறந்த வீட்டுக்குச் செல்லும்போது அவள் கணவன் ஆண் என்ற தகுதியை இழந்துவிடுகிறான்...!

வாழ்ந்து முடித்த கோழியும், வாழ வேண்டிய முட்டையும் ஒரே தட்டில் செத்துக்கிடப்பதையே பிரியாணி என்கிறோம்.

........................


உலகில் மனிதனால் முடியாதது எதுவும் இல்லை. இருந்தும், மனிதனால் முடியாதது "மனிதனாக இருப்பது" மட்டும்தான்...

........................

**பெற்றோர்களின் கவனத்துக்கு:** சிகரெட், மதுவைவிட TV சீரியல்களிலும், சினிமாக்களிலும் காட்டப்படும் பள்ளிப்பருவக் காதல் மிகவும் ஆபத்தானது.

ஓர் ஆண் பொறுமை இழந்தால் அவனது நிம்மதிதான் கெடுகிறது. ஒரு பெண் பொறுமை இழந்தால் ஒரு குடும்பத்தின் ஒட்டுமொத்த நிம்மதியே கெட்டுப்போகிறது!

## ஆரோக்கியத்தின் கண்ணாடி



உடலைப் பாதுகாக்கும் தோல், ஆரோக்கியத்துக்குத் தேவையான விட்டமின் டி யை சூரியனிடம் இருந்து பெற்று உடலுக்குத் தரும் கருவி: உணர்ச்சிகளை உணரவைக்கும் உறுப்பு.

தோலில் 20 இலட்சம் வியர்வைத் துவாரங்கள் உள்ளன. உடலில் உள்ள கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதுடன் சருமத்தின் ஆரோக்கியத்தை தோல் எதிரொலிப்பதால் ஆரோக்கியத்தின் கண்ணாடி என்பர். பூஞ்சை தொற்றல், படர் தாமரை, சிஸ்டமிக் டிஸ்சோர்டர், மனஅழுத்தம், அதிக உடல் இடை, மதுப்பழக்கம் உள்ளிட்ட காரணங்களால் சொரியாசிஸ், நிறமி குறைபாட்டால் வெண் புள்ளிகள், புகைபிடித்தல், மன அழுத்தம், சரிவர சாப்பிடாததால் வாய்ப்புண், பரம்பரை சூரிய ஒளி படராமை, ஆர்சனிக் என்ற ஒருவகை இரசாயனம் ஆகியவற்றால் ஏற்படும் சருமப் புற்றுநோய் ஆகியவை முக்கிய சரும நோய்களாகும்.

தனிநபர் சுகாதாரமின்மை, சரிவர சருமத்தை பராமரிக்காமை, உடலுக்குத் தேவையான சரிவிகித உணவு எடுக்காமை, தேவையான தண்ணீரில் பற்றாக்குறை ஏற்படுவது, தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ற ஆடை உடுத்தாதது, அளவுக்கு அதிகமான அழகுசாதனப் பொருட்கள் பயன்பாடு, புகைப்பிடித்தல், அதிக வெப்பத்துக்கு சருமம் ஆட்படுவது, மனஅழுத்தம் ஆகியவை சருமத்தின் ஆரோக்கியத்தை சிதைக்கும் காரணிகள் ஆகும். சருமம் ஆங்காங்கே சிவந்துபோவது, அரிப்பு, கொப்பளம், நிற மாற்றம், முடிஉதிர்வு, வாய்ப்புண், நகம் பாதிப்பு ஆகியவை சருமத்தின் ஆரோக்கியம் குன்றியதை உணர்வதற்கான அறிகுறிகள்.

இதை வளரவிடுவது சிகிச்சை அளிக்கக் கடினம் என்பதால் உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. உதாரணமாக சொரியாசிஸ் நோயை ஒரு கட்டத்துக்குமேல் குணப்படுத்த முடியாது. கட்டுப்படுத்தவே முடியும். சிகிச்சை அளிக்கப்படாத வாய்ப்புண், புற்றுநோயில் கொண்டுவிட வாய்ப்புள்ளது.

சருமத்துக்கு அரணாக பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள் தொடர்ந்து சாப்பிடலாம். கோப்பி, செயற்கைப் பானங்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களை முற்றிலும் தவிர்க்கலாம். பெரும்பாலான தோல் வியாதிகளுக்கு அதிகமாகக் கொழுப்பு உணவை உட்கொள்வதே காரணம். அதேபோல் மாவுச்சத்து உணவுகளை அளவோடு எடுப்பதுடன் நார்ச்சத்து உணவுகளை அதிகமாகச் சாப்பிடலாம்.

நம் பாரம்பரிய உணவுகளான திணை, சாமை, கேழ்வரகு, சருமத்துக்கு நன்மை செய்பவை. தினமும் 6 - 8 கிளாஸ் தண்ணீர் அல்லது 2 லீற்றர் தண்ணீர் சிறுநீர் வெளியேறும் அளவுக்குத் தண்ணீர் குடிக்க வேண்டும். மொத்தத்தில் ஆரோக்கியத்தின் கண்ணாடியான அழகின் குறியீடான சருமத்தைப் பராமரிப்போம், பாதுகாப்போம்.

## சமையல் குறிப்பு

### அவல் பிட்டு



**தேவையானவை:**

அவல் - 1 கப்
நெய் - 1 தேக்கரண்டி
துருவிய வெல்லம் - 1கப்
துவரம்பருப்பு - அரைகப்
துருவிய தேங்காய் - அரைக்கப்
முந்திரிப்பருப்பு - தேவைக்கேற்ப
நல்லெண்ணெய் - 1 தேக்கரண்டி
உப்பு அரைத் தேக்கரண்டி, கேசரிப்பவுடர் - 1 சிட்டிகை
ஏலக்காய் பொடி - அரைத்தேக்கரண்டி

**செய்முறை :**

அவலை வெறும் சட்டியில் சிவக்க வறுத்து, கரகரப்பாக அரைத்துக்கொள்ளவும். அதில் சிறிது உப்பு, கேசரி பவுடர் சேர்த்து கலந்த இளம்சூடான தண்ணீரைத் தெளித்து, பிசிறி வைக்கவும். துவரம் பருப்பை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து தண்ணீரை வடித்து, பருப்பை ஈரமில்லாமல் பிழிந்து தனியே வைக்கவும். நெய்யில் முந்திரிப் பருப்பை வறுத்து எடுக்கவும்.
ஒரு சட்டியில் வெல்லத்தைப் போட்டு மூழ்கும்வரை தண்ணீர் விட்டுச் சூடாக்கவும். வெல்லம் கரைந்ததும், வடிகட்டி மறுபடியும் சட்டியைக் கழுவி அதில் வெல்லக் கரைசலைக் கொட்டி, பாகுவரும்வரை கிளறவும்.

இளம் உருண்டைப்பாகு வரும்போது தேங்காய்த் துருவல், துவரம் பருப்புச் சேர்த்து கலந்துவிட்டுப் பிசறிய அவல் பொடியைச் சேர்க்கவும். நன்றாகக் கிளறிவிட்டு, ஏலக்காய் பொடி, வறுத்த முந்திரி, நல்லெண்ணெய் சேர்த்து உதிரியாக வரும்வரை கிளறி எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

### தொடர் 8 -

## 3. திருவழிபாட்டுக்கு உரிய முக்கிய பணிகள்

**152. திருவழிபாட்டில் அடங்கியுள்ள முக்கிய கூறுகள் என்ன? திருவழிபாட்டுக்கு அடுத்த (Para-Liturgy) பணிகள் என்ன?**

**அ) திருவழிபாட்டுக் கூறுகள்:**

1. திருப்பலி
2. ஏனைய அருளடையாளக் கொண்டாட்டங்கள்
3. திருப்புகழ்மாலை
4. அருள்வேண்டல் குறிகள்

**ஆ. திருவழிபாட்டுக்கு அடுத்த பணிகள்:**

1. நற்கருணை ஆசி, நற்கருணை ஆராதனை, நற்கருணைப் பவனி
2. புனிதர்களின் பக்திமுயற்சிகள்
3. சிறப்பு வழிபாடுகள் போன்றவை

## 3.1 திருப்பலி

**"இயேசுக் கிறிஸ்து வழியாக எப்போதும் நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப் பலியைச் செலுத்துவோமாக" (எபி 13:15).**

**3.1.1 பொதுக் குறிப்புகள்**

**153. திருவழிபாட்டுக்கு உரிய பணிகளில் மிக முக்கியமானதும் மேன்மையானதும் எது? ஏன்?**

திருப்பலி. ஏனென்றால், இயேசுக் கிறிஸ்து தாம் சிலுவையில் செலுத்திய பலியை திருப்பலியில் உண்மையிலே அருளடையாள முறையில் புதுப்பிக்கிறார், மேலும் திருப்பலி மாட்சிமிக்க இயேசுவின் தியாகத்தை எண்ணி நன்றிகூறும் பொருளுள்ள வழிபாடு.

**154. திருப்பலி (திருவழிபாடு) எங்கெல்லாம் நடைபெறலாம்?**

பேராலயம், திருத்தலம், மறைமாவட்டக் கோவில், பங்குக் கோவில், மறைப்பணி கோவில், சிற்றாலயம் இன்னும் புனிதத் தன்மையோ அதன் மரியாதையோ கெடாத மதிப்பிற்குரிய பிற இடங்கள்: திறந்தவெளி, மண்டபம், கலையரங்கம், வாழும் இல்லிடம், மருத்துவமனை போன்றவை. இவை நம்பிக்கையாளர் செயல்முறையில் பங்கெடுப்பதற்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.

**155. திருப்பலி (Mass - என்ற சொல் எந்த மொழியிலிருந்து வருகிறது) என்ற சொல் எவ்வாறு பயன்பாட்டுக்கு வந்தது?**

'Mass' என்ற சொல் இலத்தீன் மொழிச் சொல்லாகிய 'Missio' என்ற சொல்லிலிருந்து வருகிறது. எனவே Mass என்பதை இலத்தீன் மொழியில் "மிஸ்ஸா" – 'Missa' எனச் சொல்வர். இதற்கு 'அனுப்புதல்' என்று பொருள். நற்கருணை கொண்டாட்டத்திற்குப் (திருப்பலி) பிறகு அனைவரும் அனுப்பப்படுவதால் இச்சொல் பயன்பாட்டுக்கு உள்ளாயிற்று.

தமிழகத்தில் முதலில் 'திருப்பலி' என்ற சொல்லுக்குப் பதிலாக, 'பூசை' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. "பூஜா" எனும் வடமொழிச் சொல்லிலிருந்து வருகிறது. இதற்கு 'ஆராதனை' என்று பொருள். பூசை என்பது வடமொழிச் சொல் என்பதாலும் கிறிஸ்துவின் இராவுணவு அவரது பலியை நினைவுறுத்துவதனாலும் 'திருப்பலி' எனப் பெயர் வழங்கலாயிற்று.

திருப்பலி என்பது இறைவார்த்தை வழிபாட்டையும், நற்கருணை வழிபாட்டையும் உள்ளடக்கியுள்ளது. இவ்விரண்டு பகுதிகளும் ஒரே ஒரு வழிபாட்டுச் செயலில் கூறுகளாகத் தம்முள் நெருங்கி இணைந்துள்ளன.

**156. திருப்பலி கொண்டாட்டம் என்பது என்ன?**

இது கிறிஸ்துவின் இராவுணவையும் கல்வாரிப் பலியையும் ஒன்றிணைந்து நமக்கு நினைவுப்படுத்தினாலும், அதாவது கிறிஸ்துவின் முழுமையான செயலாக இருந்தாலும் கிறிஸ்துவும் இறைமக்களும் சேர்ந்து ஆற்றும் செயல் ஆகும். நம் கிறிஸ்தவ வாழ்வின் மையமும் ஆகும். இதில்தான் கிறிஸ்து வழியாகத் தூய ஆவியாரில் தந்தைக்கு செலுத்தப்படும் வழிபாடு வெளிப்படுகிறது.

**157. திருப்பலியில் கிறிஸ்துவின் உடனிருப்பு எங்கெல்லாம் விளங்குகிறது?**

நான்கு நிலைகளில் விளங்குகிறது (திவ 7)

அ) நற்கருணையில்
ஆ) இறைவார்த்தையில்
இ) இறைமக்களில்
ஈ) அருள்பணியாளரில்

**158. திருப்பலியில் எத்தனைச் சடங்குகள் உள்ளன? அவை யாவை?**

நான்கு சடங்குகள் உள்ளன: தொடக்கச் சடங்கு, வார்த்தை வழிபாட்டுச் சடங்கு, நற்கருணை வழிபாட்டுச் சடங்கு, முடிவுச் சடங்கு.



**159. மேற்சொன்ன சடங்குள் பலிபீட முற்றத்தில் எந்தெந்த இடத்தில் நடைபெற வேண்டும்?**

தொடக்கச் சடங்கு – பலி நிறைவேற்றுபவர் இருக்கை முன்பு
வார்த்தை வழிபாடு – வாசக மேடை
நற்கருணை வழிபாடு – பலிப் பீடம்
முடிவு/ நிறைவுச் சடங்கு – பலி நிறைவேற்றுபவர் இருக்கை முன்பு

**160. பலி நிறைவேற்றுபவரை எவ்வாறு அழைக்கலாம்: கொண்டாடுபவர் (Celebrant) அல்லது தலைமை ஏற்பவர் /பலி முதல்வர் (Presider)?**

அருள்பணியாளர் மட்டுமல்ல, இறைமக்கள் அனைவருமே திருப்பலியைக் கொண்டாடுகிறோம் என்பதால் திருப்பலியை நிறைவேற்றுகிறவர் தலைமை ஏற்பவர்/ பலி முதல்வர் என்று அழைக்கப்படுவதே சிறந்தது. இது அவரது தனிப்பட்ட பலி பங்கேற்பு முறையைக் குறிக்கிறது.

**161. திருப்பலியில் எத்தனை வாசகங்கள் இடம்பெறுகின்றன?**

சாதாரண திருப்பலி - இரண்டு
ஞாயிறு, சிறப்பு திருப்பலி - மூன்று

**162. திருப்பலியில் எத்தனை பவனிகள் இடம்பெறுகின்றன?**

வருகைப் பவனி
நற்செய்தி வாசக நூல் பவனி
காணிக்கைப் பவனி
திருவிருந்துப் பவனி
பிரியாவிடைப் பவனி

குறிப்பு: இந்த ஐந்து பவனிகளும் தனித்தன்மை கொண்டவை.

**163. வருகைப் பவனி எவ்வாறு அமைகிறது?**

வருகைப் பவனி: இரண்டு விதங்கள் உள்ளன. ஒன்று, சாதாரண பவனி (திருப்பண்ட அறையில் இருந்து பலிப்பீடத்திற்கு வருவது) மற்றொன்று, ஆடம்பரப் பவனி (கோவில் வாயிலிலிருந்தோ கோவிலின் புறம்பே வேறோரு தகுதியான இடத்திலிருந்தோ வருவது)

வருகைப் பவனியின்போது இறைமக்கள் அனைவரின் சார்பாக திருப்பலி நிறைவேற்றுபவர்களும் பிற பணியாளர்கள் எல்லாரும் பீடத்தை நோக்கி வருகின்றனர்.

**164. வருகைப்பவனியின் நோக்கம் என்ன?**

1. வழிபாடு செய்யக் குழுமியுள்ளோரை நம்பிக்கையாளரின் ஒரே குழுமமாக ஒன்றுகூட்டுவது:
2. கடவுளின் திருப்பயண மக்களாக அவர்களை உணரச்செய்வது
3. அவர்களது திருப்பயணம் நிறைவாழ்வை/ விண்ணக ஆட்சியை நோக்கிய பயணம் என்று எடுத்துச்சொல்வது.
4. சுருங்கச் சொன்னால் நாம் பயணிக்கும் திருச்சபை என்பதை வெளிப்படுத்துவது.

**பவனி அமையும் முறை**

1. சாம்பிராணியும் தூபக் கலமும் ஏந்திச் செல்லும் பீடப் பணியாளர்கள்.
2. இரு மெழுகுத் திரிகளின் மத்தியில் திருச்சிலுவையை ஏந்திச் செல்லும் பணியாளர்.
3. இதர பீடப் பணியாளர்கள்.
4. நற்செய்தி வாசக நூலை ஏந்தி வரும் பணியாளர்.
5. பலி நிறைவேற்றும் அருள்பணியாளர்.

**165. நற்செய்தி வாசக நூல் (Book of the Gospels) பவனி எவ்வாறு அமைகிறது?**

நற்செய்தியைப் பறைசாற்ற வருபவர் (திருத்தொண்டர்/ அருள்பணியாளர்) நற்செய்தி வாசக நூலை உயர்த்திப் பிடித்துக்கொள்ள, அவருக்குமுன் பீடப்பணியாளர் (தூபப் பணியாளரும் மெழுகுத்திரிகளை ஏந்தும் பணியாளர்களும்) செல்கின்றனர். அவர்கள் வாசக மேடை நோக்கிப் பவனியாகச் செல்கின்றனர். நற்செய்தி வாசக நூலை ஏந்தியிருப்பவர் அவர்களைப் பின்தொடர்கிறார். அதை வாசக மேடையில் வைத்து, அதற்குத் தூபமிட்டு நற்செய்தியைப் பறைசாற்றுகிறார்.

**166. காணிக்கைப் பவனி எவ்வாறு அமைகிறது?**

இறைமக்கள் அனைவரின் சார்பாக இறைமக்கள் கூட்டத்தினிடையே காணிக்கைப் பொருள்கள் பவனியாக பலிப்பீடம் நோக்கிக் கொண்டுவரப்படுகின்றன.

**167. திருவிருந்துப் பவனி எவ்வாறு அமைகிறது?**

திருவிருந்து பெற விரும்புவோர் அனைவருமே நற்கருணையைப் பகிர்ந்தளிக்கும் பணியாளர்களை நோக்கிப் பவனியாக வருகின்றனர்.

**168. பிரியாவிடைப் பவனி எவ்வாறு அமைகிறது?**

வருகைப் பவனியின்போது வந்தவர்கள் எவ்வாறு பவனியாக வந்தனரோ அதேபோன்று பலிப்பீட முற்றத்திலிருந்து திருப்பண்ட அறை நோக்கிச் செல்கின்றனர்.

**169. ஆயத்த நிலையினர் (கேத்தக்குமேன்ஸ்) என்பவர் யார்? அவர்களைப் பற்றியும் அவர்களது திருப்பலி பற்றியும் விளக்கவும்?**

திருமுழுக்குப் பெறுவதற்குத் தயாரிப்பு செய்கிறவர், "கேத்தக்குமேன்" என அழைக்கப்படுகிறார்.

தொடக்கக் காலத்தில் திருமுழுக்கு இன்னும் பெறாதவர் திருப்பலியின் வார்த்தை வழிபாட்டுப் பகுதி முடியும்வரை மட்டும் பங்கெடுப்பதற்கு அனுமதி இருந்தது. மறையுரைக்கு பிறகு சிறிய இறைவேண்டலோடு இவர்கள் வெளியே அனுப்பப்பட்டனர். அது அவர்களுக்கான தண்டனை அல்ல, மாறாக நற்கருணைத் திருவிருந்தில் பங்குகொள்ள தங்களைத் தயார்செய்துகொள்ளும் பொருட்டு மறைக்கல்விபெற அனுப்பப்பட்டனர்.

## 3.1.2 திருப்பலி நான்கு சடங்குகள்

**3.1.2.1 தொடக்கச் சடங்கு**

**170. தொடக்க வழிபாட்டில் வரும் சடங்குகள் என்ன?**

- அமைதிச் சூழல்
- நுழைவுக் கீதம்
- பவனி தொடக்கம்
- வரவேற்பு (அஞ்சலி)
- பீட வணக்கம்
- மூவொரு கடவுள் வாழ்த்துரை
- முன்னுரை
- பாவ மன்னிப்பு மன்றாட்டு (Confiteor)
- ஆண்டவரே இரக்கமாயிரும் (Kyrie)
- வானவர் கீதம் (Gloria)
- திருக்குழும மன்றாட்டு (Collecta)

குறிப்பு: நுழைவுக் கீதம் இல்லையெனில் மூவொரு கடவுள் வாழ்த்துக்குப்பின் வருகைப் பல்லவி (Introit) வாசிக்கப்படும்.

**171. தொடக்கச் சடங்கின் முக்கிய குறிக்கோள் என்ன?**

நம் அனைவரையும் ஒரே குழுவாக ஒன்றுசேர்ப்பதும், இறைவார்த்தையைக் கேட்க நம்மைத் தயாரிப்பதும், நற்கருணையை மாண்புடன் கொண்டாடுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதும், நாம் வழிபடும் சமூகம் என்பதை உணரச் செய்வதும் இவற்றின் குறிக்கோள்கள் ஆகும்.

இன்னும் சிறப்புறச் சொல்ல வேண்டுமாயின், தொடக்கச் சடங்குகள் தொடங்குதல், முன்னுரைத்தல், தயாரித்தல் போன்ற பண்புகளைக் கொண்டிருக்கின்றன.

**172. வருகைப் பாடலின் நோக்கம் என்ன?**

நற்கருணைக் கொண்டாட்டத்தைத் தொடங்கவும், திருக்குழுமக் கூட்டத்தின் ஒன்றிப்பை வளர்க்கவும், திருவழிபாட்டின் மறை உண்மையைப்பற்றிய சிந்தனையை இறைமக்களிடம் தூண்டவும் செய்வதே இப்பாடலின் நோக்கங்கள் ஆகும்.

**173. 'வருகைப் பல்லவி' என்பது என்ன?**

வருகைப் பாடல் பாடப்படவில்லையென்றால், இது திருப்பலி தொடங்கியதும் அருள்பணியாளரின் வாழ்த்துரைக்குப்பின் வாசிக்கப்படும் இறைவசனம். இது அந்நாள் திருப்பலியின் கருத்தை எடுத்துச் சொல்கிறது. இப்பல்லவி நாளுக்கு நாள் வேறுபடும்.

**174. தொடக்கச் சடங்கை அருள்பணியாளர் ஏன் பீடத்தில் வைத்து தொடங்காமல் தம் இருக்கையிலிருந்து தொடங்குகிறார்?**

நற்கருணைக் கொண்டாட்டத்தின் மிக சிறப்புப் பகுதிகளாக விளங்குபவை வார்த்தை வழிபாடும் நற்கருணை வழிபாடும். இவ்விரண்டிற்கும் தனித்தனி இடம் உண்டு. இவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக தம் இருக்கைச்சென்று தொடக்கச் சடங்கை நிகழ்த்துகிறார்.

அதே சமயத்தில் அந்த 'இருக்கை'யின் சிறப்பு அம்சம் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இருக்கை Chair – (Cathedra) என்ற சொல்லிலிருந்து வருகிறது, இது பலி நிறைவேற்றுபவரின் பணிகளாகிய திருக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதனுடையவும் இறைவேண்டுதல்களை வழி நடத்துவதனுடைய அடையாளம். ஆயரின் போதனையையும் அதிகாரத்தையும் அடையாளப்படுத்துகிறது. அதுமட்டுமல்ல திருத்தந்தையோடும் பிற ஆயரோடும் அவர் கொண்டுள்ள உறவையும் சுட்டிக்காட்டுகிறது.

அருள்பணியாளர் ஆயர்வழி வருவதால், அவரும் திருவழிபாட்டில் திருப்பலி முதல்வரின் இருக்கையைப் பயன்படுத்துவது பொருத்தமானது. அருள்பணியாளரும் தம் இருக்கையிலிருந்து மறையுரை வழங்கலாம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.168

## தானியேல் இணைப்புகள்: 1 மக்கபேயர்

உங்கள் விடைகளை ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | 02 |
| | | | | 03 | | | | 04 | |
| 05 | 06 | | | | | | ❖ | | |
| | ❖ | | | | 07 | | ❖ | 08 | |
| | | ❖ | 09 | 10 | | 11 | | | |
| | | | | | 12 | | | | |
| | 13 | | | | | 14 | | | |
| | | | | 15 | | | | 16 | |
| 17 | | | | 18 | | | 19 | | 20 |
| 21 | | | | | | | | | 22 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### இடமிருந்து வலம்

1.அவர் அந்தச் ................ அதன் கோவிலையும் இடித்துத் தகர்த்தார்.
5. மன்னனின் கட்டளைப்படி நடவாதவர்கள் ......................
11. இப்போது விண்ணக இறைவனைத் ................ அழைப்போம்.
12.“இது ............. தெய்வம் என்பதை உம்மால் மறுக்கமுடியாது.
13. கொலையுண்டவர்களைத் ................ நகரைக் கடந்து சென்றார்.
14. அவர்கள் மன்னனிடம் சேர்ந்ததும் அவர்களின் ...................... அவன் மகிழ்ச்சிகொண்டான்.
21. அவர் உன்னை ...................... வெட்டிப் பிளப்பார்” என்றார்.

### வலமிருந்து இடம்

2. இதனால் இஸ்ரயேலருக்குப் ................ விளைவித்து வந்தார்கள்.
3. பின் .............. வந்து கதவைமூடி, மன்னரின் கணையாழியால் முத்திரையிட்டுச் சென்றார்கள்.
4. ஆண்டவருக்கு ........... செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர்
7. ஏனெனில் இது உள்ளே வெறும் .......... வெளியே வெண்கலம்.
12. இவ்வாறு மிக ............ நிலையை அடைந்துள்ளார்கள்.
15. நீங்கள் .............. கோட்டைகள் உங்களுக்கே சொந்தமாகும்.
18. தன் குடிமக்கள் .............. நாடே நடுநடுங்கியது.
22. ................ மூடுபனியே, ஆண்டவரை வாழ்த்துங்கள்.

### மேலிருந்து கீழ்

2. இவ்வாறு இஸ்ரயேல்மீது ...................... வந்துற்றது.
9. ஏனெனில் அது ................. அடைக்கல நகர்.
10. மாட்சியும் தூய்மையும் நிறைந்த உம் .................. வாழ்த்துக்குரியது.
12. இப்பொழுது நாங்கள் முழு உள்ளத்துடன் ............... பின்பற்றுகிறோம்.
14. அவர்கள் தங்கள் ...................... ஆட்சி அனைத்தையும் இழந்து இகழ்ச்சியுறட்டும்.
16. அவ்வாறே வீரர்களும் ............... அமைந்தார்கள்.

### கீழிருந்து மேல்

5. இவளோ எங்களுக்கு மறுமொழிகூற மறுத்துவிட்டாள். இவற்றுக்கு நாங்களே ................”
6. அப்பொல்லோனின் ....... யூதா எடுத்துக்கொண்டார்.
8. எனினும் அவரைக் .............. ஒவ்வொரு நாளும் ஆவலோடு காத்திருப்பார்கள்.
11. “படைக்கலம் ஏந்துங்கள் ........... கொள்ளுங்கள்.
12. பாவம் செய்வதைவிட, அதைச் செய்யாமல் ...................... மாட்டிக்கொள்வதே மேல்” என்றார்.
13. எனவே இஸ்ரயேலர் ................ கோட்டைக்குத் தப்பியோடினர்.
17. தன் செயல்கள்பற்றிப் .................... பேசிவந்தான்.
19. அவை எருசலேமில் ........... முன்னிலையில் படிக்கப்பட்டன.
20. நிலம் நல்ல விளைச்சலைத் தந்தது. சமவெளி மரங்கள் .................... கொடுத்தன.

## ஒற்றை யானை ....

11ஆம் பக்கத் தொடர்ச்சி

அம்மாவின் அறை மங்கல் வெளிச்சத்தில் திறந்து கிடந்தது. உள்ளே நுழைகையில் மூத்திரவாடை அடித்தது. கதிரையை அருகில் இழுத்து தலகாணியில் கையூன்றி அமர்ந்தாள்... அம்மா அழுதிருந்தது தலகாணி ஈரத்தில் தெரிந்தது. கண்ணீரும் பீழையும் சேர்ந்து ஒரு வகிடாய் மூக்குவரை உறைந்து கிடந்தது. கைகளால் தலையை வருடினாள். உறைந்துபோன பீழையைத் தடவி எடுத்தாள்... அம்மா முழித்துக்கொண்டாள். என்ன பிள்ள காத்தாடி இல்லாம நித்திரை போகலையோ... தேத்தண்ணி போடவா... என மெல்லிசாய் கேட்டபடி கண்களை மூடிக்கொண்டாள்.

மெல்லிய இரவுடையில் அம்மா வெறும் கூடாகத் தெரிந்தாள். கூன் உடம்பில் கழுத்து எழும்புகள் துருத்திக்கொண்டிருந்தன. மார்புகள் தொங்கி வயிற்றைத் தொட்டிருந்தன. மெல்லிய உடலிற்கு சம்மந்தமில்லாமல் வயிறு தனியாகச் சரிந்து கிடந்தது. மெல்ல வயிற்றைத் தடவிப்பார்த்தாள்...மிருதுவாக இருந்தாலும் பேறுகாலத் தழும்புகளை கையில் உணரமுடிந்தது. இந்த வயிற்றில்தானே எங்களைச் சுமந்தாள்.... எத்தனை ஆசைகளோடு வளர்த்திருப்பாள்....

“வேலை முடிஞ்சதும் எழும்பிப் போயிருவீர்... நானல்லா சுமக்கனும்...” என இரண்டாவது கருவைக் கலைத்துக் கொண்டது ஞாபகம் வந்தது. எழுந்து கண்ணாடியில் ஒருமுறை வயிற்றைப் பார்த்துக்கொண்டாள். அதுவும் வெளியில்தான் தள்ளிக் கிடந்தது.

படுக்கையறைக்குள் இருந்த மூத்திரவாளியை தூக்கிக்கொண்டு வெளியேறினாள். புழக்கடையில் பன்னாடைகளைப் போட்டு சுடுதண்ணி வைத்த அடையாளம் இருந்தது. எரிச்சல் பட்டாள்... “கியாஸ் அடுப்பு இருக்க இவ ஏன் புகையில கிடந்து சாகிறா... சலித்தபடி வீட்டிற்குள் வந்தாள்?”

அம்மா எழும்பியிருந்தாள்... அவளிடம் கதைத்து எதுவும் மாறிவிடப்போவதில்லை. தேத்தண்ணி போட்டாள். அம்மாவிடம் குடுக்கும்போது, “சுடுதண்ணி வைக்கிறன் ... குளிக்கிறீங்களா...?” என்றாள்.

“வேணாம் பிள்ளை... கஷ்டப்படாதை... என்றபடி நடுங்கும் கைகளுடன் தேத்தண்ணியை வேண்டிக்கொண்டாள்.

திருந்தாதி மணி அடித்தது. குருசு போட்டுக்கொண்டாள். பூசைச் சத்தம் மைக்செட்டில் தூரத்தில் கேட்டது. ஒரு கட்டு செபப்புத்தங்களை எடுத்துக்கொண்டுவந்து செபம் சொல்லத் தொடங்கினாள். அம்மாவின் பழக்கங்கள் எதுவும் மாறியிருக்கவில்லை. பெரியவளும் இங்கிருந்து போகும்வரை காலைச் செபம், மதியச் செபம், மூணு மணிச் செபம், இரவுச்செபம் என எல்லாம் சொன்னவள்தான்.

வெளிநாட்டிற்கு போனபிறகு காசிருந்தாக் காணும் என நினைத்துக்கொண்டாள். வருடத்திற்கு ஓரிரு முறை உல்லாசப்பிரயாணம்போல கோயிலுக்கு போறதுதான். கோயிலுக்கு போனால் பழைய ஆக்களை எல்லாம் பார்க்கலாம் என நினைத்துக்கொண்டாள்.

விடிந்திருந்தது.... டோஸ்டரில் இரண்டு பாண் துண்டுகளைப் போட்டபடியே அம்மாவிடம் சொன்னாள், “பெரியவனோ, சின்னவனோ, சவுந்தரியோ யாரு கேட்டாலும் எதையும் குடுக்க வேணாம். ஆனா... யாருக்கு எதைக் குடுக்கலாம் என யோசிச்சு எழுதிவையுங்க.. வீட்டை மட்டும் யாருக்கும் குடுக்காதீங்க.. பிறகு நானோ, பெரியவனோ நாட்டுக்கு வந்தா ரோட்டுலதான் நிக்கனும்... வீட்ட இதுல வச்சுக்கொண்டு ஹோட்டலில தங்கினா நல்லாவா இருக்கும்... கேட்டீங்களோ அம்மா... அப்பாட பேருக்குத்தான் மரியாதயில்லாம போயிரும். வீட்டை என்னட பேருல எழுதிவிடுங்கோ... யாரெண்டாலும் இருக்கட்டும். நாங்க வந்தாலும் தங்கலாம்..

எங்கட கடசிக் காலத்துக்கு நாங்க எப்படியும் இங்க தானம்மா வரனும்.. பிள்ளைகள் பாக்கும் எண்டு எதிர்பாக்கமுடியாது. வீடு கைமாறினா இந்தச் சந்ததி இருந்ததுக்கு அடையாளம் இருக்காதெண்டு தெரியும்தானே.....

லோயர்ட கதைச்சிட்டன்... டொக்குமெண்ட்ஸ் எல்லாம் சரி... பின்னேரமா போய் கையெழுத்து போட்டா சரி என்றபோது டெய்சியாச்சி ஜன்னலைத்தாண்டி எங்கோ பார்த்துக்கொண்டிருந்தாள்.

டெய்சியாச்சி பிறந்து சில நாட்களில் அப்பா இறந்திருந்தார். பதின்மூன்று வயதிருக்கும்போது அம்மாவும் இறந்துவிட திருமணம் முடித்த அக்காதான் வளர்த்தாள். வீட்டிற்கு பின்புறமிருந்த காணியை அக்கா தந்தபோது காடுமண்டிக்கிடந்தது. 18 வயதில் டெய்சியாச்சிக்கு ஆங்கில ஆசிரியையாக வேலை கிடைத்தது. முதல் மாத சம்பளமெடுத்து காடு திருத்தினாள். மாதச் சம்பளத்தை சேர்த்துக் கொஞ்சம் கொஞ்சமாக வீட்டைக் கட்டினாள். அத்திவாரம் முடித்தபோது மழை கொட்டியது. அக்காவுடைய மேட்டுவீடே தண்ணீருக்குள் மூழ்கிக்கிடந்தது. டெய்சியாச்சியின் அத்திவாரத்தைக் காணவேயில்லை. நிலம் காய்ந்தவுடன் அத்திவாரத்தை உயர்த்திக் கட்டினாள். ஆறடி உயரத்தில் அத்திவாரம் போட்டாள். வாசலில் நின்று பார்த்தால் நாலு ரோடும் தெரியும் உயரம். வீடு இரண்டு அறையும், குசினியும், விறாந்தையும் பின்னுக்கு கக்கூஸ் என கட்டிக்கொண்டாள். அந்த நாட்களை நினைத்தால் ஆச்சிக்கு இன்னும் அழுகை வரும்.

கண்களைத் துடைத்துக்கொண்டாள். பெரிய மகளுக்கு வீடு எழுதியாச்சு. மிச்சம் இருக்கிறதுகள சின்னவங்கள் ரெண்டு பேருக்கும் சரி பாதியா பிரிச்சா சரி. பேப்பரில் பேர் எழுதி விடுபட்ட பொருட்களில் செலோடேப் போட்டு ஒட்டினாள். பிரசர்பொக்ஸ்சில் பெரியமகனின் பெயரை ஒட்டினாள்.

நெஞ்சு கனப்பது போலிருந்தது. மூச்செடுக்கவும் முடியவில்லை. சுடுதண்ணி வைக்க நேரமில்லை.. குளித்தாள்.. தன் சின்ன சூட்கேசை எடுத்து கல்யாண சீலையை உடுத்திக்கொண்டாள். அதில் தன் கணவனின் வாசம் அடிப்பதைப் போலிருந்தது. முந்தானையை திரும்பத் திரும்ப மணந்து பார்த்தாள்... காலுறையும், கையுறையும் அணிந்து கண்ணாடியில் ஒருமுறை பார்த்தாள். மணக்கோலம் மனதில் நிழலாடியது. கையில் சுற்றிவிட ஒரு செபமாலை, வாசனைத் திரவியம் என அருகில் அருகில் எடுத்து வைத்துக்கொண்டு கட்டிலில் படுத்தாள்.

மார்போடு அணைத்திருந்த யானையைப் பார்த்தாள்... அதன் தலையைத் தடவினாள்.... கண்களில் இருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது... அதில் ஒட்டப்பட்டிருந்த துண்டில் எழுதிக்கிடந்தது “இன்றே அடக்கம் செய்யவும்”. (முற்றும்)

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 166

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:
சு. கிருஷாந்,
சிறுத்தோப்பு,
பேசாலை.

இரண்டாம் பரிசு:
T. பேணாட் குரூஸ்,
முத்தரிப்புத்துறை,
சிலாவத்துறை.

மூன்றாம் பரிசு:
எம். விவிலியா பெர்ணான்டோ,
தலைமன்னார் பியர்,
தலைமன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 74 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 61 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 166ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. ச. றூபன், உமனகரி, நானாட்டான்.
02. ப. மேரி சிறோஜன் பீரிஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
03. பே. கிறிஸ்ரீனா, பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.
04. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
05. யே. மாலா, இத்திக்கண்டல், அடம்பன்.
06. ஜீவரெட்ணம் பசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
07. அ. தீபா, நாச்சிக்குடா, நாவாந்துறை.
08. ஏ. தீப்பிக்கா, இலுப்பைக்கடவை, மன்னார்.
09. திருமதி. ரஜனி எட்வின், உவர்மலை, திருகோணமலை.
10. அ. நதியா, மருதமடு, முருங்கன்.
11. ம. டினுஷா மேரி, பெற்றா, மன்னார்.
12. ஞா. செலஸ்ரீன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
13. இ. மொபிஷா, புறநாட்டங்கல், வவுனியா.
14. நி. யாழிசன், செட்டிகுளம்.
15. J. துர்க்கா, சின்னப் பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
16. அ. அனுஷியன், களிமோட்டை, முருங்கன்.
17. பெ. றோமிக்கா, சிறுக்குளம், பறப்பாங்கண்டல்.
18. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
19. S. மெறோசன் குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
20. சா. டெய்சி லியோன், முத்தரிப்புத்துறை.
21. பி. ஜெனதா றோச், பள்ளிமுனை மேற்கு, மன்னார்.
22. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
23. அ. றொமேசா, கருங்கண்டல், அடம்பன்.
24. அ. ஜெய்சி கிறிஸ்ரா, ஜோசப்வாஸ், தோட்டவெளி.
25. ய. றொகான், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
26. இ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
27. லக்ஸ்மன் அல்வினா டயஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
28. எம். நேசன், பாப்பாமோட்டை, மன்னார்.
29. யே. ஜெயலூசியா, திருநாவற்குளம், வவுனியா.
30. அமலதாஸ் ஜெஸ்லின், திருக்கேதீஸ்வரம், மன்னார்.
31. ச. டிலைக்சனா, கள்ளிகட்டைக்காடு உயிலங்குளம்.
32. யே. ஜெனற் அனுஷியா, பெரியதம்பனை, வவுனியா.
33. அ. ருஷா, பாப்பாமோட்டை, மன்னார்.
34. M. மெற்றில்டா, செபநாயகபுரம், நெடுந்தீவு.
35. ம. சுதர்சனா, மருதமடு, சிலாவத்துறை.
36. யோ. ஆன். றுபினா, மாதா கிராமம், குஞ்சுக்குளம்.
37. யோ. ஆன் நிருஜன் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
38. ஏ. றொணிஷா, நாச்சிக்குடா, முழங்காவில்.
39. எம். ஷெரீனா ஷெகானி, இலுப்பைக்கடவை, மன்னார்.
40. அ. ஆன். சினேகா குரூஸ், சவேரியார் வீதி, தாழ்வுபாடு.
41. திருமதி. புஸ்பா சேவியர், உவர்மலை, திருகோணமலை.
42. யோ. ஆஷா, சிதம்பரபுரம், வவுனியா.
43. அ. அகஸ்ரீனா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
44. கி. கில்மா ஜெசானிக்கா, ஜோசப்வாஸ், தோட்டவெளி.
45. J. சுதர்சினி, பள்ளக்கமம், முருங்கன்.
46. என். சி. ஆன் யூலியானி றோச், பள்ளிமுனைகிழக்கு, மன்னார்.
47. ம. நிதர்சன், பெற்றா, மன்னார்.
48. K. கான்ஷிகன், கட்டையடம்பன், மடுறோட்.
49. அ. ஜெய மேரி டயஸ், சவேரியார் வீதி, தாழ்வுபாடு.
50. ச. றொக்சனா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782



## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

கட்டணம் :
கறுப்பு வெள்ளை 4,500/=,
கலர் 7,500/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத் நினைவுகள்

## 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 01 - 1930



உதிர்வ 13 - 06 - 2011

### திரு. பேதிரு வேதநாயகம்
(சூரியகட்டைக்காடு, நானாட்டான்)

ஆண்டுகள் ஐந்து கழிந்துவிட்டன.
உள்ளத்தில் உயிர்ப்பூக்களாய்
உங்கள் நினைவு நிறைந்துள்ளது.
உள்ளத்தால் உணர்வுகளால்
என்றும் எம்முடன் வாழ்கின்றீர்கள்
உங்களின் வார்த்தைகள்
இன்றும் எம் உள்ளத்தில்
பசுமரத்தாணிபோல பதிந்து
எம்மை வழிநடத்துகின்றது.
அப்பாவின் ஆன்மா
இறைவனின் கைகளில் மகிழ்ந்திருக்க
இறைவனை இரஞ்சுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்:
மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 - 08 - 1977



உதிர்வு 09 - 07 - 2014

### திரு. மரியநாயகம் கிறிஸ்ரி விஜய்
(கற்கிடந்தகுளம், முருங்கன்)

"என்னிடம் ஒப்படைக்கும் எவரையும்
நான் அழியவிடாமல் இறுதி நாளில்
உயிர்த்தெழச் செய்வேன்" (யோவான். 6:39)

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்துவிட்டது அப்பா!
எம் உள்ளத்தில் உங்களை நினைக்காத நாளே இல்லை.
எம் கண்களில் உம் அன்பு முகம்
தோன்றிக்கொண்டே இருக்கிறது!
எம் இதயக் குமுறலும் இன்னும் ஓயவில்லை
எப்போ நாம் உங்களைக் காண்போம் அப்பா
எம் ஏக்கங்களைச் சொல்லி அழ!
உங்கள் ஆன்மா ஆண்டவன் அடியில்
அன்னை மடியில் அனைத்து ஆன்மாக்களுடனும்
அமைதியாக இளைப்பாறவேண்டி மன்றாடுகின்றோம்.
எங்களுக்காகவும் இறைவனிடம் மன்றாடுங்கள்!

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 21 - 03 - 1979



உதிர்வு 04 - 06 - 2016

### திரு. அலோசியஸ் நிர்மலராஜன் (யூலி)
(பெரிய குஞ்சுக்குளம், மன்னார்)

நிசப்தத்தின் நரம்புதனில் நின் நினைவுகளை மீட்டிப்பார்க்கின்றேன்
அங்கே கண்களை எட்டிய அந்த ஒளி பொருந்திய சிரிப்புடன்
உன் சூரிய முகம் நிழலிட எனக்குள்ளே விடையேதுமற்ற
எண்ணற்ற வினாக்கள்!
இதற்காகத்தானா இத்தனை நேசம்
இதற்காகத்தானா இத்தனை ஆர்வம்
இதற்காகத்தானா இத்தனை துடிப்பு
தனக்கென்று இல்லாத பகிர்ந்திட்ட பண்பு
தம்பி நீ எனக்கு இன்னொரு தந்தை
தளர்வுற்று நான் சோர்ந்த போதெல்லாம்
தாங்கி நிறுத்திய பெரும் தூண்
இதற்காகத்தானா இத்தனை வேகமாய்
அத்தனையும் நிகழ்த்தினாய் - ஆருயிரே
ஆண்டவனை கரமெடுத்து சிரம் தாழ்த்தி
அமைதியாய் இளைப்பாற்றிட அழுகையுடன் வேண்டுகிறோம்

பிரிவால் நினைந்துருகும், அப்பா, அம்மா, மனைவி, பிள்ளைகள், சகோதரர் குடும்பம், உறவினர்கள், நண்பர்கள்.
- தகவல்: ஜீவா

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி. ஜெபநேசன் விக்ரோறியாள்
(மாந்தை மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் தலைவி,
ஓய்வுபெற்ற மாந்தை மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்)
(காத்தான்குளம், வட்டக்கண்டல்.)

மலர்வு : 14 - 12 - 1949
உதிர்வு : 21 - 07 - 2013

*"சீவியத்தில் உம்மை நேசித்தோம்.
மரணத்திலும் உம்மை மறவோம்"*

அன்போடு அள்ளித்தந்து
அரவணைத்தீர்கள்.
எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
ஆறுதல்தேடி சென்றுவிட்டீர்களே அம்மா!

வருடம் மூன்று ஆனதம்மா
ஆறவில்லை எம் காயம்.
அன்போடு எமைக்காத்து
அறிவுரைகள் பல கூறி
பண்போடு எம்மை உம்
கண்ணுக்குள் வைத்து வளர்த்து
பாரினிலே உயரவைத்தீர்.

கண்ணீர் நாம் வடிக்க
எங்கு அம்மா போய் மறைந்தீர்?
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும்
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

*உம் பிரிவால் துயருறும் :
கணவன், பிள்ளைகள்,
மருமகன். பேத்தி*

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 04 - 1928



உதிர்வு 21 - 07 - 2004

### திருமதி. பாவிலு சந்தாக்குட்டி
(முருங்கன் கமம், முருங்கன்)

எம் அன்புத் தெய்வமே அம்மா!
நேரங்கள் ஓடினாலும் காலங்கள் மாறினாலும்
எம்மைவிட்டு நீங்கவில்லையே உம் நினைவுகள்!
யாராலும் ஈடுகொடுக்க முடியவில்லையே உம் இழப்பினை!

பன்னிரெண்டு ஆண்டுகள் போனால் என்ன?
எத்தனை ஜென்மம் ஆனால் என்ன?
புதிய உறவுகள் வந்தால் என்ன?
பழைய உறவுகள் அணைத்தால் என்ன?
மாறுமோ உம் பாசம்? மறையுமோ எம் நேசம்?

கண்முன்னே விட்டுநீங்கி கனவாகிப் போனாலும்
மண்விட்டு மறைந்து நீங்கள் மாயமாகிப்போனாலும்
மனம்விட்டு மறையாமல்
எந்நாளும் இருப்பீர்கள் எம் மனங்களில்!

பிரிவால் நினைந்துருகும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார் உறவினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### பாவிலு ஆசீர்வாதம் (செல்லத்துரை )

மலர்வு : 20 - 10 - 1950
உதிர்வு : 18 - 06 - 2016

கண்முன் தோன்றிய கனிவான உறவென்று இன்று காணாமல் போனதெங்கே!
நீங்கள் காட்டிய அன்பு மொழியில் இன்று நாங்கள் கால்பதித்து நடக்கின்றோம்.
உங்கள் புன்சிரிப்பான பூமுகம் பூமியில் இனி வருமோ?
நாங்கள் தவிக்கின்ற தவிப்பை யார் அறிவார்?
காலம் ஏன் எம்முடன் உங்களைக் கனதூரம் கொண்டுசெல்லவில்லை?
பாதி வழியில் விட்டுச் சென்றதனால் பாவிகள் நாம் பரிதவித்துத் துடிக்கின்றோம்.
சோகம் நிலையில்லை, சொர்க்கம் உங்களுக்காக!

**பிரிவால் நினைந்துருகும்:** மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.
**கட்டணம்** : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

## பங்குச் செய்திகளை அனுப்பிவையுங்கள்

உங்கள் பங்கில் நடைபெறும் முக்கிய செய்திகளை எழுதி பங்குத்தந்தையின் அனுமதியுடன், புகைப்படங்களுடன் மின்னஞ்சல் ஊடாக மன்னாவுக்கு அனுப்பிவையுங்கள். எமது மின்னஞ்சல் முகவரி: nesanmnr@gmail.com - மன்னா நிர்வாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நீங்காத நினைவுகள்

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

### அருட்பணியாளர் விக்ரர் இம்மானுவேல் குரூஸ் அ.ம.தி



மண்ணில் : 22-09-1930
குருத்துவம் : 06-08-1957
விண்ணில் : 04-07-2013

வங்காலை மண்ணின் வளமுறு குருவே
வளமான குடும்பத்தின் தலைமகனானவரே
எங்கள் இதயங்களில் என்றும் இருப்பவரே
எளிமையை வாழ்வாய்க் கொண்டு வாழ்ந்தவரே

அமலமரித் தியாகியாய் அவனியில் பணிசெய்தீர்
அனைத்து உள்ளங்களை அன்பினால் வெற்றிகொண்டீர்
நிமலனாம் இயேசுபுகழ் இசையினால் உரைத்திட்டீர்
நித்தமும் மற்றவர்க்கு நேசக்கரம் கொடுத்திட்டீர்

நகைச்சுவை கலந்து நயமாகப் பேசுவீர்
நலமுறு பணிகளை நாற்றிசையும் செய்திட்டீர்
தகைசார் கற்பித்தல் பணியினைப் பல்லாண்டு
தகமையாய்ச் செய்து குருக்களை உருவாக்கினீர்.

ஆண்டுகள் மூன்று கடந்து சென்றதுவே
ஆண்டவர் அடியினில் அமைதியாய் இளைப்பாறும்
மீண்டும் உம்மை பேரின்ப வீட்டில்
மகிழ்ச்சியுடன் சந்திப்போம் அதுவரை காத்திருப்போம்.

- பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 08 1962 — உதிர்வு 09 06 2014



### திரு. செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் இன்பதாசன்

(சின்னக்கடை, மன்னார்)

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய். உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய்த் திகழ்வாய்" (எசாயா: 62: 3-4)

ஆண்டு இரண்டு உருண்டோடின, காலங்களும் மாறின!
ஆனால் உங்கள் நினைவுகளோ அலை அலையாய் எம்மை இன்றுவரை நெருடுகின்றன.
உங்கள் அணைப்பால் அகமகிழ்ந்தோம், உங்கள் பிரிவால் வெறுமையானோம்.
இல்லத்தில் இன்பமெல்லாம் இழந்தோம், உள்ளம் உடைந்து போனோம்.
பொறுமையின் சிகரமாய், இறைபக்தியில் தானியேலாய்த் திகழ்ந்தீர்கள்
நீங்கள் இல்லாத வாழ்வை நினைத்துப் பார்க்கமுடியவில்லையே?
அப்பா.... துயருடனே உம் நினைவுகளைப் பகிர்ந்து நிற்கின்றோம்.
ஈராண்டு நிறைவில்...... நீங்கள் எம்மால் மறக்கப்படுவதில்லை.....!
உங்கள் ஆன்மா அமைதிபெறச் செபிக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும், அன்பு மனைவி, பாசமகள், சகோதரர்கள், உற்றார் உறவினர்கள்.

## 45ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 02 03 1942 — உதிர்வு 16 05 2016



### திருமதி. யக்கோவு மொத்தம் பேதிராள் (ராசம்)

(உயிர்த்தராசன்குளம், முருங்கன்)

பாசத்தின் இருப்பிடமாய்
பாங்குடனே எம்மை
பாரினில் வழிநடத்தினீர்கள்.
ஒன்றுபட்டு ஒற்றுமையாய் வாழ
ஒருகூட்டுப் பறவைகள் எம்மை
ஒன்றுசேரக் காத்துவந்தீர்கள்.
இன்னலிலும் இயலாமையிலும்
இயன்றளவும் சகிப்புத் தன்மையோடு
இனிதே வாழ்ந்தீர்கள்.
உங்கள் ஆன்மா இறைவனின் பாதமதில்
என்றும் இளைப்பாறுவதாக!
எங்களுக்காக மன்றாடுங்கள்.

பிரிவால் நினைந்துருகும்,
குடும்பத்தினர்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 08 1955 — உதிர்வு 26 07 2015



### திரு. ம. ஜோச் குமார்


இளைப்பாறிய கிராம சேவையாளர்
(சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில்)

'அப்பா' விழிகளில் நீருமில்லை, வாழ்வினில் வசந்தமுமில்லை
சுமைகளைக்கூற எமக்கு வழிகளும் தெரியவில்லை
'எங்கள்' துன்பங்களைச் சுமக்க நீங்களுமில்லை
என்றும் எங்கள் வாழ்வோடும் உடலோடும்
கலந்த எம் உயிரேயப்பா...! என்றென்றும் ஆறாத்துயர் கொண்டு
பெருமூச்சு விடுகின்றோமப்பா.....!
கல்லறை மேட்டில்நின்று கண்ணீர் சொரிந்து நிற்கும் எம்மை
கருணையின் கண்களால் நோக்குங்களப்பா!
ஓராண்டும் பறந்ததப்பா, ஓயாத அலைகளுக்குள் நாங்களப்பா!
உடல்தான் மறைந்ததப்பா, அழியா ஆன்மாவோடு
வான்வீட்டினில் பிதாவின் மடியில் நீங்களப்பா!
எங்களுக்காக மன்றாடுங்கள்.

பிரிவால் நினைந்துருகும், குடும்பத்தார், உற்றார், உறவுகள், நண்பர்கள் அனைவரும்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 03 1938 — உதிர்வு 23 05 2016



### திரு. பறுனாந்து பிலிப்பு (பொன்னுக்கோன்)

(ஓய்வுபெற்ற ப.நோ.கூ. முகாமையாளர் - அடம்பன்) குழந்தையேசுபுரம், மன்னார்

பாசத்தின் பிறப்பிடமே, எம் குடும்பச் சுடர் ஒளியே
அப்பா என்றழைக்க நீங்களில்லையே
உம் உறவைவிட நிகரேதும் எமக்கில்லையே!
உம் நினைவுகள் என்றும் மனோரம்மியமானவையே.
எம் நெஞ்சைவிட்டகலா அன்பைச் சொரிந்திட்டீர்
உம் அன்பான பேச்சும் புன்னகைபூத்த வதனமும்
எம் இதயங்களை மெல்லக்கிள்ளிவிட்டுச்
செல்லுதையா இதமாக.
விண்ணகம் வாழும்நீர் விமலனை எமக்காய் இறைஞ்சிடும்.
எம்வாழ்வின் இறுதிவரை உம் நினைவுகள் தொடரும்!

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 07ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 10 1997 — உதிர்வு 14 07 2009



### செல்வி. குமார் ரினுஷா லக்ஷி

(எமில்நகர், மன்னார்)

அன்புச் செல்வமே லக்ஷி அம்மா!
மறையாது உன் நினைவு ஏழாண்டு கண்டாலும்
ஆறாத எம் துயர் தொடர்கதையாய் நின்றதே.
கலையான உன் வதனம் கண்காணாமல் போனாலும்
நிழலாக நீ தொடர உன்னை நினையாமலிருப்போமோ?
விதிசெய்த சதியாலே எமைவிட்டுப் பிரிந்தாலும்
நீவைத்த அன்பாலே நினைவெங்கும் உன்வாழ்வே
நதிபோல உன்வாழ்வு தொடராமல் போனாலும்
அலைபோல ஓயாது நீ வைத்த உறவாகும்.
பணிவென்னும் சித்தத்தை உனதாகக் கொண்டாலும்
கனிவான பேச்சாலே கவர்ந்திழுத்து வெல்வாயே.

பிரிவால் நினைந்துருகும்,
அம்மா, அப்பா, அண்ணா, அம்மம்மா
மற்றும் உன் அன்பு உறவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 05 1940 — உதிர்வு 13 06 2015



### திரு. அ. யோசப் சவுந்தரநாயகம்

(இறம்பைக்குளம், வவுனியா)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு, அவரது பார்வையில் மிகவும் மதிப்பிற்குரியது" (திருப்பாடல்: 116-15)

எம் உணர்வுகளோடு கலந்து
எம் நினைவில் வாழ்கின்ற எங்களின் அன்புத்தெய்வமே!
நீர் இருவிழி மூடிய துயர் சுமந்து ஒரு வருடம் ஓடினாலும்
நினைவுகளிலும், கனவுகளிலும் நீர் எம்மோடு
இருப்பதாகவே உணர்கின்றோம்.
நீங்கள் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
உங்களை இழந்தவலி எம் இதயம் துடிக்கும்வரை
எம் இறுதி மூச்சுவரை எம்முடன் இருக்கும்.

பிரிவால் நினைந்துருகும்,
குடும்பத்தினர், உற்றார் உறவினர், நண்பர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 04 1933 — உதிர்வு 15 07 2015



### திரு. அலஸ் அந்தோனி சுபபாக்கியம்

(பொன்தீவுகண்டல், முருங்கன்)

ஐயா! எம்மைவிட்டுப் பிரிந்து வருடம்ஒன்று ஆனாலும் - நீங்கள்
என்றென்றும் பிரியவில்லை எங்கள் நெஞ்சைவிட்டு அகலவில்லை
உத்தமராய் வாழ்ந்த நீங்கள் இந்த உலகுக்கு உதவினீர்கள்
பெற்றெடுத்த பிள்ளைகளுக்கும் பெருவாழ்வு அருளினீர்கள்
நீங்கள் விட்டுச்சென்ற விழுமியங்கள் கட்டிக்காத்த தர்மங்கள்
அத்தனையும் எம்மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது.
ஆண்டவருக்குத் தொண்டாற்றும் அருட்பணியில் சிறந்த நீங்கள்
நீதியையும் நியாயத்தையுமே தோள்களிலே சுமந்தீர்கள்
புன்னகை பூத்த உங்கள் அழகு வதனம் எங்கள்
நெஞ்சைவிட்டு நீங்காது, உங்கள் நினைவென்றும் அழியாது
உங்கள் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்,
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org